
முத்துலட்சுமி ராகவன்
ஆனந்த கீதம்...

# முத்துலட்சுமி ராகவன்

## எழுதிய

# ஆனந்த கீதம்



லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஆனந்த கீதம் |
| நூலாசிரியர் | : | முத்துலட்சுமி ராகவன் |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, நவம்பர் 2016 |
| தாள் | : | 11.6 Kg புக் பிரிண்ட் |
| நூல் அளவு | : | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 288 |
| விலை | : | ரூபாய் 65.00 |
| பதிப்பகம் | : | லட்சுமி பாலாஜி பதிப்பகம்<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |

# ஆசிரியர் கடிதம்

# மனம் விட்டுப் பேசலாமா...?

என் பிரியத்துக்குரிய வாசக. வாசகிகளே.!

அந்தக் காலத் திரைப்படங்களில் சில காட்சிகள் வரும். வலியவர்கள் எளியவர்களைத் துன்புறுத்தும் போது அவர்களைக் காக்க எங்கிருந்தோ ஒரு ஹிரோ வந்து குதிப்பார். எதிரிகளைப் பந்தாடி துன்பப் படுபவர்களைக் காப்பார். நிஜத்தில் அது சாத்தியமாகிறதா...?

இல்லை. நம் கண் முன்னால் நடக்கும் அக்கிரமங்களையும், அநியாயங்களையும் தட்டிக் கேட்காமல் நமக்கென்ன என்று ஒதுங்கிப் போவதுதான் மனித இயல்பாக மாறி விட்டது.

இன்னொன்றையும் அந்தக் காலத் திரைப்படங்களில் பார்த்திருக்கிறேன். துன்பப் படுபவர்கள் காவல்துறை அதிகாரிகளிடம் புகார் செய்வார்கள். அவர்கள் புகார் கொடுத்தவரை ரகசியமாக பாதுகாத்து. மாறுவேடத்தில் எதிரிகளிடையே நுழைந்து உண்மையைக் கண்டு பிடிப்பார்கள். இன்று அப்படியொரு நிலைமை இருக்கிறதா...?

இல்லை. எங்கேயெல்லாம் எதிரிகள் ஊடுறுவி இருக்கிறார்களோ என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. மாறு வேடத்தில் நமக்காக எதிரிகள் மத்தியில் ஊடுறுவி உண்மையைக் கண்டு பிடிப்பார்கள் என்று நம்புவது பேராசை.

மனித உரிமை ஆணையத்தைப் பற்றிப் பலத் திரைப்படங்களில் வருகிறது. அந்த ஆணையத்தால் தனியொரு மனிதரின் வாழ்வின் உரிமைகளைப் பாதுகாத்து விட முடியுமா...? தன்னலமில்லாத தார்மீக கோபத்தோடு அந்த ஆணையம் வெளிநாட்டு முதலாளியின் கைவசமிருக்கும் தொலைக்காட்சி சேனல்களின் அராஜகத்தையும். உள்நாட்டு முதலாளிகளின் கையிலிருக்கும் சேனல்களின் கொடூரத்தையும் தட்டிக் கேட்குமா...?

காகிதப் புலி என்பதைப் போல இவையெல்லாம் காகிதத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கும் காவல் கவசங்கள். உண்மையில் எந்தக் கவசமும் தனியொரு மனிதருக்கு நேர்ந்து கொண்டிருக்கும் கொடுமைக்கு நியாயம் வழங்கப் போவதில்லை.

இருநூறாவது கதையாக 20 பார்ட் கதையை எழுத வேண்டும் என்பது எனது குறிக்கோள்.

அதுவரைக்கும் நான் உயிரோடு இருக்க

வேண்டும். அவ்வளவு தான். வேறென்ன சொல்ல...?.

*- நட்புடன்*

*முத்துலட்சுமி ராகவன்*

# கவிதை சொல்லவா.....

# தன்னந் தனிமையிலே....

காத்திருக்கிறேன். ஒரு ரட்சகனுக்காக.
அவன் பொங்கும் கடலைப் போல இருப்பான்.
எரிமலையைப் போல சுட்டெரிப்பான்.
பூகம்பமாய் பிளப்பான்.
உலகம் புகழும் சேனல்களின்
முகத்திரையைக் கிழிப்பான்.
நடுநிலை எனச் சொல்லிக் கொள்ளும்
வாராந்திரியை வதைப்பான்.
மனித உரிமை மீறல்களை
உலகமறியச் செய்வான்.
ஒருநாள் அவன் வரும் திருநாள் வரும்.
அத்திருநாளின் வருகைக்காக.
யுகம் முடிந்தாலும் காத்திருப்பேன்.

*- முத்துலட்சுமி ராகவன்*

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*இப்படிக்கு*

*முத்துலட்சுமி ராகவன்*

# அத்தியாயம் 1

ஜன்னலைத் திறந்து விட்டான் ஆனந்தன். இதமான குளிர்காற்று முகத்தில் படிந்தது. கைலியை மடித்துக் கட்டியபடி வாசலுக்கு வந்தான். தெருவில் நின்றிருந்த பால்காரன் ஆனந்தனைக் கண்டதும் சைக்கிளில் கட்டியிருந்த கேனிலிருந்து பாலை அளந்து ஆனந்தன் நீட்டிய பாத்திரத்தில் ஊற்றிக் குடுத்தான். திரும்பியபோது அவளைப் பார்த்தான். பாவாடை தாவணியில் பெண்மை மிளிர. குளித்து முடித்து ஈரக் கூந்தலின் நுனியில் பின்னலிட்டு. முனையில் நீர் சொட்டக் குனிந்து வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தாள்.

ஆனந்தனாகப் பிறப்பெடுத்தற்கு அவள் வீட்டின் வாசலாகப் பிறப்பெடுத்திருக்கலாமே என்ற ஏக்கம் அவன் மனதில் வந்தது. தினமும் அவளைத் தரிசிக்கும் வாய்ப்புக் கேட்காமலே கிடைத்திருக்குமல்லவா...?

அவள். கீதா..! இருபது வயதில் இருக்கும் யௌவன சுந்தரி. அரசப்பட்டினம் என்று அழைக்கப்படும் அந்த ஊரின் சொப்பன சுந்தரி. அந்த சொப்பன சுந்தரியை தினந்தோறும் தரிசிக்கும் பாக்கியத்தை ஆனந்தன் பெற்றதே தனிக்கதை.

பெயரில் மட்டுமே பட்டினத்தைத் தாங்கியிருந்த அரசபட்டினம் கிராமத்துக்குரிய சகலவிதமான சாமுத்திரிகா லட்சணங்களுடன் இருந்தது. ஒரு அரசு மேல்நிலைப்பள்ளியும், அதனெதிரே இருந்த துணைத் தபால் நிலையமும் அதன் கிராமத்து முகவரியைச் சற்றே மாற்றி பட்டினத்தின் சாயலை கொண்டுவர முயன்று கொண்டிருந்தன.

சுற்று வட்டாரக் கிராமங்களில் உள்ள பிள்ளைகள் மேல்நிலைக் கல்விக்கு அரசபட்டினத்திற்குத்தான் வந்து போக வேண்டியிருந்தது. அதன் பொருட்டு பக்கத்து டவுனிலிருந்து டவுன் பஸ்கள். அரச பட்டினத்திற்கு விடப் பட்டிருந்தன.

அரசபட்டினத்தின் அரசு மேல்நிலைப் பள்ளியின் முன்னால் இருக்கும் திறந்த வெளியில்தான் டவுன் பஸ் வந்து நின்று போகும். அதனால் 'மந்தை' என்று அழைக்கப்பட்டு வந்த மைதானம் நாளடைவில் பெயர் மருவி "பஸ் ஸ்டாண்ட்' ஆக உரு மாறியது.

அனைத்து ஓட்டுனர்களும் நடத்துனர்களும் செய்வதைப் போல அரச பட்டினத்திற்கு வரும் டவுன் பஸ்ஸின் ஓட்டுனர்களும் நடத்துனர்களும் பஸ் நின்றவுடன் பயணிகளுக்கு முன்னால் முதல் ஆளாக குதித்து இறங்கி அங்கே இயங்கிக் கொண்டிருக்கும் டீக்கடையில் அடைக்கலமாவார்கள்.

அங்கு வந்து போகும் பஸ்களை நம்பி ஆரம்பிக்கப் பட்டிருக்கும் டீக்கடையின் சொந்தக்காரர் நன்றியுணர்வு மாறாமல் சூடான வடைகளையும் டீயையும் இலவசமாக கடை பரப்புவார்.

அவற்றைச் சுவைத்தபடி நாட்டு நடப்பைப் பேசிக் கொண்டிருந்து விட்டு பதினைந்து நிமிடங்களில் பஸ்ஸிற்குள் தாவி பயணிகள் ஏறினாலும், ஏறாவிட்டாலும் பஸ்ஸைக் கிளப்பி அரசப்பட்டினத்தின் எல்லையைக் கடந்து ஒடோடி விடுவார்கள்.

பஸ்ஸிற்காக காத்திருக்கும் பயணிகளை நம்பி ஆரம்பிக்கப் பட்ட டீக்கடையில் அரசுப் பள்ளியின் ஆசிரியர்களும் ஊழியர்களும் நிரந்தர வாடிக்கையாளர்கள். தபால் நிலையத்திற்கு வந்து போகிறவர்களும் அங்கே நின்று போவதுண்டு.

மொத்தத்தில் மொத்த ஊரின் ஆண்மக்களும் ஒட்டு மொத்த குத்தகைக்கு எடுத்து மீட்டிங் போட்டு அளவளாவும் டீக்கடை பெஞ்சுகளைக் கொண்ட அந்த டீக்கடைதான் அரச பட்டினத்தின் ஸ்டார் ஹோட்டல்.

தபால் அலுவலகம் இருக்கும் ஊரில் தங்கியிருக்கத் தோதான வீடு இருக்கிறதா என்று கவலை கொள்ளாமல் ஆனந்தனை அந்த ஊரின் சப் போஸ்ட் மாஸ்டராகத் தூக்கியடித்திருந்து தபால் துறை.!

அவனும் அந்த இளம் வயதிலேயே போஸ்ட் மாஸ்டராகப் போகிறோம் என்று புன்னகை மன்னனாக அந்த ஊரில் வலது

காலை எடுத்து வைத்து பஸ்ஸிலிருந்து இறங்கி அலுவலகத்தில் நுழைந்தான்.

“வாங்க சார். நீங்கதான் புதுசா வந்திருக்கிற போஸ்ட் மாஸ்டரா...?”

ஐயோ பாவம் என்று வரவேற்ற அன்பழகன்தான் அங்கே போஸ்ட் மேனாக உருமாறும் ஈடி பேக்கராம்.

“என்னாச்சு சார். உங்களுக்கு வேண்டப்பட்டவங்க யாரும் டிபார்ட்மெண்டில இல்லையா."

அவன் துக்கம் விசாரித்ததில் ஆனந்தனின் உற்சாகம் புஸ்வாணம் போல காணாமல் போய் விட்டது.

"ஏம்ப்பா. இப்படிக் கேக்கற...?”

“இல்ல. செல்வாக்கு இல்லாதவங்கதான் இந்த ஆபிசில வந்து மாட்டிக்குவாங்க. அதான் கேட்டேன். உட்காருங்க."

அவன் காட்டிய நாற்காலி புதிதாக இருந்தது. டேபிளும் அப்படியே. 'கர் கர்’ எனச் சப்தம் போட்டு எப்போது வேண்டுமானாலும் உன் தலையில் விழுந்து விடுவேன் என்று பயமுறுத்திய மின்விசிறிக்கும் அந்த டேபிள் நாற்காலிக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

“நமக்காக இந்த செட்டப் இல்ல சார். எல்லாம் இதுக்காகத்தான்.”

அன்பழகன் சுட்டிக் காட்டிய இடத்தில் அரசிளங்குமரியைப் போல ஆரோகணித்திருந்தது புத்தம் புதிய கம்யூட்டர்.

“அரச பட்டினத்துக்காரனுக இதில சினிமாத் தெரியுதான்னு எட்டிப் பார்க்கிறானுக. இங்கன போயி கம்யூட்டரு. ம்ஹூம். ஈடி பேக்கருக்கு விடிவைக் காணோம். இன்னமும் அத்தக்கூலியா, அன்னாடம் காய்ச்சியா நிக்கிறோம். கம்யூட்டருக மட்டும் கோடிக் கணக்கில ரூபாயை முழுங்கிக்கிட்டு இறக்குமதியாகுது. வரவர மெஷினுக்கு இருக்கிற மதிப்பு மனுசனுக்கு இல்லைன்னு ஆகிப் போச்சு சார்."

புழுதி படிந்த அரச பட்டினமும். புலம்பிக் கொண்டிருந்த அன்பழகனும் ஆனந்தனை அவசரப்பட்டு விட்டோமோ என்று யோசிக்க வைத்ததில் அவன் தலையைப் பிடித்தபடி சீட்டில் உட்கார்ந்தான்.

“இப்பவே கண்ணக் கட்டினா எப்புடி...? இன்னும் நிறய இருக்கே.”

வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றினான் அன்பழகன்.

இதுவே தாங்கலை. இன்னும் இருக்கா...?

அன்பழகனைப் பேச விடக் கூடாது என்று தீர்மானித்தான் ஆனந்தன்.

“எத்தனை பிரான்ச் ஆபிஸ் இருக்கு...?”

“ரெண்டு சார். பையெடுக்க வருவாங்க. நீங்க பத்து மணிக்குள்ள 'பி.ஒ பையைக் கட்டி ரெடியா வைச்சிரனும். இல்லேன்னா சிறுவூர்க்காரனும், பெருவூர்க்காரனும் குதியாய் குதிப்பானுக.”

'இவனுக்கு நான் சுப்பிரியரா. இல்லை எனக்கு இவன் சுப்பிரியரா...?

“தலைய வலிக்குதா...? இருங்க டீ வாங்கியாறேன். நம்மள நம்பி ஆரம்பிச்சிருக்கிற கடை. நாம ஓட வைச்சிருவோமுல்ல.”

அன்பழகனின் 'ஓட வைத்தல் டீக்கடையை ஓட வைப்பதா இல்லை டீக்கடை நடத்துபவனை ஓட வைப்பதா என்ற குழப்பத்தில் ஆழ்ந்தான் ஆனந்தன்.

அன்பழகன் டீ வாங்கப் போய் விட்டதில் அலுவலகமே அமைதிப் பூங்காவாக உருமாறினது. ஆசுவாசமடைய இப்படி ஒரு வழி இருக்கிறது என்பதை கண்டு கொண்டான் ஆனந்தன். திரும்பி வர நேரமெடுத்துக் கொண்ட அன்பழகன்.

“போனா சட்டு புட்டுன்னு திரும்பி வர முடியுதா...? பேச்சில புடிச்சுக்கிறானுக..” என்று அலுத்தபடி டீக் கிளாஸை வைத்தான்.

இவனைப் பேச்சில் பிடிக்கவும் ஆள் இருக்கிறதா...? கம்யூட்டரை உயிர்ப்பித்து முதல் நாளின் வேலை விவரங்களை பார்வையிட ஆரம்பித்த ஆனந்தனை உன்னிப்பாக பார்த்து வைத்த அன்பழகன்.

‘‘இதுவரைக்கும் இந்த ஆபிசுக்கு இளந்தாரி போஸ்ட் மாஸ்டருக வந்ததேயில்ல. எல்லாம் ரிட்டயராகிற வயசில இருக்கிறவங்கதான் வந்து போவாங்க. முதல் ஆளா நீங்க சிக்கியிருக்கீங்க போல.." என்றான்.

அடுத்த பஸ்ஸைப் பிடித்து அரச பட்டினத்தை விட்டு ஒடிவிட வேண்டும் என்ற ஆசையை ஆனந்தனின் மனதில் விதைப்பதில் அவன் முனைப்பாக இருந்ததில் வெறுத்துப்போன ஆனந்தன் நிமிர்ந்து அன்பழகனை தீர்க்கமாக ஒர் பார்வை பார்த்து வைத்தான்.

‘‘என்ன சார்...?’’

"நீ எப்படிக் கதை சொன்னாலும் அரச பட்டினத்தை விட்டு நான் நகருகிறதா இல்லை. அதனால இங்கே வாடகைக்கு வீடு கிடைக்குமான்னு பார்த்துச் சொல்லு.’’

‘‘வாடகைக்கு வீடா...? இந்த ஊரிலா...? மனுசன் குடியிருப்பானா சார் இந்த ஊரில...?’’

‘‘நான் குடியிருப்பேன். என்னைப் பார்த்தா உனக்கு மனுசனாத் தெரியலையா...?

"ஐயோ சார். நீங்க தெய்வம்.’’

‘‘அஃது. இப்படியே மெயின்டெயின் பண்ணு. அதான் உனக்கு நல்லது. முதல்ல இந்த தெய்வம் குடியிருக்க ஒரு கோவிலைத் தேடிக் கொடு.’’

“உங்களுக்கேத்ததைப் போல ஒரேயொரு வீடுதான் இருந்துச்சு. அதிலயும் நம்ம சுகுமாறன் வாத்தியார் குடியிருக்காரே. என்ன செய்யலாம்...?”

அன்பழகன் நெற்றியை ஒற்றை விரலால் தட்டி யோசிக்க ஆரம்பித்த போது அவன் சொன்ன சுகுமாறனே போஸ்ட் ஆபிசிற்கு வந்து விட்டான்.

“என்ன அன்பு. எனக்கு முக்கியமா ஒரு ஸ்பீடு போஸ்ட் வரவேண்டியிருக்கு. இன்னைக்கு மெயிலில் வர்திருக்குதா...?” என்று கேட்டான்.

# அத்தியாயம் 2

**கே**ள்வி கேட்ட ஆசிரியரை கித்தாய்ப்பாக பார்த்து வைத்தான் அன்பழகன். முகத்தை தீவிரமாக வைத்துக் கொண்டான். அவன் காட்டிய தோரணை தமிழ்நாட்டின் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலே அவன்தான் என்பதைப் போல இருந்தது.

‘‘அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி சார்...? இப்பத்தான் டவுன்பஸ் வந்துட்டுப் போச்சு. ஐயாவையும் மெயிலையும் அந்தப் பஸ்தான் இறக்கி விட்டுச்சு. பிரிச்சுப் போடனுமில்ல...?’’

அன்பழகனின் அலட்டலைத் தாள மாட்டாத ஆனந்தன் நிமிர்ந்து ஒர் பார்வை பார்த்தான்.

அவனது புருவங்களின் சுருக்கங்கள் அன்பழகன் மெயில் பையைப் பிரித்துப் போட உத்தேசித்திருக்கிறானா இல்லை அந்த அலுவலகத்தில் அடியெடுத்து வைத்து விட்ட தவறுக்காக ஆனந்தனைப் பிரித்துப் போட உத்தேசித்திருக்கிறானா என்று வினவின.

‘‘என்ன அன்பழகன்...? எதைப் பிரிச்சுப் போடப் போற...?’’ ஆனந்தன் நிதானமாக கேட்டான்.

‘‘மெயில்பையைத்தான் பிரிச்சுப் போடனும் சார்.’’

‘‘சொல்றதைத் தெளிவாச் சொல்லு. பேசறதைப் புரியறதைப் போலப் பேசிப் பழகு. இல்லேன்னா நான் உன்னைப் பிரிச்சுப் போட வேண்டியிருக்கும். அன்டர்ஸ்டாண்ட்...?"

"அன்டர்ஸ்டாண்டு சார்.’’

‘‘மெயில் பேக் வந்து இவ்வளவு நேரமாகுது. அதைப் பிரிக்காம டீக்கடைப் பெஞ்சுல உக்காந்து வெட்டியா அரட்டையடிச்சுட்டு வர்ற...?"

"ஹி.. ஹி.."

‘‘சிரிக்காதே. சகிக்கலை. பத்து மணிக்குள்ள பி.ஓ. பேக்கைக் கட்டியாகனும்னு நீதான சொன்ன...? மெயில் இல்லாம பையைக் கட்ட முடியுமா...? அந்த ஊருக்காரங்களுக்கு வர்ற கடிதங்களை அடுத்த நாள்தான் படிக்கனும்னு நீ புதுசா ரூல் போட்டு வைச்சிருக்கயா...?’’

ஆனந்தன் விளாசிய விளாசலில் அன்பழகன் தாவிப் பாய்ந்து பையைப் பிரித்ததை சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்தான் சுகுமாறன். அதுநாள்வரை அந்த போஸ்ட் ஆபிசிற்குத் தான்தான் போஸ்ட் மாஸ்டர் போல பிலிம் காட்டிக் கொண்டிருந்த அன்பழகன் சுகுமாறனின் சுவராஸ்யமான பார்வையில் தன்னுடைய இமேஜ் சரிந்து விட்டதை உணர்ந்து கொண்டவனாக மனம் புழுங்கினான்.

அந்த இனிய பொழுதிலா பக்கத்திலிருந்து விசேஷ வீட்டின் ஒலிபெருக்கியில் பாடல் ஒலிக்க வேண்டும்...?

“போட்டுத் தாக்கு.

போட்டுத் தாக்கு.”

தாக்கு தாக்கென்று தாக்கிய பாடலில் சுகுமாறன் கடகடவென சிரித்து விட்டான்.

“அதெப்படி அன்பு. பக்கத்து வீட்டுல உனக்கேத்த சிச்சுவேசன் சாங்கைப் போட்டுத் தாக்கறாங்க...?”

சுகுமாறனின் கேள்வியில் அவனை முறைத்துப் பார்த்தான் அன்பழகன். பேச முடியவில்லை.

ஆனந்தன்தான் வாயைத் திறக்க விடாமல் வகையாய் போட்டுத்தாக்குகிறானே.

அதுவரை அந்தத் தபால்நிலையம் ஒய்வு பெறப் போகும் போஸ்ட் மாஸ்டர்கள் வந்து தூங்கிப் போகும் சரணாலயமாக இருந்தது.

ரிட்டயர்மெண்ட் ஸ்டேஜில் உள்ளவர்கள் அன்பழகனைச் சார்ந்தே இருந்ததால் அனைத்து அதிகாரங்களையும் அவன் கையில் எடுத்துக் கொள்வதை கண்டு கொள்ள மாட்டார்கள்.

அவனும் "நான் ராஜா." என்று மன்னாதி மன்னனாக அந்தத் துணை தபால் நிலையத்தில் வானளாவிய அதிகாரத்துடன் வலம் வந்தான். இப்படியொரு இளந்தாரி சப் போஸ்ட் மாஸ்டர் வந்து

அவனுடைய வானளாவி அதிகாரத்திற்கு ஆப்பு வைப்பான் என்று கனவிலும் அவன் நினைத்ததில்லை.

இந்த அரசப் பட்டினத்துக்கு வரனும்னு எந்த இளந்தாரி சப் போஸ்ட் மாஸ்டர் ஆசைப்படப் போறான்...?

இந்த நினைவில் மண் விழுந்து விட்டத்துக்கத்துடன் அவன் மெயில் பையைப் பிரித்துக் கொட்டிக் கவிழ்த்தான். அக்கவுண்ட் பேக்கை ஆனந்தனின் டேபிளில் வைத்தான். ஸ்பீடு, ரெஜிஸ்டர் பைகளை வெட்டி பிரிக்க ஆரம்பித்தான்.

அன்பழகனின் அதி வேகத்தை புதிதாகப் பார்ப்பதைப் போல பார்த்த சுகுமாறன்.

"உனக்கு இத்தனை விரசா வேலை செய்யக் கூடத் தெரியுமா அன்பு...?'' என்று வியந்து போனான்.

"யோவ். சும்மாயிருய்யா. அன்பழகன் வெட்டும் பார்வையோடு நட்பில்லாமல் சுகுமாறனை 'யார் நீ...?' என்று அறிமுகமற்ற பார்வை பார்த்தபடி கடமையில் கண்ணாகினான்.

"பரவாயில்லை சார். வந்த முதல் நாளிலேயே நம்ம அன்பழகனை டிரில் வாங்கிட்டிங்க...?''

புதிதாக வந்திருக்கும் சப் போஸ்ட் மாஸ்டரிடம் சிநேகிதமாகிவிடும் உத்தேசத்துடன் கை நீட்டிய சுகுமாறன் ஆனந்தனின் முகத்தை நேருக்கு நேராக பார்த்ததும் ஆனந்தமாகிப் போனாவனாக.

‘‘டேய். ஆனந்தா..’’ என்று கூவினான்.

வந்திருப்பது யார் என்று கூடக் கவனிக்காமல் அன்பழகனை அன்பாகக் கவனிப்பதில் மும்முரமாக இருந்த ஆனந்தன் சுகுமாறனின் கூவலில் அவன் முகத்தை உன்னிப்பாக பார்த்து விட்டு.

"சுகு..! நீயாடா...?" என்று அவன் கைகளுக்குள் ஐக்கியமானான்.

கட்டித் தழுவிய நண்பர்களைக் காண்டாக பார்த்த அன்பழகன்.

'இது வேறயா...?’ என்று மனதுக்குள் சலித்துக் கொண்டான்.

விறைத்துக் கொண்டிருக்கும் விறைப்பான சப் போஸ்ட் மாஸ்டருக்கு அரச பட்டினத்தையும் அங்குள்ள ஆள்களையும் அறிமுகப்படுத்தினால்தானே ஆனந்தனும் கொஞ்சம் மலையிறங்கி அன்பழகனுடன் சமாதானமாகப் போவான்...?

அதற்கும் வழியில்லாமல் அந்த ஊரிலேயே குடியிருக்கும் இளந்தாரி வாத்தியார் ஆனந்தனை அரவணைத்துக் கொண்டால் அன்பழகன் பாவம் என்னதான் செய்வான்...?

‘‘என்னடா மச்சான். இந்த ஊரில் வந்து மாட்டியிருக்க...?’’

சுகுமாறன் துக்கம் விசாரித்ததில் நொந்து போனான் ஆனந்தன்.

"நீயும் வாய் வைச்சிட்டியா...?

“எனக்கு முன்னாலே யாருடா வாய் வைச்சது...?

“எல்லாம் என்னோட அன்பான அழகான அஸிஸ்டெண்டு அன்பழகன்தான்.”

'அஸிஸ்டெண்ட்.' என்ற வார்த்தையில் முகம் மலர்ந்து போன அன்பழகன்.

“சார்.” என்று வாயெல்லாம் பல்லானான்.

“பாருடா. நம்ம அன்புக்கு அஸிஸ்டெண்டா பிரமோசன் கிடைச்சிருச்சா...?”

சுவாதீனமாக அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான் சுகுமாறன்.

“பார்த்து சார். அதோட கால் ஒன்னு ஆடிக்கிட்டு இருக்கு..” எச்சரித்தான் அன்பழகன். “இந்த ஆபிசில ஆடிப் போயிருக்கிற அத்தனை உருப்படிகளைப் பத்தின அத்தனை விவரமும் அன்பழகனுக்கு அத்துபடி..” சிரித்தான் சுகுமாறன்.

"அத்துபடியாகி என்ன பிரயோசனம்..! இதுகளையெல்லாம் மாத்தியிருந்தா பாராட்டியிருக்கலாம்." என்றான் ஆனந்தன்.

“மாத்தினா போஸ்ட் ஆபிசுக்கான புராதனமான அழகே மாறிப் போயிரும்ன்னு ஃபீல் பண்ணியிருப்பாப்பில.”

சுகுமாறனின் சிரிப்பில் கலந்து கொள்ளாமல் லெட்டர் பேடை எடுத்து ஏதோ எழுதி கவரில் போட்டு ஒட்டி வைத்தான் ஆனந்தன்.

“என்னப்பா செய்கிற...?”

“இங்கேயிருக்கிற பழைய பர்னிச்சர்களுக்குப் பதிலா புது பர்னிச்சர்களை அனுப்பி வைக்கச் சொல்லி டிவிசனல் ஆபிசுக்கு லெட்டர் எழுதியிருக்கேன்.”

“எழுதினா அனுப்பி வைச்சுருவாங்களா...?

"ம்ம்ம். இதுக்குன்னே ஸ்டாக் கிளார்க் இருக்காங்க.”

“இதையேன் இத்தனை நாளா மத்த சப் போஸ்ட் மாஸ்டருக செய்யலை...?

“அதை அவங்ககிட்டத்தான் கேக்கனும்.”

"ஊஹீம். அன்பழகன்கிட்டதான் கேக்கனும். ஏன்னா. இதுநாள் வரைக்கும் இங்கே ஆல் இன் ஆல் அழகுராஜாவா நம்ம அன்பழகனோட ஆட்சிதான் கோலோச்சியிருந்தது. வந்தவர்கள்ளாம் டம்மி. அன்பழகன் சொல்கிறத செய்துட்டுப் போயிருவாங்க.”

“வேற என்ன செய்ய முடியும் சுகுமாரா...? வொர்க் லோடு அதிகம். வெளியே இருந்து பாக்கிறவங்க எளிசா போஸ்ட் ஆபிசில என்ன வேலையிருக்குன்னு சொல்லிட்டுப் போயிருவாங்க. உள்ளே வந்து ஒருநாள் உட்கார்ந்து பார்த்தாத்

தெரியும். இது மென்னியைப் பிடிக்கிற வேலைன்னு. புராதனமான ஆபிஸ்தான் இது. கட்டிடத்தில மட்டுமில்லை. ரூல்ஸ் அண்ட் ரெகுலேசனிலும் அப்படித்தான். வேலை நேரத்தில சீட்டை விட்டு எழுந்திருக்கக் கூடாது."

‘‘பாருடா. உன் டிபார்ட்மெண்டுக்கு பாராட்டுப் பத்திரம் கொடுக்கிற. பரவாயில்லை. எங்கே தங்கியிருக்கிற...?’’

ஆனந்தன் வாயைத் திறப்பதற்குள் அன்பழகன் முந்திக் கொண்டான்.

‘‘எங்கே தங்கறது...? இப்பத்தான் பஸ்ஸை விட்டு இறங்கி பெட்டி படுக்கையோட ஆபிசுக்குள்ள வந்திருக்காரு. இப்போதைக்கு போஸ்ட் ஆபிசிலதான் ஜாகை. பக்கத்து டீக்கடையில சாப்பாடுக்கு சொல்லி வைக்கனும். இந்த ஊருக்குள்ள வீடு பாத்துத் தரச் சொன்னா நான் எங்கே போறது...? சார் தங்கறதைப் போல ஒரேயொரு வீடுதான் இருந்துச்சு. அதில நீங்க குடி வந்திட்டிங்க. புதுசா வேற யாராவது வசதியா வீடு கட்டித்தந்தா குடி போகலாம். அதுவரைக்கும் போஸ்ட் ஆபிசில டேரா போட வேண்டியதுதான்.’’

‘‘இங்கேயா...?’’ ஒற்றை ரூமுடன் இருந்த அந்தச் சின்னக் கட்டிடத்தைச் சுற்றிச் சுழன்றது சுகுமாறனின் பார்வை. அவனது புருவங்கள் மேலேறின.

# அத்தியாயம் 3

**ப**த்துக்குப் பத்தில் இருந்த அந்த அறையின் ஜன்னல் கவுண்டராக மாற்றப் பட்டிருந்தது. வெளி வராண்டா பொதுமக்கள் வந்து போகும் இடமாகியிருந்ததில் அங்கே ஒரு பெஞ்ச் போடப்பட்டிருந்தது. ஜன்னலை ஒட்டிப் போடப்பட்டிருந்த பெரிய டேபிளில் கம்யூட்டர் ஒயிலாக அமர்ந்திருக்க அதன் பக்கத்தில் எடை பார்க்கும் மெஷின் பொருத்தப்பட்டிருந்தது.

அறையின் மூலையில் சுவரோடு சுவராக ஒட்டிப் போடப் பட்டிருந்த நீண்ட டேபிளில் கரியநிற மை வழியும் வட்ட வடிவமான பேடு இருந்தது. தபால் நிலையத்தின் தனி அடையாளம் அது.. அதையொட்டித்தான் டேட் ஸ்டாம்பு முதலான அணைத்து முத்திரைகளும் இருந்தன. சுத்தியலைப் போல நீண்ட மரக் கைப்பிடியுடன் முனையில் வட்டம், முக்கோனம் என்ற பலவிதமான இரும்பு வடிவங்களுடன் இருக்கும் அந்த முத்திரைகளின் பதிவுகள் எந்த நீதிமன்றத்திலும் அசைக்க முடியாத சாட்சிகளாக நிமிர்ந்து நிற்கும் வல்லமை வாய்ந்தவை.

தபால்துறையில் அனுப்பப் படும் தபால்களும் அவற்றின் முத்திரைகளும்தான் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட சாட்சியங்களாக நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

தபால் முத்திரைகளைப் பதிப்பது தனிக்கலை.!

சுத்தியலைப் பிடிப்பதைப் போல அதன் மரப் பகுதியில் கையைப் பதித்து முத்திரை பதித்தால் நேரம், ஊர், தேதி, பின்கோடு போன்ற எந்த விவரமும் தெளிவாகப் பதியாது. மரப்பகுதியின் மேல் முனையில் ஆள்காட்டி விரலின் மையப் பகுதியை அழுத்திப் பதிய வைத்து மற்ற நான்கு விரல்களையும் மரப்பகுதியைச் சுற்றிப் படிய வைத்து இறுக்கிப் பிடித்து ஓங்கி பதிக்க வேண்டும். இதை அதி விரைவாக செய்ய தேர்ந்த பயிற்சி பெற்ற தபால்துறையினரால்தான் முடியும். அங்குள்ள பணியாளர்கள் அதிவிரைவில் தெளிவான முத்திரை பதிப்பதில் வல்லுனர்கள். அப்படிப் பதிக்கும் போது தபால் முத்திரைக்கான கருப்பு மை கைகளிலும் உடைகளிலும் படியாதபடி லாவகமாக கையாள வேண்டும். தபால்துறையின் கருப்பு மை எளிதில் அழியாது. அவர்களுக்கு அந்த லாவகம் தெரியும். என்ன ஒன்று. முத்திரை பதிப்பதில் இத்துணை நுணுக்கமான அணுகுமுறைகள் இருக்கின்றன என்பது முத்திரை பதிப்பவர்களுக்கும் தெரியாது. மேலதிகாரிகளுக்கும் தெரியாது.

மடிப்புக் கலையாத நேர்த்தியான உடையுடன் வரும் மேலதிகாரிகளின் வாயிலிருந்து வரும் ஒரு சிறு பாராட்டு போதும். தபால் துறையின் கடைநிலை ஊழியர்கள் மகிழ்ந்து பரவசப் பட்டுப் போக. ஆனால் அந்தப் பரவசம் அவர்களுக்குக்

கிடைத்ததேயில்லை. அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அதிகார மேல்மட்டம் கடைநிலை ஊழியரைப் பற்றி கண நேரம்கூட நினைப்பதில்லை என்பதே நிதர்சனமான உண்மை. அவர்களின் சிந்தனைகளெல்லாம் துறையின் வரவு செலவு கணக்கிலேயே மையமிட்டுக் கொண்டிருக்கும்.

அரச பட்டினத்தின் தபால் நிலையம் துணைதபால் நிலையம் என்ற பெயரைப் பெற்றிருந்தாலும் ஒற்றை அறைக் கட்டிடத்தில்தான் இயங்கிக் கொண்டிருந்தது. சிக்கனத்திற்கு பெயர் பெற்றது தபால்துறை..!

ஒற்றை அறையில் தபால் நிலையம் இயங்கிக் கொண்டிருக்க ஒட்டியிருந்த சின்ன அறையின் அலமாரிகளில் அலுவலகத்திற்குத் தேவையான அனைத்துப் ஃபார்ம்களும் அடுக்கப் பட்டிருந்தன. மூலையில் வரிசையாக கோணிப்பை. பின்பக்கம் குளியலறை.

‘‘எங்க ஸ்கூலோட ஃபைல் ரூம்கூட இதைவிட பெரிசா இருக்கும்டா.’’

சுகுமாறன் கேள்வியில் சுருக்கென்று கோபம் வந்து விட்டதில்.

"உன்னுடையது ஸ்கூல். என்னுடையது ஆபிஸ்.’’ என்று எரிந்து விழுந்தான் ஆனந்தன்.

"ஆமாண்டா. எனக்கு ஸ்கூலைப் பட்டாப் போட்டுக் கொடுத்திருக்கு. உனக்கு ஆபிசைப் பட்டாப் போட்டுக் கொடுத்திருக்கு. விடுவியா.’’

வெண்புறாவை பறக்க விட்டு சமாதானமானான் சுகுமாறன்.

'அஃது.' என்ற முறைப்புடன் சுகுமாறனுக்கான ஸ்பீடு போஸ்டை தேட ஆரம்பித்தான் ஆனந்தன்.

'ஆஹா. வாத்தியாருக்கும் வைச்சான்டா ஆப்பு.'

தான் பெற்ற துன்பத்தை சுகுமாறனும் பெற்று விட்டதில் இன்பமானான் அன்பழகன்.

“இதில் ஒரு சைன் போட்டுட்டு ஸ்பீடு போஸ்டை எடுத்துக்கிட்டுப் போ.”

கவுண்டர் டெலிவரி ஃபார்மை நீட்டினான் ஆனந்தன். அதில் கையெழுத்தைப் போட்டபடி.

“ஒன்னு செய்யலாமா...?” என்றான் சுகுமாறன்.

"வாத்தியாரில்ல. அதான ஆனா. ஆவனணாவை ஆரம்பிக்கிறதைப் போல ஒன்னில இருந்து ஆரம்பிக்கிறாரு.” வியாக்கினம் பேசினான் அன்பழகன்.

“இம்புட்டுத் தாக்கினாலும் நீ அடங்கவே இல்லை பார்த்தியா.”

சுகுமாறனின் நையாண்டியில் ஆனந்தன் நிமிர்ந்து பார்க்க.

'ஆத்தி.' என்று அரண்டு போனான் அன்பழகன். இந்த வாத்தி கிளப்பி விடறதிலேயே குறியா இருக்கானே. இந்தாளு மறந்தாலும் இவன் உசுப்பி விடாம இருக்க மாட்டான் போல இருக்கே. புதுசா வந்திருக்கிற இளந்தாரி எஸ்.பி.எம் போட்டுத் தாக்கறதில

மன்னனாச்சே. திரும்பவும் தாக்க ஆரம்பிச்சிட்டா என்கதி என்னாகும்...?’

ஒடிப் போய் விடலாமா என்று யோசித்தான் அன்பழகன்.

'போஸ்ட் ஆபிஸ்காரரு.’ என்ற கெத்தோடு உலா வரும் உள்ளூர்வாசியான அவன் ஒடி ஒளிய இடமில்லை என்பதால் அந்த யோசனையை கைவிட்டு டேட் ஸ்டாம்பைக் கைப்பற்றி வந்திருக்கும் தபால்களுக்கு அதி விரைவில் ஸ்டாம்படிப்பது போல ஆனந்தனுக்கு புறமுதுகு காட்டி நின்று விட்டான்.

‘‘பிழைச்சுப் போகட்டும். விடுடா ஆனந்தா.’’

சுகுமாறன் சிபாரிசு செய்து அன்பழகனின் வயிற்றில் டீ வார்த்தான்.

"அப்படிங்கறே...? அதுவும் சரிதான். இன்னைக்கு இதுபோதும். நீ சொல்ல வந்த ஒன்னைச் சொல்லு.’’

‘‘இந்த ஊரில எங்க சொந்தக்காரங்க இருக்காங்க. அவங்கதான் ஊர்ப் பண்ணையாரு குடும்பம். பெரிய வீட்டுக்காரங்க. வசதி வாய்ப்பா வீடு சுகுமாறனின் கண்களின் பிரகாசத்திற்கான காரணம் என்னவென்று அப்போது தெரியவில்லை. ஆனந்தனுக்கு. பின்னால் தெரிந்த பொழுதில் அவன் மனதில் இனம் புரியாத வேதனை மண்டியது.

"மாமா வீட்டுக்கு எதிரேயிருக்கிற புது வீட்டிலதான் நான் இருக்கேன். வீடு பெரிசு. கீழே ரெண்டு ரூம். மாடியில ரெண்டு

ரூம்ன்னு விசாலமா இருக்கும். என்னதான் ஸ்கூல் நேரம் போக மீதி நேரத்தில மாமா வீட்டில பேசிக்கிட்டு இருந்தாலும் தூங்கறதுக்கு இந்த வீட்டுக்குத்தானே வந்தாகனும்...?''

சுகுமாறன் விட்ட அனல் பெருமூச்சில் புருவங்களை உயர்த்தினான் ஆனந்தன். அதில் அவனுக்கென்ன பெருந்துயரம் என்று ஆனந்தனுக்கு விளங்கவில்லை.

டேட் ஸ்டாம்பை அடித்துக் கொண்டிருந்த அன்பழகனின் இதழ்களில் நெளிந்த மர்மப் புன்னகைக்கும் அர்த்தம் தெரியவில்லை.

''அதையேண்டா என்கிட்டச் சொல்ற...? வேணும்னா இங்கே வந்து என்கூடத் தூங்கேன். எனக்கும் துணையா இருக்கும்.''

அக்கறையான ஆனந்தனின் யோசனையில் அன்பழகன் சிரித்து வைத்தான். சுகுமாறன் முறைத்து வைத்தான்.

"ஐயோ பாவம்ன்னு உன்னை ஆபிசில தங்காம தப்பிக்க வைக்கப் பார்த்தா நீ என்னையுமா இதில இழுத்து விடப் பாக்கிற...?''

''என்னதாண்டா சொல்ல வர்ற...?''

"நீயும் என்கூட வந்து தங்கிக்கலாம்ன்னு சொல்ல வர்றேன். மெஜாரிட்டி டைம் நான் என்னோட மாமா வீட்டிலதான் இருப்பேன். தூங்க மட்டும்தான் வீட்டுக்கு வருவேன். நீ வந்தேன்னா வீட்டுக்கு காவலாச்சு."

சுகுமாறன் அழைத்த லட்சணத்தில் ஆனந்தன் நொந்துபோய் விட்டான். அன்பழகனின் கள்ளச்சிரிப்பில் போடா நீயும் வேண்டாம் உன் வீடும் வேண்டாம் என்று சுகுமாறனின் கோரிக்கையை மறுத்து விடலாமென்ற வேகம் அவனுக்குள் எழத்தான் செய்தது. அரசரில்லாத அரசபட்டினத்தில் சுகுமாறன் குடியிருக்கும் வீட்டை விட்டால் வேறு வசதியான வீடு அகப்படாது என்ற ஒரேயொரு காரணத்தினால் கோரிக்கையை ஏற்றுக் கொண்டான்.

இப்படியாகத்தான் அரசபட்டினத்தில் காலடி பதித்த சுபயோக சுபதினத்திலேயே சுகுமாறனின் வீட்டில் ஐக்கியமாகி விட்டான் ஆனந்தன். கைவசம் கொண்டு வந்திருந்த ஒற்றை பெட்டியும் தோளில் தொங்கிய லெதர் பேக்குமாக வீட்டுக்குள் பிரவேசித்தவனிடம் எடுத்த எடுப்பிலேயே கறராக சொல்லி விட்டான் சுகுமாறன்.

“பாருடா ஆனந்தா. நட்பு வேற. சொந்தம் வேற.”

இதை எதற்காக அவனிடம் சொல்கிறான் என்று புரியாமல் தலையாட்டி வைத்தான் ஆனந்தன்.

ஆரண்யத்தில் சீதைக்கு லட்சுமணன் போட்ட கோட்டைப் போல ஆனந்தனுக்கும் அந்த வீட்டில் ஒரு கோட்டை போட்டு வைத்தான் சுகுமாறன். நேர்மைக்குப் பெயர் பெற்ற ஆனந்தன் ஒருபோதும் அந்தக் கோட்டைத் தாண்ட முனைந்ததில்லை.

# அத்தியாயம் 4

“**வீ**ட்டில கிரௌவுண்ட் புளோரில ரெண்டு ரூம் இருக்கு. எதில வேணும்னாலும் நீ தங்கிக்கலாம். பட். மாடிப் பக்கம் வரக்கூடாது. அது என்னோட பிரைவசியைப் பாதிக்கும்.”

“இவ்வளவுதானா. நான் என்னவோ ஏதோன்னு நினைச்சுட்டேன்.”

இலகுவாக ஆனந்தன் சிரித்ததில் சுகுமாறனின் மனம் உறுத்தியது. கள்ளமில்லாத நண்பனின் மனதை பதட்டப் படுத்தி விட்ட குற்ற உணர்வுடன்.

"ஐ ஆம் ஸாரி ஆனந்தா..” என்றான்.

“விடுடா. இதைப் போய் பெரிசா பேசிக்கிட்டு.”

“இன்னொனும் இருக்குடா.”

“இன்னுமா...? அதையும் சொல்லு. கேட்டுக்கறேன்.”

“என்னதான் எனக்கு மாமா முறைன்னாலும் அவர் ஊர்ப் பண்ணையார். அவர் குடும்பத்துக்குன்னு சில பழக்க வழக்கங்களும் கட்டுப்பாடுகளும் உண்டு.”

“இருக்கட்டுமே. அவர் வீட்டில இருக்கிற கட்டுப்பாடுகளைப் பத்தி என்கிட்ட ஏண்டா சொல்ற...?”

‘‘இல்லேடா ஆனந்தா. எங்க மாமா வீட்டுக்குள்ள வெளியாளுகள அனுமதிக்க மாட்டாங்க.".

‘‘அதுக்கு...?’’

சுகுமாறன் என்னதான் சொல்ல வருகிறான் என்று புரியாமல் விழித்தான் ஆனந்தன். இப்படியா ஒருத்தன் அறிமுகமில்லாத ஊரில் ஆதரவுக்கரம் நீட்டி அழைத்துக் கொண்டு வந்து என்னவென்னவோ பேசி வைப்பான்...?

‘‘நான் தினமும் மாமா வீட்டுக்குப் போய் வருவேன் ஆனந்தா.’’

சுகுமாறன் மென்று விழுங்கியதில் மின்னல் வெட்டியதைப் போல அவன் சொல்ல வருவதை புரிந்து கொண்டான் ஆனந்தன்.

‘‘அதாவது. உன் மாமா வீட்டுக்கு உன்கூட ஒட்டுப் புல்லைப் போல ஒட்டிக்கிட்டு நானும் வரக் கூடாதுன்னு சொல்ல வர்ற...?’’

‘‘அஃதே.’’ பிரகாசமானான் சுகுமாறன்.

‘‘அடிச்சேன்னா பாரு. பழகினவங்க கூடப் பேசவே எனக்கு நேரமில்லை. இதில உங்க மாமா வீட்டிலதான் உறவு கொண்டாடனும்னு அலைந்துக்கிட்டிருக்கேன். போவியா. போஸ்ட்ஆபிஸ் வேலையிலே முழி பிதுங்குது. காலையிலவர்ற மெயில் பையை வெட்டறதுல ஆரம்பிக்கிற வேலை. சாயந்திரமா மெயில்பையைக் கட்டி அனுப்பின பின்னாலும் முடிந்து வைக்காது. கம்யூட்டர் கூட மல்லுக்கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்கனும். ஆபிஸ்

முடிஞ்சு வீட்டுக்கு வர்றவன் அக்கடான்னு கட்டையைச் சாய்க்கனும்னு நினைப்பேனா. இல்லை. உன்மாமா வீட்டுக்கு வந்து வாய் பார்க்கனும்னு நினைப்பேனா...?''

''நீ நினைச்சாலும் அங்கெல்லாம் வர முடியாதுடா ஆனந்தா.''

கர்வத்துடன் ஒலித்தது சுகுமாறனின் குரல்.

அவனுக்கு மட்டுமான அரியாசனத்தை உறுதிபடுத்திய அந்தக் குரலில் இவன் எதற்காக இப்படி அலைபாய்கிறான் என்று யோசித்தான்

ஆனந்தன். எந்த திரவியத்தை தக்க வைத்துக் கொள்ளத் துடிக்கிறான்...?

''நான் நினைக்க மாட்டேன். போதுமா...?

ஆனந்தனின் உத்திரவாதத்தில் அடங்கிப் போனான் சுகுமாறன். நீண்ட ஹாலும் முன்பக்கம் போர்டிகோவுமாக அழகான பங்களா போல இருந்தது வீடு. போர்டிகோவின் பக்கத்தில் இருந்த தோட்டத்தில் பூச்செடிகள் இருந்தன. தண்ணீர் இல்லாமல் வறண்டு வாடித் தெரிந்தன. ஆனந்தன் கேட்டபோது.

''அதுக்கெல்லாம் ஏதுடா நேரம்...? மாமா வீட்டுக்குப் போனா திரும்பி வர ராத்திரியாகும்.'' என்றான் சுகுமாறன்.

அவனது 'மாமா வீடு. பகுமானத்தைக் கேட்கப் பிடிக்காமல் விட்டு விட்டான் ஆனந்தன். ஹாலை ஒட்டிய படுக்கையறையில் தெருவைப் பார்த்தபடி இருந்த பெரிய அறையை தேர்ந்தெடுத்து

அங்கிருந்த கட்டிலில் பெட்டியையும் பையையும் வைத்தான். சுவரின் மர அலமாரியும் அதன் நடுவில் அமைக்கப்பட்டிருந்த ஆளுயுயரக் கண்ணாடியும் அரச பட்டினத்திற்குப் பொருத்தமில்லாமல் இருந்தன.

‘‘பணம் இருந்தா காடு கூட நகரம்தான்.’’ என்றான் சுகுமாறன்.

"நிஜம்தான்.’’ ஆமோதித்தான் ஆனந்தன்.

குளியலறை ஹீட்டர் பொருத்தப்பட்டு நட்சத்திர ஹோட்டலின் அனைத்து அடையாளங்களுடன் இருந்தது. அப்பேற்பட்ட வீட்டில் தனக்கொரு வசதியான அறை கிடைத்திருப்பதை நம்ப முடியாமல் பிரமித்துத்தான் போனான் ஆனந்தன்.

‘‘இது மட்டுமா. மாடியைப் பாத்தா அசந்து போயிருவ.’’

வாய் விட்டு விட்ட சுகுமாறன் எங்கே அதைப் பார்ப்போம் என்று நண்பன் மாடிப்பக்கம் வந்து விடுவானோ என்ற பயத்தில் பாதியிலேயே பேச்சை நிறுத்தி விட்டான்.

‘‘அசந்து போகக்கூட அங்கே நான் வரமாட்டேன்."

ஆனந்தன் அறிவித்த பின்புதான் சுகுமாறனுக்கு சுவாசமே சீரானது.

பூஜையறையில் தெய்வத் திருவுருவங்களின் படங்கள் இருந்தன. சமையலறையில் கேஸ் ஸ்டவ்வும் பாத்திரங்களும் இருந்தன.

‘‘மளிகை ஜாமானும் காய்கறிகளும் வாங்கினா சமைச்சுச் சாப்பிடலாம்தான். பட். மெஜாரிட்டி டயத்தில நான் மாமா வீட்டில சாப்பிட்டிருவேன். மத்த நேரங்களில மெஸ் இருக்கு.’’

வாயைத் திறந்தால் ஏதாவது ஒரு வகையில் அவன் மாமன் வீட்டில் சீராடும் புராணத்தைப் பாடாமல் இருக்க மாட்டான் என்பதை கண்டு கொண்டிருந்த ஆனந்தன்.

‘‘எனக்கு மெஸ் சாப்பாடு சரி வராது. வீட்டிலேயே சமைச்சுக்கறேன்.' என்றான்.

"உனக்கு மட்டும் செஞ்சுக்க... எனக்கு...’’

"மாமா வீடு இருக்கு.’’

சுகுமாறன் ஆரம்பித்து வைத்ததை முடித்து வைத்த ஆனந்தன் பெட்டியைத் திறந்து உடைகளை எடுத்து சுவர் அலமாரியில் அடுக்க ஆரம்பித்தான்.

‘‘சரிடா. நான் மாடிக்குப் போறேன்.’’

ஆனந்தனைக் கொண்டு வந்து வீட்டில் சேர்ப்பித்ததோடு வேலை முடிந்து விட்டது என்பதைப் போல மாடிப் படிகளில் தாவி விட்டான் சுகுமாறன்.

கைலியை எடுத்துக் கொண்டு குளியலறையில் புகுந்த ஆனந்தன் இதமான வெள்நீரில் அலுப்பு நீங்க குளித்து விட்டு கைலியும் டி சர்ட்டுமாக சமையலறைக்குள் புகுந்தான். அங்கே இருக்கும் பொருள்களை கணக்கில் எடுத்துக் கொண்டு

மேற்கொண்டு தேவையான பொருள்களை ஒரு லிஸ்டில் எழுதிப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டவன் கைலியை மடித்துக் கட்டியபடி வாசல் படிகளில் இறங்கி போர்டிகோவில் நின்றான். தோட்டத்தை ஒட்டியிருந்த குழாயின் பக்கத்தில் ரப்பர் பைப் இருந்தது.

'அடப்பாவி. இதை குழாயில் மாட்டி அஞ்சு நிமிசம் செடிகளுக்கு பக்கத்தில காட்டினா வேருக்கு நீர் பாய்ஞ்சிருக்குமே. இதுக்காடா நேரமில்லை...?' மனதுக்குள் சுகுமாறனைத் திட்டியபடி குழாயில் ரப்பர் பைப்பை பொருத்தி திருகி விட்டவன் செடிகளுக்கு தண்ணிர் பாய்ச்சஆரம்பித்தான்.

“எந்த ஊரு...?"

தேனினும் இனிய பெண்குரல் அவன் காதுகளில் பாய்ந்ததில் அனிச்சையாக நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவனின் விழிகள் விரிந்தன. அரசபட்டினத்தைப் போன்ற ஊரில் அவளைப் போன்ற அதிரூப சுந்தரியை சத்தியமாக அவன் எதிர் பார்த்திருக்கவில்லை.

என்னதான் இலுப்பைப்பூவை எதிர்பார்த்த ஊரில் சர்க்கரை ஆலையையே பார்த்து விட்டிருந்தாலும் பட்டிக்காட்டான் மிட்டாயைப் பார்த்த தினுசில் அவன் 'ஆ வென்று வாய் பிளக்க அவளைப் பார்த்திருக்கக் கூடாதுதான்.

அவள் மிடுக்காக விரல் சொடுக்கி.

“என்.ன்.ன்.ன...?” என்றாள்.

ஒன்றுமில்லை இளவரசி என்று வாய் வரை வார்த்தை வந்து தொலைத்து விட்டது. நல்ல வேளையாக அதை சடன் பிரேக் போட்டு தொண்டைக் குழிக்குள் தேக்கி நிறுத்தி விட்டான் ஆனந்தன்.

கந்தர்வக் கன்னிகை போல தென்பட்டவளை பார்த்தபடி பேசுவதில் அவனுக்குச் சில சங்கடங்கள் இருந்தன. கொடி போல உயரமாக இருந்தவளின் வாளிப்பில் அவன் கண்கள் சறுக்கு மரம் போல வழுக்கி வைத்து சோதித்தன. அழகான வளைக்கரத்தைக் குவித்து அவள் என்ன...?' என்று மிரட்டியதில் அவன் இதழ்கள் ஜொள் விட்டு செடிகளுக்கு நீர்பாய்ச்ச யத்தனித்தன. தோகை போல நீண்டிருந்த கூந்தலைப் பின்னலிட்டு அதைக் கையில் பிடித்து அவள் சுழற்றிய சுழலில் அவன் பார்வையும் சிக்கி சுழன்று வைத்தது.

'என்னடா இது ஆனந்தனுக்கு வந்த சோதனை.' அவன் வலுக்கட்டாயமாக பிரம்ம பிரயத்தனங்களை மேற்கொண்டு அவளிடமிருந்து பார்வையைத் திருப்பி பூச்செடிகளைப் பார்த்தபடி நீர் பாய்ச்சுவதை தொடர்ந்தான்.

“திமிரா. "

'அது உனக்கல்லவா வரவேண்டும் கண்மணி.'

“எந்த ஊருன்னு கேட்டேன்.”

'நீ பிறந்திருக்கும் இவ்வூரில் பிறக்கவில்லையே. என் செய்வேன்...?'

’’பேச வராதா..."

'ஏன் வராது...? உன் முன் வார்த்தைக் கடல் வற்றிப் போனதே. வாய் திறந்தால் காற்றுத்தான் வரும் போல உள்ளதே.'

“ஊமையா...?”

'உன் முன் நான் ஊமைதான்.'

அவள் கேட்கக் கேட்க இவன் மனதிற்குள் மைண்ட் வாய்ஸில் மத்தளம் வாசித்துக் கொண்டிருந்தான்.

அவள் சுவாதீனமாக காம்பவுண்டின் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். அவனை ஏற இறங்க பார்த்தவளின் விழிகளில் வியப்பு வந்தது.

"ஏனாம்...?’ அவளை ஓரக் கண்ணால் பார்த்தபடி தனக்குள் வினவிக் கொண்டான் ஆனந்தன்.

“பாத்தா படிச்சவனைப் போல இருக்கிற. கொஞ்ச வயசு வேற. இந்த செடிகளுக்கு தண்ணி ஊத்தற வேலைதான் உனக்குக் கிடைச்சதா...? வாத்தி கஞ்சமாச்சே. ஒரு பைசாவ ஈயனும்னாக் கூட ஓராயிரம் தடவ யோசிப்பாரே.”

அவள் சுகுமாறனை கணித்துச் சொன்னதில் அவனுக்கு சிரிப்பு வந்தது.

# அத்தியாயம் 5

கஞ்சப் பிசுராணியென்றால் பிசுராணி, அப்படியொரு கஞ்சப் பிசுராணி சுகுமாறன்..! அனாவசியமாக என்ன. அவசியமென்றால்கூட பைசாவை வெளியே எடுக்க மாட்டான். மற்றவர்களின் பாக்கெட்டில் இருக்கும் பணத்தை வைத்து தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் படு கெட்டிக்காரன். நண்பர்கள் குழாமில் அவனுக்கு வைத்திருக்கும் பெயரே 'அடுத்து நான்தான். என்பதுதான்.

ஹோட்டலுக்குப் போனால் அது வேண்டும், இது வேண்டும் என்று சகட்டு மேனிக்கு வரவழைத்துச் சாப்பிட்டு விட்டு. "அடுத்து வர்றப்ப நான்தாண்டா பில் கொடுப்பேன்." என்று கறாராக அறிவிப்பதில் திறமைசாலி.

அந்த அடுத்த முறை என்பது வந்தேயில்லை என்பது வேறு விசயம். எப்போது போனாலும் அதுதான் முதல்தரம் என்பது போல 'அடுத்து நான்தான். என்பான். போகிறான் என்று நண்பர்களும் கண்டு கொள்ள மாட்டார்கள்.

கல்லில் இருந்து நாரைக்கூட உரித்து விடலாம். சுகுமாறனின் கையிலிருந்து ஒரு பைசாவை வாங்கிவிட முடியாத. சுகுமாறனின் இந்தக் குணத்தை மிகச் சரியாக கணித்து வைத்திருக்கும் அந்தப்

பெண் யாராக இருக்கக் கூடும் என்று யோசித்தபடி அவளை ஓரக் கண்ணால் பார்த்து வைத்தான் ஆனந்தன்.

“என்ன...? தோட்டக்காரரே. பார்வையெல்லாம் பலமா இருக்க...? இது அரசபட்டினம். கை, காலு பத்திரமா இருக்கனும்னு சூதானமா பார்த்துப் பழகனும்.” அதட்டினாள் அவள்.

'சூதானமா பார்த்துப் பழகனுமா...?'

அவளிடம் பழக வேண்டும் போல அவனுக்குள் ஆசை கிளர்ந்தது. அதைச் சொன்னால் முதுகில் டின் கட்டி விடுவாள் என்பதால் ஆனந்தன் குழாயை நிறுத்தி விட்டு ரப்பர் பைப்பை உறுவி சுருட்டி வைத்தான். இயல்பான அவனது நடிவடிக்கைகளில் ஈர்க்கப்பட்டவளாக அவள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது.

“கீதா நீயா...?” என்ற குரல் கேட்டது.

மாடி பால்கனியில் ஒலித்த குரலில் அண்ணாந்து பார்த்தாள் அவள். சுகுமாறனின் தலை தெரிந்தது.

“இரு வர்றேன்.” என்று குரல் கொடுத்த சுகுமாறன் மறு நொடியில் தோட்டத்தில் தோன்றி நின்றான்.

"டிஷ்" என அவன் தோன்றியதில் சட்டென தள்ளி நின்று நெஞ்சில் கை வைத்த கீதா.

“இப்படியா பயமுறுத்துவீங்க...?” என்றாள்.

‘‘இந்த இரண்டு வருசத்தில இப்பத்தான் உன் காலடி என் வீட்டில பட்டிருக்கு. உள்ளே வா கீதா.’’

‘‘இது எங்க வீடு. ஞாபகம் இருக்கில்ல...?’’

‘‘ஹி. ஹி. மறந்து போகுமா...? நீ உள்ளே வா.’’

‘‘எதுக்கு...?’’

‘‘என்னைப் பாக்கத்தானே வந்தே...?’’

‘‘இல்லையே. நான் தோட்டத்தைப் பாக்க வந்தேன். நீங்க வந்த நாள்ல இருந்து இந்த நாள் வரைக்கும் தோட்டத்துச் செடிகளுக்கு தண்ணி காட்டியிருக்கீங்களா...?"

‘‘நான் நேர்மையான வாத்தியார் கீது. தண்ணி காட்டிப் பழக்கமில்ல. ஹி. ஹி..’’

‘‘ஜோக்காக்கும்...? சிரிப்பு வரல. வயலுக்கு வேலை செய்ய வர்ற பண்ணையாளுக வீட்டுப்பக்கம் வந்தா இந்த தோட்டத்துக்கு தண்ணி காட்டச் சொல்லி செடிகள பட்டுப் போகாம காப்பாத்திக்கிட்டு இருக்கோம். இல்லேன்னா இங்கே தோட்டமா இருந்திருக்கும்...? காஞ்சு போன நிலமில்ல இருந்திருக்கும்.’’

"அப்படியெல்லாம் விட்டுருவேனா கீது.’’

இருபொருள்பட வினவி வைத்தான் சுகுமாறன்.

அதை கண்டு கொள்ளாமல் ஆனந்தனைப் பார்த்து வைத்தாள் கீதா. அவர்களின் பேச்சு வார்த்தையிலிருந்து அவள்

சுகுமாறனின் மாமன் மகளாக இருக்கக் கூடும் என்று யூகித்தான் ஆனந்தன்.

‘‘ஒரு வழியா தோட்டக்காரனை வேலைக்கு வைச்சிட்டிங்க போல.’’

கீதாவின் வார்த்தைகளில் தூக்கிவாரிப் போட்டவனாக நிமிர்ந்து பார்த்தான் ஆனந்தன்.

அழகான அப்சரஸின் வாயிலிருந்து வரும் அவனைப்பற்றிய அடையாள மொழி இப்படியா இருந்து வைக்க வேண்டும்...?

சுகுமாறன் மறுத்துப் பதில் சொல்வான் என்று எதிர்பார்த்த ஆனந்தன் ஏமாந்து போனான். மறுத்து ஒற்றைச் சொல்லைக்கூட சுகுமாரனின் வாய் உதிர்க்கவில்லை.

‘என்னைத் தோட்டக்காரன்னு கன்பர்ம் பண்றதிலேயே குறியாய் இருக்கானே.'

சுகுமாறன் அப்படித்தான் இருந்தான். ஆனந்தன் என்ற ஒருவன் அங்கே இருப்பதையே மறந்து போனவனைப் போல கீதாவை வீட்டுக்குள் அழைப்பதிலேயே குறியாக இருந்தான்.

‘‘வீட்டுக்குள்ள போய் பேசலாம் வா கீது.’’

‘‘இந்த கீதுவெல்லாம் வேண்டாம். முழுசா கீதான்னு பேரைச் சொல்லிக் கூப்பிடுங்க.’’

‘‘அதுக்கென்ன கீது. அப்படியே கூப்பிட்டுட்டாப் போச்சு.’’

‘‘என் பேரு கீதான்னு சொன்னேன்.’’

"ஒகே. ஒகே. கீதா போதுமா...? உள்ளே வாயேன்.''

‘‘இதென்ன புதுப் பழக்கம்...?''

கீதா எதைச் சொல்கிறாள் என்று தெரியாமல் தலையைச் சொரிந்தான் சுகுமாறன்.

ஆனந்தனைத்தான் சொல்கிறாளோ என்ற சம்சயம் அவனுக்கு. இது புதுப்பழக்கமில்லை. பள்ளிப் பருவத்திலிருந்து தொடர்ந்து வரும் பால்ய காலப் பழக்கம் என்று சொல்ல முடியாமல் மூச்சுத் திணறினான். நிமிர்வான ஆனந்தனின் கம்பீரத்தில் என்றுமே அவனுக்கு பொறாமை உண்டு.

என்னதான் ஆனந்தனை விட நிறமாக கவர்ச்சியாக சுகுமாறன் இருந்தாலும் பெண்களின் பார்வை ஆனந்தனை மட்டும் வட்ட மடிப்பதை அவன் உணர்ந்திருந்தான். அவசரப்பட்டு ஆனந்தனை அழைத்துக் கொண்டு வந்து விட்டோமோ என்ற மனப்புழுக்கம் அவனுக்கு உண்டானது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலிருக்க வெகுவாக பிரயத்தனப் பட்டான். அப்போதைக்கு அந்த இடத்தை விட்டு ஆனந்தனை அகற்றி விட வேண்டுமென்ற எண்ணத்துடன்.

"நீ வெளியே போகனும்னு சொன்னேல்ல...?''

என்று மொட்டையாக ஆனந்தனிடம் கேட்டு வைத்து அவனை வெளியே அனுப்ப முயன்றான்.

அப்போதும் அவன் ஆனந்தன், சுகுமாறனின் உயிர் நண்பன் என்பதைக் குறிப்பிடவில்லை.

'கெட்டிக்காரண்டா நீ.'

ஆனந்தனின் இதழ்களில் படிந்த இகழ்ச்சிப் புன்னகையை சுகுமாறன் லட்சியமே பண்ணவில்லை. அவன் பரவசத்துடன் கீதாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'எப்படியோ தொலை..'

ஆனந்தன் மடித்துக் கட்டிய கைலியை இறக்கி விட்டு வெளியே கிளம்பப் போனான். அப்போது பார்த்துத்தானா அன்பழகன் சைக்கிளில் வந்து இறங்கி என்ட்ரி கொடுக்க வேண்டும்...?

"சார்."

வாயெல்லாம் பல்லாக வந்து இறங்கியவனை

'சூ. சூ.' என கை விரித்து ஒட்ட முயன்று தோற்றுப் போனான் சுகுமாறன். எங்கே...? அன்பழகனின் பார்வை ஆனந்தனிடம் மட்டும்தானே மையம் கொண்டிருந்தது...? புதிதாக வந்திருக்கும் இளந்தாரி போஸ்ட் மாஸ்டரை வசியம் பண்ணி தன் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் மும்முரத்துடன் அவன் இருந்தான்.

"என்ன அன்பு...? ஆபிஸ் முடிஞ்ச பின்னாலே தபால் கொண்டு வந்திருக்கியா...?" கீதா விசாரித்தாள்.

"ஆமாம்மா. விடிய விடியத் தபால் கொடுத்துக்கிட்டு இருந்தா உங்களுக்கெல்லாம் நல்லாத்தான் இருக்கும். அப்போவும் போஸ்ட் ஆபிசை சகட்டு மேனிக்குத் திட்டத்தான் செய்வீக. கட்டுக்கட்டா நோட்ட வாங்கறவகள கண்டுக்கக் கூட மாட்டிக. ஊருக்கு இளைச்சது பிள்ளையார் கோவில் ஆண்டின்னா உங்களுக்கெல்லாம் இளைச்சது போஸ்ட் ஆபிஸ்தான...?''

அன்பழகன் போட்டபோட்டில்.

''சரி, சரி. விடு, விடு.'' என ஜகா வாங்கினாள் கீதா.

வெற்றிகரமான அவளது பின்வாங்கலை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தனின் பார்வையில் அவள் மனம் குறுகுறுத்தது.

''இந்நேரத்தில் இந்தப் பக்கம் வாத்தியாரத் தேடிக்கிட்டு வந்திருக்கயே. தபால் கொடுக்கத்தான் வந்திருப்பியோன்னு நினைச்சேன்.''

''அதுசரி. இந்த வீட்டுக்கு வந்தா வாத்தியாரப் பார்க்கத்தான் வந்திருப்பேன்னு நீங்களா முடிவு கட்டிக்கிட்டா எப்படிம்மா...? நான் எங்க போஸ்ட் மாஸ்டரையில்ல பார்க்க வந்திருக்கேன்.''

அன்பழகன் போட்டு உடைத்து விட்ட குட்டில் சுகுமாறன் தலையில் கை வைத்துக் கொள்ள.

'முட்டாளாடா நீ.' என்று ஒர் பார்வை பார்த்தான் ஆனந்தன்.

இந்த விவரத்தை எத்தனை நாள் ஒளித்து வைக்க முடியும்...? படித்துப் பட்டம் பெற்று பொறுப்பான உத்தியோகத்தில் இருக்கும் சுகுமாறனுக்கு இது ஏன் தெரியாமல் போனது...?

‘‘போஸ்ட் மாஸ்டரா...? யாரு...?" திகைத்து விழித்தாள் கீதா.

‘‘யாரா...? இதோ தேசிங்கு ராஜாவைப் போல நிக்கிறாரே. இவர்தான் எங்க போஸ்ட் மாஸ்டர்.’’

கிடைத்த வாய்ப்பை அருமையாக பயன்படுத்திக் கொண்டவனாய் அக்கினி வெயிலில் ஐஸ் கட்டியைத் தூக்கி ஆனந்தனின் தலைமீது வைத்தான் அன்பழகன்.

கீதாவால் தலை நிமிர முடியவில்லை.

சவடாலாக ஆனந்தனிடம் பேசிக் கொண்டிருந்தவள் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் சங்கடப் பட்டுப் போனாள்.

‘‘மன்னிச்சுக்கங்க. யாரோன்னு நினைச்சுட்டேன்.’’ முணுமுணுத்தவளுக்கு ஆனந்தன் பதில் சொல்லும் முன் சுகுமாறன் ஊடே புகுந்து.

‘‘அதனால என்ன...? தெரியாமத்தான பேசின...? இதுக் கெல்லாம் வருத்தப்படலாமா...?’’ என்று அவளைத் தடுத்தாட் கொண்டு உருகினான்.

பதிலளிக்கும் வேலையை சுகுமாறன் செய்து விட்டதில் மௌனமாக அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்த ஆனந்தனின்

பார்வையை சந்திக்க முடியாமல் இமைகள் படபடக்க தன் வீட்டை நோக்கி ஓடிப்போனாள் கீதா.

# அத்தியாயம் 6

“என்ன சார் இது...? தென்ன மரத்தில தேள் கொட்டினா பனை மரத்தில நெறி கட்டும்ன்னு சொல்றதப் போல உங்ககிட்ட அந்தம்மா மன்னிப்புக் கேக்கறதைப் போலப் பேசினா நம்ம வாத்தியார் ஊடுசால் ஒட்டிக்கிட்டு வருத்தப் படாதேங்கிறாரு...?”

அன்பழகனின் கேள்விக்கு பதில் சொல்லாமல் சிந்தனையுடன் நடந்தான் ஆனந்தன்.

அரசபட்டினத்தின் கடைத் தெருவை அவனுக்கு அறிமுகப் படுத்தினான் அன்பழகன். இரண்டு மளிகைக் கடைகளும் ஒரு கட்பீஸ் துணிக் கடையுமாக களை கட்டியது கடைத்தெரு. மளிகைக் கடையிலேயே காய்கறிகள் இருந்தன. கட்பீஸ் கடையை ஒட்டி ஒரு டெஸ்லர் கடை இருந்தது.

“இதான் சார்.. அரச பட்டினத்தோட கடை வீதி. வேணும்ங்கிறதை வாங்கிக்கங்க.” தாராளமாக சொன்னான் அன்பழகன்.

ஆனந்தன் சமையலுக்குத் தேவையான அரிசி, பருப்பு, இத்யாதி இத்யாதிகளை சொல்லிக் கொண்டே வர மளிகைக் கடைக்காரர் பொட்டலம் கட்டி அடுக்கி வைத்தார்.

‘‘மொத்தமா சாக்குப் பைக்குள்ள போட்டுக் கட்டித் தாங்கண்ணே.’’

அன்பழகன் கேட்டுக் கொண்டபடி கட்டப்பட்ட மூட்டையைத் தூக்கி சைக்கிளின் பின்பக்க கேரியரில் வைத்துக் கட்டினான். ஆனந்தன் பால் பாக்கெட் ஒன்றை வாங்கி கையில் பிடித்துக் கொண்டதைப் பார்த்தவன்.

‘‘இங்கே கேன் பால்தான் வாங்குவாங்க சார். உங்களுக்கு வேணும்னா வீட்டில வந்து ஊத்தச் சொல்றேன். சுத்தமான பசு மாட்டுப் பால் சார்." என்றான்.

‘‘ஆகட்டும் அன்பு. அப்படியே செய். இப்போதைக்கு பாக்கெட் பாலில காபி போட்டுக் குடிக்கலாம்.’’

ஆனந்தனின் வார்த்தைகளில் காபி நிச்சயம் என்பது புரிந்து போக உற்சாகமாக சைக்கிளைத் தள்ளியபடி ஊர் நிலவரத்தைப் பேசிக் கொண்டு வந்தான் அன்பழகன். மெலிதான புன்னகையுடன் தலையசைத்தபடி வந்த ஆனந்தனின் மீது அவனுக்குள் நட்பு உண்டானது.

"பரவாயில்ல. போஸ்ட்மாஸ்டரு ஒன்னும் சிடு மூஞ்சியா இல்ல. பழக்கத்துக்கு நல்லவருதான்.'

எதிரே வந்த பால்கேன் கட்டப்பட்ட சைக்கிளைக் கண்டதும்.

‘‘இந்தா நம்ம பால்கார கோனாரே வந்துட்டாப்புல இல்ல.’’ என்று உற்சாகமானான்.

பால் வண்டி நின்றது. பால் விற்கும் கோபாலிடம் ஆனந்தனை அறிமுகப் படுத்தி வைத்தான் அன்பழகன்.

‘‘புதுசா வந்திருக்க போஸ்ட் மாஸ்டருண்ணே. மத்தவகளப் போல காலையில பஸ்ஸில வந்தோம். பொழுது சாய பஸ்ஸைப் பிடிச்சு டவுனுப் பக்கம் ஒடிப் போனோம்ன்னு இல்லாம நம்ம ஊரிலேயே தங்கிப் புடனும்ங்கிற வைராக்கியத்தோட இருக்கிறாரு. அந்த அசாத்திய மனோ தைரியத்தை பாராட்டியாவது குறைச்சு தண்ணி ஊத்தின பாலாப் பாத்து இவருக்கு ஊத்துண்ணே.’’

‘‘என்னா அன்பு இப்படிச் சொல்லிப்புட்ட...? எந்தக் காலத்தில பாலில நான் தண்ணிய ஊத்தினேன். கள்ளிச் சொட்டு போல கறந்த பால கேனில நிரப்பி விக்கிறவன் அன்பு.’’

‘‘அது எனக்குத் தெரியாதா அண்ணே...? பசுமாடு தண்ணியக் குடிக்கிறதினாலதான கள்ளிச் சொட்டுப் பாலு தண்ணிப் பாலாகுது...? நீ என்ன வஞ்சனை பண்ற ஆளா...?’’

‘‘தெரிஞ்சாச் சரி. போஸ்ட் மாஸ்டரு எந்த வீட்டில குடியிருக்காரு...? எத்தன லிட்டரு பால ஊத்தனும்...?’’

‘‘பத்து லிட்டரு பால ஊத்து. என்னண்ணே நீ. கல்யாணம் கட்டிக்காத கட்டப் பிரம்மச்சாரி எத்தன லிட்டரு பால வாங்கப் போறாரு...? கவர்ண்மெண்ட் சம்பளம் வாங்கறவங்க அகப்பட்டா ஒரு மாட்டுப் பால ஒருமிக்க ஊத்திப்புடனும்னு கிளம்பிருவியே.’’

"ஏம்ப்பா யதார்த்தமா கேட்டா இப்புடியா சுளுவெடுப்ப...?''

வாக்குவாதம் தொடர. ஆனந்தன் தலையிட்டு அவனிருக்கும் வீட்டையும் தேவையான பாலின் அளவையும் சொல்லி பால்காரரை அனுப்பி வைத்தான்.

''யாரு அகப்பட்டாலும் அவங்கள ஒரு வழி பண்ணிருவ போல.'' அன்பழகனிடம் சிரித்தான்.

''இதெல்லாம் சும்மா சார். கிராமத்துக்காரங்க இப்படித்தான் எகனைக்கு மொகனையா பேசி சண்டை போட்டுக்குவோம். இதெல்லாம் செல்லச் சண்டை சார். அது எனக்குத் தெரியுமா...? நிஜச் சண்டையாயிருச்சுன்னா என்ன செய்யறதுன்னு பயந்துட்டேன்.''

''உங்களைப் பாத்தா பயப்படற ஆளை மாதிரியா தெரியுது...? பத்துப்பேரை பந்தாடற ஆளைப் போலயில்ல தெரியுது.''

மறுபடியும் ஆனந்தனின் தலைமீது ஐஸ்கட்டி ஏறி அமர்ந்தது. புன்னகைத்துக் கொண்டான் அவன்.

"நீ இப்படிச் சொல்ற. அந்தப் பொண்ணு என்னன்னா என்னைப் பார்த்து தோட்டக்காரனான்னு கேக்குது.''

''யாரு கேட்டது...? பண்ணையார் மகளா...?'' ஆச்சரியத்துடன் வினவினான் அன்பழகன்.

ஆமாமென்று தலையசைத்த ஆனந்தன்.

‘‘அது பண்ணையாரோட மகளா…?’’ என்று விசாரித்தான்.

"ஆமாம் சார். அவங்க வீட்டிலதான் சுகுமாறன் வாத்தியாரு குடியிருக்காரு. இவரு பண்ணையாருக்கு தூரத்து சொந்தமாம்.’’

‘‘கிட்டத்து சொந்தம் மாதிரியில்ல சொல்லிக்கிட்டான்.

‘‘யாரு…? இவரா…? கிட்டத்து சொந்தம்ன்னா ஊருக்காரங்களுக்குத் தெரியாம போயிருக்குமா…? இவரு வேலைக்கு வந்த ரெண்டு வருசமாத்தான் ஊருக்காரங்களுக்குத் தெரியும். அதுக்கு முன்னாடி தெரியாது.’’

‘‘பண்ணையாரோட சொந்த பந்தத்தைப் பத்தி மத்தவங்களுக்கு எப்படிப்பா தெரியும்…?’’

"டவுனுப்பக்கம் வேணும்னா அப்படியிருக்கலாம். பட்டிக்காட்டில அப்படியில்லை. வருசா வருசம் வர்ற அம்மன் கோவில் திருவிழாவுக்கு அரச பட்டினத்தோட ஒவ்வொரு வீட்டிலயும் சுத்துப்பட்டியில இருக்கிற அத்தனை சொந்த பந்தமும் வந்து குமியும். சாதாரணப்பட்டவுக வீட்டிலயே இப்படிங்கிறப்போ பண்ணையாரு வீட்டில எப்படியிருக்கும்…? ஆளும் பேருமா வந்து இறங்கறவுக தங்கிப் போகிறதுக்காகவே ஒரு வீட்டைக் கட்டியிருந்தாரு. அந்த வீட்டிலதான் சுகுமாறன் வாத்தியார் குடியிருக்காரு.’’

"அப்படியா…?’’

"ஆமாம் சார். இவர அம்மன் கோவில் திருவிழாவிலயும் பார்த்ததில்ல. பண்ணையார் வீட்டு விசேசங்களிலயும் பார்த்ததில்ல. திடிர்ன்னு ரெண்டு வருசத்துக்கு முன்னாடி இந்த ஊரு பள்ளிக் கூடத்தில வாத்தியாரு வேலை கிடைச்சிருக்குன்னு வந்து இறங்கினாரு. பண்ணையாரு வீட்டுக்கு உறவுன்னு சொல்லிக்கிட்டு புதுவீட்டில குடியேறினாரு.''

வீடு நெருங்கி விட்டதில் பேச்சை மாற்றினான். ஆனந்தன். சுகுமாறன் யாராய் இருந்தால் அவனுக்கென்ன...? குடியிருக்க இடம் தேடியவனுக்கு அடைக்கலம் கொடுத்துத் தன் வீட்டில் தங்க வைத்திருப்பவன் அவன். அதற்கு மேல் பேசுவதற்கு எதுவும் இல்லை.

காம்பவுண்டு கேட்டைத் திறக்கும் போதே அனிச்சையாக ஆனந்தனின் பார்வை எதிர்வீட்டை நோக்கியது.

என்ன ஒரு ஆச்சரியம். அவனது வரவை எதிர்பார்த்து காத்திருப்பவளைப் போல எதிர் வீட்டின் தோட்டத்திலே கீதா நின்றிருந்தாள்.

அவளது பார்வை ஆனந்தனின் மீது படிந்தது. அவன் சிலிர்த்துப் போனான். அருகில் அன்பழகன் இருக்கும் உணர்வில் பார்வையை விலக்கிக் கொண்டு கேட்டை அகலமாக திறந்து விட்டான்.

சைக்கிளுடன் உள்ளே வந்த அன்பழகன் அதை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு மூட்டையை இறக்கினான். கேட்டை மூடியபடி எதிர்வீட்டைப் பார்த்தான் ஆனந்தன். அவள் அங்கு இல்லை.

'வீட்டுக்குள் போயிருப்பாள். அவன் மனது ஏமாற்றம் கொண்டது.

ஏனிந்த ஏமாற்றம் என்று மனதை கடிந்து கொண்டவனாக வீட்டுக்குள் போனான். மூட்டையுடன் அவனைத் தொடர்ந்தான் அன்பழகன். சமையலறை மேடையில் அவன் மூட்டையை இறக்கி வைக்க, ஆனந்தன் பால் பாக்கெட்டை உடைத்துப் பாத்திரத்தில் ஊற்றி ஸ்டவ்வை பற்ற வைத்துக் காய்ச்சஆரம்பித்தான்.

‘‘காபி போடத் தெரியுமா சார்...?’’

‘‘உன்னை விட நல்லாவே தெரியும். நீ உட்காரு.’’

காபி கலந்து அன்பழகனுக்குக் கொடுத்து விட்டுத் தானும் ஒரு தம்ளரில் ஊற்றிக் குடிக்க ஆரம்பித்தான் ஆனந்தன்.

‘‘காபின்னா இது காபி சார்.’’ சிலாகித்தான் அன்பழகன்.

"அப்படியா...? சிறு புன் சிரிப்புடன் அன்பழகனின் பாராட்டை அங்கீகரித்த ஆனந்தன்.

‘‘தேங்க்ஸ் அன்பு." என்றான்.

‘‘எதுக்கு சார்.’’

"உன்னோட ஹெல்ப்புக்குத்தான்.'' அன்பழகன் சிலிர்த்துப் போனான். இந்த ஒரு வார்த்தையைக் கேட்பதற்காகத்தானே அவன் ஒர்நாள் முழுவதும் காத்திருந்தான். அவன் எதிர்பார்த்த வார்த்தை தேனாக அவன் காதுகளில் பாய்ந்ததில் திக்கு முக்காடிப் போனான்.

"இது என் கடமை சார்."

எம்ஜிஆரைப் போல மூன்றெழுத்தில் அவன் மூச்சிருக்கும் என்று சொல்லி விட்டு சைக்கிளில் ரஜினி போல தாவி ஏறி.

*“ரெக்கை கட்டி பறக்குதடா.*

***அண்ணாமலை சைக்கிள்.”***

என்று உச்சஸ்தாதியில் பாடியபடி சைக்கிளை மிதித்துப் பறந்து விட்டான் அன்பழகன்.

மளிகைஜாமான்களைப் பிரித்து டப்பாக்களில் கொட்டிக் கொண்டிருந்த ஆனந்தன் உள்ளுணர்வின் உந்துதலில் திரும்பிப் பார்த்தான். சமையலறை வாசலில் சுகுமாறன் நின்றிருந்தான்.

# அத்தியாயம் 7

**“கா**பி குடிடா.”

இயல்பாக தம்ளரை எடுத்துக் காபியை ஊற்றினான் ஆனந்தன். உள்ளே வந்த சுகுமாறன் சமையலறை மேடையில் தாவி ஏறி அமர்ந்தபடி காபித் தம்ளரை எடுத்துக் கொண்டான். எதிர்வீட்டுப் பெண்ணிடம் ஆனந்தன் தோட்டக்காரனில்லை, தனது நண்பன்தான் என்ற விவரத்தைச் சொல்லாமல் தாமதித்ததிற்கு சமாதானம் சொல்வான் என்று எதிர்பார்த்தான் ஆனந்தன். அப்படியொரு சம்பவமே நிகழாததைப் போல இலகுவாக வேறு பேச்சுக்களை பேச ஆரம்பித்து விட்டான் சுகுமாறன்.

"பரவாயில்லையே. காபி படு டேஸ்டா இருக்கே. இனிக் காபிக்காக டீக்கடையைத் தேடிப் போக வேணாம்ன்னு சொல்லு."

வக்கணையான சுகுமாறனின் பேச்சில் ஏதோ ஒரு நையாண்டி ஒளிந்திருப்பதைப் போல ஆனந்தனுக்குத் தோன்றியது. ஆமாண்டா உனக்குக் காபி போட்டுக் கொடுக்கத்தான் நான் அரசப் பட்டினத்துக்கு வந்திருக்கேன் என்று சொல்ல வந்ததை தொண்டைக் குழியிலேயே நிறுத்திக் கொண்டான்.

'அப்போ என்னடான்னா இவன் மாமன் பொண்ணு முன்னாலே தோட்டக்காரனாக்கினான். இப்பச் சமையல்காரனாக்கறான்.'

இதை இப்படியே விட்டுவிடக் கூடாது என்று ஆனந்தனுக்குத் தோன்றியது. துளிர்க்கும் போதே கிள்ளி எறிந்து விட வேண்டும். அரசபட்டினத்தில் குடியிருக்கத் தோதான வீடு கிடைக்காவிட்டால் ஆபிஸிலேயே தங்கிக் கொள்ள வேண்டியதுதான். ஆபிசிற்கும் காவலாச்சு. அதை விட்டுவிட்டு தோதான இருப்பிடத்திற்காக தன் சுயமரியாதையை அடகு வைப்பதா...?

‘‘காபி போடறது ஒன்னும் பிரம்ம சூத்திரம் இல்லை சுகுமார். தண்ணி விடாம பாலைக் காய்ச்சி தேவையான அளவு சர்க்கரையையும் இன்ஸ்டண்ட் காபிப் பொடியையும் கலந்தா படு டேஸ்ட்டான காபி ரெடி. இதைச் செய்யாம இத்தனைநாளா டீக்கடை பெஞ்சை எதுக்காக தேய்த்துக்கிட்டு இருந்த...?’’

சுகுமாறனின் நையாண்டியைப் புரிந்து கொள்ளாமல் இயல்பாக சொல்வதைப் போல சொல்லி வைத்தான் ஆனந்தன். சுகுமாறனின் முகம் கருத்தது. அவனுக்கு ஆனந்தனின் குணம் தெரியும். எதற்காகவும் சுயமரியாதையை விட்டுக் கொடுக்க மாட்டான். எத்தனை நுணுக்கமான மறைமுக நையாண்டியையும் வெகு எளிதாக இனம் கண்டு விடுவான்.

'இவன் இத்தனை புத்திசாலியாக இருந்து தொலைக்கக் கூடாது.' மனம் புழுங்கினான் சுகுமாறன்.

அவனுக்கு அந்த வீட்டில் ஒரு பிரச்னை இருந்தது. ஊர்ப் பண்ணையாரும் அவன் 'மாமா' என்று உறவு கொண்டாடும் பெருந்தனக்காரருமான நீலகண்டனின் அம்மா அந்தப் புது வீட்டில்தான் இருந்தாள். என்றும், வயோதிகம் மற்றும் தள்ளாமையினால் அந்த வீட்டில் படுத்திருக்கும் போது உறக்கத்திலேயே இறந்து விட்டாள் என்றும் அவன் அந்த வீட்டிற்கு குடி வந்து இரண்டு மாதங்கள் ஆனபின்னால் செவிவழிச் செய்தியாக அவன் காதிற்கு வந்து சேர்ந்தது.

அன்று முதல் அந்த வீட்டில் தனியாகத் தங்குவதற்கு அவன் அஞ்சி நடுங்கினான். விடிந்தவுடனே வெளியே ஒடி விடுவான் பள்ளி முடிந்த பின்னாலும் அங்கே இங்கேயென்று சுற்றி விட்டு தூங்குவதற்காகத்தான் வீட்டிற்குள் நுழைவான்.

இரவானால் தூக்கம் கொள்வது உலக ஜீவராசிகளின் வழக்கம்தான். அதற்கு சுகுமாறனும் விதிவிலக்கில்லைதான். ஆனால் தூக்கம்தான் அவனை அண்ட மறுத்ததே. ஒரு பொட்டு உறக்கமில்லாமல் கொட்டக் கொட்ட விழித்தபடி ராப்பொழுதைக் கடப்பான். இரவில் கேட்கும் சிறிய சந்தடிக்கும் அவன் உள்ளம் பதறும்.

தரைத்தளத்தில் இருந்த ஹாலில் படுத்திருக்கும் போதுதான் அந்தப் பாட்டி உயிரை விட்டாள் என்பதால் இவன் மாடியிலேயே பதுங்கிக் கொண்டான். தேவையில்லாமல் கீழே வரமாட்டான். வாசலுக்குப் போக மாடிப்படிகளில் இறங்கி ஹாலைக் கடந்துதான் போக வேண்டும் என்பதால் வேறு வழியின்றி பதக், பதக் கென்று மனம் பதற திகிலோடு ஹாலைக் கடப்பான்.

அவனுக்கு மட்டும் துணிவிருந்தால் மாடி பால்கனியிலிருந்து தோட்டத்தில் குதித்து வெளியே சென்று வரப் பழகியிருப்பான். அப்படி தோட்டத்தில் குதிக்கும்போது கால், கைகளுக்கு சேதாரம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் துணிவை துணை கொள்ளாமல் சமர்த்தாக மாடிப்படி வழியாக ஹாலில் இறங்கி வாசலுக்குச் செல்வதை வழக்கப்படுத்தியிருந்தான்.

இரவில் உறக்கமில்லாமல் பள்ளியில் பாடம் நடத்தப் போனால் பாடமா வரும்...? உறக்கம்தான் வரும். அந்த உறக்கத்தை விரட்ட அடிக்கடி டீக்குடிப்பவன் டீக்கடை பெஞ்சின் நிரந்தர உறுப்பினராகி விட்டான்.

இவனுக்கிருக்கும் இந்த நூதன பிரச்னையைப் பற்றி எவரிடமும் மூச்சு விடவில்லை. அரசபட்டினத்தின் அம்சம் அப்படிப்பட்டது.

"அந்த வீட்டில கொஞ்சம் பயமாயிருக்குப்பா." என்ற ஒற்றை வரியை அவன் சொல்லி விட்டால். அடுத்த நொடியிலேயே அது

வான்வெளியில் கலந்து எந்தப் பண்பலையின் உதவிகளும் இல்லாமலே பல்கிப் பெருகி. அரசப்பட்டினத்தில் மட்டுமல்லாமல் அதன் சுற்று வட்டார ஒட்டு மொத்த கிராமங்களுக்கும் பரவிப் பறந்து.

"வாத்தயார பேயடிச்சு அவரு ரத்தம் கக்கி செத்துப் போயிட்டாராம்டா. தினமும் பேய் வந்து அவரை பயமுறுத்துமாம். இவரு கைலியில ஒன்னுக்குப் போயி நனைச்சிருவாராம். பயந்த மனுசன் எதுக்கு இந்த ஊருக்கு வேலைக்கு வந்தாரு...?" என்று பேச்சுக் கிளம்பி விடும்.

சுகுமாறன் பாடம் நடத்த வந்தால்.

"டேய். பேயடிச்சு செத்த வாத்தியாரு பேயா நடந்து வர்றாருடோய்.'' என்று பள்ளியிலிருக்கும் மாணவ, மாணவிகள் பயந்து ஓடி விடும் அபாயமும் நேர்ந்து விடும்.

இவற்றைக்கூட சுகுமாறன் தாங்கிக் கொள்வான். கிழவியைப் பற்றிய பயத்தில் அவன் இரவுகளில் கைலியை நனைத்து விட்டதாக கிளம்பி விடும் கதையை கீதா செவி மடுத்து விட்டால் தாங்கிக் கொள்வானா...?

அவனால் அதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்பதினால் அவன் தினமும் செத்துப் பிழைத்தாலும் சரி. மனதிலிருக்கும் பயத்தை வெளியில் சொல்லி விடவே கூடாது

என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இரண்டு வருடமாக பேயோட்டிக் கொண்டிருந்தான்.

இப்படி உயிர்பயத்தோடு பேயிருப்பதாக அவன் நம்பும் வீட்டில் காலத்தைக் கழிப்பதற்கான காரணம் அரசப்பட்டினத்தின பெருங்கொண்ட செல்வந்தர் பெற்ற அதிரூப சுந்தரியான கீதாதான்.

‘‘அடேய் மகனே..! கவர்ண்ட்மெண்ட் வேலைங்கிற பேருதான். குடியிருக்க சொந்த வீடு மட்டும்தான் மிச்சம். மத்ததெல்லாம் கையைப் பிடி, மென்னையைப் பிடிங்கிற கணக்குத்தான். இப்படி இழுத்துப் பிடிச்சு செலவளிக்கிற பிழைப்பு என்னோட போகனும். உன் தலைமுறையில அள்ள அள்ளக் குறையாத பணக்காரனா நீ வாழனும். என்னால முடிஞ்சதெல்லாம் உனக்கு ஒரு படிப்பைக் கொடுத்து உன் தங்கையைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்ததுதான். இனிப் புத்தியோட நீதான் பிழைத்துக்கனும். நீ வேலை பார்க்கப் போற அரசபட்டினத்து பண்ணையாரு உன் அம்மாவுக்கு சுற்றி வளைச்ச சொந்தம். அவருக்குப் போனைப் போடறேன். அவரு வீட்டில நீ தங்கி வேலையைப் பாரு.’’ என்று சுகுமாறனின் தந்தையான மணிமாறன் சொன்ன போது.

‘‘என்னது…? அந்தப் பட்டிக்காட்டில நான் தங்கியிருக்கிறதா…? அதுக்கு வேற ஆளைப் பாருங்க. போஸ்டிங் போட்டுட்டதால அங்கே ஜாயின் பண்ணப் போறேன். பக்கத்து டவுனில ரூம் பார்த்து இருந்துக்கிட்டு ரெண்டே மாதத்தில நம்ம

ஊர்ப்பக்கம் டிரான்ஸ்பர் வாங்கிக்கிட்டு வந்துருவேன். அந்தப் பட்டிக்காட்டில யாரு வேலை பார்க்கிறதாம்...?'' என்றுதான் சிலுப்பினான் சுகுமாறன்.

''அறைஞ்சேன்னா பாரு..'' என்று மணிமாறன் சீறிய போதுதான் ஏதோ விவரமிருப்பதை உணர்ந்தான்.

"உனக்குத் தானாவாடா அரச பட்டினத்தில போஸ்டிங் கிடைச்சது...? யாராரையோ பிடிச்சு. அங்கேயிங்கே அலைஞ்சு. நாய் படாத பாடுபட்டு அந்த ஊரில போஸ்டிங் போட வைச்சேன். எதுக்காக...?''

''எதுக்காகப்பா இப்படியொரு கொடுமையைப் பண்ணினீங்க...?''

''புத்தி கெட்டவனே.''

''யாருப்பா...?''

''வேற யாரு...? எல்லாம் நீதான். வாத்தியாரு வேலை கிடைச்சிட்டா நீ புத்திசாலியா ஆகிருவியா...? பொழைக்கத் தெரியாதவன் புத்தி கெட்டவன்தான். எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கப் பாரு.''

''இப்ப என்னத்துக்காக இப்படித் தாளிக்கறிங்க...?''

“அந்த அரசபட்டினத்து பண்ணையாருக்கு ஒரு மகளும், மகனும் இருக்காங்க. பொண்ணுதான் மூத்தது. மூக்கும் முழியுமா அழகா இருக்கும்.”

மணிமாறன் சொல்லச் சொல்ல அப்போதுதான் அவர் எங்கே வருகிறார் என்று புரிந்து கொண்டான் சுகுமாறன்.

“என்ன படிச்சிருக்காம்...?”

"படிப்பாடா முக்கியம்...? பண்ணையாரு தன் பொண்ணு பேரில பக்கத்து டவுனில ஐஞ்சாறு வீடு வாங்கிப் போட்டிருக்காரு. அதுதாண்டா முக்கியம். பொண்ணுக்கு அறநூறு பவுன் நகை போடுவாராம். வைர நகைகள் தனியாம். ரொக்கமா கோடிக் கணக்கில பணத்தைக் கொடுப்பாராம். காராம். நிலமாம். இன்னும் என்னென்னவோ சொல்றாங்கடா. இம்புட்டுச் செல்வத்தோட இருக்கிற பொண்ணை நாம கேட்டா கட்டிக் கொடுத்துருவாங்களா...?”

“அதெப்படிக் கொடுப்பாங்க...?”

“அதுக்குத்தான் அரச பட்டினத்துப் பள்ளிக்கூடத்தில போஸ்டிங் போட வைச்சேன். இப்பன்னா குடியிருக்க வீடில்லைன்னு நீ அவங்க வீட்டில தங்கலாம். சொந்தக்காரனா குடும்பத்தோடு பேசிப் பழகலாம். அந்தப் பொண்ணு மனசில இடம் பிடிக்கலாம். அவங்களுக்கு இவனை விட நல்ல

மாப்பிள்ளை நம்ம பொண்ணுக்கு கிடைக்க மாட்டான்னு தோண வைச்சிரலாம்."

“ஐடியாப்பா."

இப்படி ஐடியா பண்ணி சுற்றி வளைத்த சொந்தத்தை நெருங்கின சொந்தம் போல உருவகப்படுத்தி அரசபட்டினத்து பண்ணையாரின் வீட்டில் ஐக்கியமாகும் திட்டத்தோடு வந்த சுகுமாறனை தனது அம்மா மண்டையைப் போட்ட புதுவீட்டில் குடியிருக்க வைத்து சோதித்து வைத்தார் பண்ணையார்.1 மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்த சுகுமாறனுக்கு துணைக்கு இருக்க என்று அகப்பட்டவன் தான் ஆனந்தன்.

# அத்தியாயம் 8

**சோ**ழியன் குடுமி சும்மா ஆடாது.

சுகுமாறனைப் போன்ற சுயநலவாதி காரணமில்லாமல் நண்பனுக்கு அடைக்கலம் கொடுக்க மாட்டான். நடமாட்டம் இல்லாத ஹாலைக் கடக்கும் ஒவ்வொரு நொடியும் உயிர் போய் உயிர் வரும் அனுபவத்தைப் பற்றி அவனுக்குத்தானே தெரியும்...? உள்ளூர்ககாரர்களை துணைக்கு அழைத்தால் அவன் தொடை நடுங்கியென்ற உண்மையை ஊர் முழுவதும் பரப்பி விட்டு விடுவார்கள். அதனால் பல்லைக் கடித்துக் கொண்டு அந்த வீட்டில் இருந்தவனுக்கு வீடு கிடைக்கவில்லையென்று அலுவலகத்தி தஞ்சமடைந்திருந்த ஆனந்தனைக் கண்டதும் ஆனந்தம் பொத்துக் கொண்டு வந்தது.

சுகுமாறனின் நண்பர்களிலேயே அதிதைரியசாலி ஆனந்தன் மட்டும்தான். அந்த ஆனந்தனை அரச பட்டினத்தில் கண்டதும் தெய்வமே சுகுமாறனின் கதறலைப் பொறுக்க மாட்டாமல் கருணை காட்டி அனுப்பி வைத்த துணையென்று மகிழ்ந்து போய் விட்டான் சுகுமாறன்.

இல்லாவிட்டால் கீதாவைக் கணக்குப் பண்ணுவதற்காக எங்கெங்கோ பயணிக்கும் உறவுமுறை வரைபடத்தை இழுத்து

வளைத்து மாமன்மகன் உறவு கொண்டாடி குடியிருக்கும் வீட்டிற்கு ஆனந்தனை அழைத்துக் கொண்டு வர சுகுமாறனுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது...?

விவரம் தெரிந்த நாளிலிருந்தே அவன் படு உஷார் பேர்வழி. ஒரு கள்ளமிட்டாய் தின்ன வேண்டுமென்றாலும் நண்பர்களைக் கழட்டி விட்டு விட்டு தனியாகத்தான் போய் தின்பான். சொத்துக்காக கல்யாணம் பண்ணிக் கொள்ள நினைக்கும் கீதாவின் வீட்டுக்கு ஆனந்தனைப் போன்ற நண்பனை அழைத்து வர நேர்ந்தது காலத்தின் கட்டாயம்.

'விதி வலியது.' நொந்து கொண்டான் சுகுமாறன்.

சுகமான பணத் தட்டுப்பாடில்லாத செல்வச் செழிப்பான வாழ்க்கைக்காக அவன் எப்படியெல்லாம் பிரயத்தனப் பட வேண்டியிருக்கிறது.!

அழகான கீதாவின் கண்களில் ஆனந்தன் பட்டுத் தொலைத்து விட்டதில் சுகுமாறனுக்கு உடன்பாடில்லை. அதற்காக ஆனந்தனைப் போ என்று அனுப்பி வைத்து விடவும் முடியாது. இரண்டு வருடமாக பீடித்திருக்கும் 'கிழவிப் பேய்...' பயத்திலிருந்து அப்போதுதான் விடுபட்டிருக்கிறான் சுகுமாறன். அன்று இரவுதான் அவனுக்கு நிம்மதியான உறக்கம் வாய்க்க இருக்கிறது. கிடைத்திருக்கும் பாதுகாப்பையும், நிம்மதியையும் விரட்டியடிக்க சுகுமாறனால் முடியவே முடியாது.

கீதாவின் முன்னிலையில் ஆனந்தனை மட்டமாக பேசி ஜெயித்து விடலாம் என்று நினைக்கக் கூட முடியாது. ஆனந்தன் பேசுவதில் படுகில்லாடி. ஆளானப்பட்ட அன்பழகனையே மண்டி போட வைப்பவன். சுகுமாறன் ஒரு வார்த்தை மட்டமாகப் பேசினால் அவன் ஓராயிரம் வார்த்தைகளை மட்டமாகப் பேசி கீதாவின் முன்னிலையில் சுகுமாறனை படுதுச்சமாக்கி விடுவான். அதனால் அந்த முயற்சியைப் பற்றி சுகுமாறனால் யோசிக்கக் கூட முடியாது.

ஆனந்தனை திருப்பி அனுப்புவது வெகு சுலபம்தான். சுகுமாறன் தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டான். அப்படியென்றால் என்ன...? கிலோ என்ன விலை...? என்றெல்லாம் கேட்டு பச்சை பிள்ளை போல இமை கொட்டுவதில் அதிதிறமைசாலி.

“ஆனந்தா..! ஆனந்தா..! எங்க மாமா ஊர்ப் பண்ணையாருடா. சொந்த மருமகன்ங்கிறதினால உன்னை என் வீட்டில் குடி வைச்சா நீ எப்படி உன் நண்பனை வீட்டுக்குக் கூப்பிட்டுக்கிட்டு வரலாம்ன்னு என்னைக் குடைஞ்செடுக்கிறார்டா. எனக்கு வேற வழியில்லைடா. உயிர் நண்பா. நட்பு வேற, சொந்தம் வேற இல்லையா...? என் மாமா பேச்சை நான் தட்ட முடியுமா...? வீடு அவரோட வீடாச்சே. அதனால நீ பெட்டியைக் கட்டிக்கிட்டு உன் ஆபிசுக்குப் போயிருடா..” என்று கண்கலங்க வசனம் பேசினால் ரோசக்கார ஆனந்தன் அதன் பின்னால்

ஓர்நொடி கூட அங்கே தங்க மாட்டான். சுகுமாறன் கண்மூடிக் கண் திறப்பதற்குள் வீட்டை விட்டுப் போய் விடுவான்.

'அதுக்குப் பின்னால்...?'

நினைத்தாலே நெஞ்சம் நடுங்கியது சுகுமாரனுக்கு. பண்ணையாரின் அம்மாக் கிழவிப் பேயுடன் அவன் தனியாக மாரடிக்க வேண்டும்.

அதுக்கு இவனே தேவலாம்.

சுகுமாறன் ஒரு முடிவிற்கு வந்திருந்தான். ஆனந்தனும் துணைக்கு இருக்க வேண்டும். சுகுமாறனின் கீதாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கான லட்சியத்திற்கு அவன் குறுக்கே நிற்கவும் கூடாது. இவை இரண்டிற்கும் என்ன வழியென்று தலை முடியைப் பிய்த்து யோசித்து ஒரு வழியை கண்டு பிடித்திருந்தான்.

ஆனந்தனைப் பற்றி சுகுமாரனுக்கு நன்றாகவே தெரியும். அவன் நியாயவாதி. வாக்குக் கொடுத்து விட்டால் மாற மாட்டான். மனதை அலைபாய விட மாட்டான். கீதாவே நெருங்கி வந்தாலும் விலகிப் போய் விடுவான்.

அப்படியெல்லாம் அவனை செய்ய வைக்கும் திட்டத் தோடுதான் சுகுமாறன் அவனைத் தேடி வந்திருந்தான்.

‘‘காபிக்கென்ன ஆனந்தா. போட்டுக் குடிச்சுக்கிட்டாப் போச்சு. நீ கலந்து கொடுத்ததினால பாராட்ட ஒரு வார்த்தை சொன்னேன்.

நாளைக்கே நீ டயர்டா இருக்கிறப்ப ஒரு வாய் காபிய உனக்குக் கலந்து கொடுக்க மாட்டேனா...?’’

வெள்ளையாக சிரிப்பதைப் போல சிரித்து வைத்தான் சுகுமாறன். அந்த வெள்ளைச் சிரிப்பை நம்ப ஆனந்தன் தயாராக இல்லை. சுகுமாறனின் வினயத்தைப் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். அதனால்

"அப்பவும் ஒரு வாய் காபிதான் தருவியா...? கெட்டிக்காரண்டா நீ.’’ என்றான்.

"ஏம்ப்பா. வாய் வார்த்தைக்கு ஒன்னைச் சொன்னா நீ குதர்க்கமாவே அர்த்தப் படுத்திக்குவியா...? ஒரு வாய் சாப்பிட்டுப் போய்கன்னு சொல்றாங்க. நீ உடனே ஒரு வாய் சோத்தைத்தான் சாப்பிடுவியா...? இப்ப என்னப்பா உனக்கு ஒரு குடம் காபியே போட்டுத்தரேன். வைச்சு வைச்சுக் குடி. போதுமா...?’’

‘‘பால்கார கோனாரே ஒரு குடம் பாலைக் கறக்க மாட்டாரு. நடக்கிறதைப் பேசு.

‘‘பேசிட்டாப் போச்சு. ஆனந்தா.’’

‘‘சொல்லு.’’

"எங்க மாமா இருக்காரே."

‘‘எதிர் வீட்டு பண்ணையாரைத்தானே சொல்ற...?’’

"ஆமாண்டா."

"அவருக்கென்ன...?"

“அவரு ஊர்ப் பண்ணையாரு.”

“இதைத்தானேடா நானும் சொன்னேன்...?”

“இந்த கட்டுப்பாடு அது இதுன்னு இருக்கில்ல. அதில எல்லாம் ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருப்பாரு.”

“இருக்கட்டும். அதில உனக்கு என்னடா கஷ்டம்...?”

“எனக்கு ஒரு கஷ்டமுமில்லடா. உனக்குத்தான் கஷ்டம்.”

“எனக்கு கஷ்டமா...?”

சுகுமாறனை ஒரு மார்க்கமாக பார்த்தான் ஆனந்தன். அவனைப் போன்ற நண்பனை நம்பி அவன் வீட்டில் தங்க வந்திருப்பதைத்தான் கஷ்டமென்று சொல்கிறானோ என்ற சம்சயம் ஆனந்தனுக்கு. இவனுக்கே இவன் புத்தியப் பத்தித் தெரிஞ்சிருக்கு.

“எங்க மாமா மனசில ஒரு ஆசை.”

ஆனந்தனின் சம்சயத்தை உடைத்தான் சுகுமாறன்.

"அவரு ஆசைப்படறதைப் பத்தி நமக்கென்னடா பேச்சு...?” எரிந்து விழுந்தான் ஆனந்தன்.

“இல்லேடா. அவரும் எங்கம்மாவும் பாசமலர் சினிமாவில வாரதைப் போல அண்ணன் தங்கச்சி பாசத்தில உருகறவங்களாம்.”

“இது வேறயா...? அப்புறம்...?”

“எங்க அம்மாவைப் பெத்த பாட்டி சாகக்கிடக்கிறப்ப எங்க மாமா பாட்டியை பார்க்க வந்தாராம்."

எதற்காக இவன் தூண்டிலைப் போட்டு விலாங்கை இழுக்கிறான் என்ற யோசனையோடு கோதுமை மாவு பாக்கெட்டை உடைததுப் பாத்திரத்தில் மாவைக் கொட்டிப் பிசைந்தான் ஆனந்தன்.

சுகுமாறனின் அம்மாவைப் பெற்ற பாட்டியை அரசபட்டினத்தின் பண்ணையார் பார்க்க வந்த கதையை வேலை மெனக்கெட்டு எதற்காக சுகுமாறன் ஆனந்தனிடம் சொல்லிக் கொண்டிருக்கிறான்...?

"அப்ப எங்க பாட்டி மாமா கையைப் பிடிச்சுக்கிட்டு வாக்குக் கேட்டுச்சாம்.''

என்னவென்று என்று கேட்கப் போன ஆனந்தன் அது எதுவாக இருந்தாலும் தனக்கென்ன வந்தது என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு தலையை ஆட்டி வைத்தான்.

‘‘எங்காலத்தோட உங்க அண்ணன் தங்கை பாசம் அத்துப் போகக் கூடாதுடா மகனே. உன் பொண்ணு கீதாவை உன் தங்கச்சி மகன் சுகுமாறனுக்குக் கட்டி வைச்சிருன்னு சொல்லுச்சாம்.''

அப்போதுதான் சுகுமாறன் கதை பிணைவது எதற்காக என்பதை உணர்ந்து கொண்டான் ஆனந்தன். பண்ணையாரின் மகள் கீதா சுகுமாறனுக்கு உரியவள் என்பதை ஆனந்தனுக்கு உணர்த்துகிறானாம்.

என்ன கழுதைக்கு என்று நினைக்க முடியாமல் ஏனோ மனம் வலித்தது ஆனந்தனுக்கு.

தேவதையைப் போன்ற அழகுடன் மிளிர்ந்த கீதாவை நினைத்துக் கொண்டான். அவளுடைய தலைவிதி சுகுமாறனைப் போன்ற கோட்டானுடனா பிணைக்கப்பட்டிருக்கிறது என்ற பரிதாபம் அவனுக்குள் எழுந்தது.

வாழ்க்கையின் ஓட்டத்தில் யாரோடு யார் இணைவார் என்பதைக் காலம்தான் நிர்ணயிக்க வேண்டும்...? இது போன்ற வாக்குறுதிகள் நிர்ணயிக்கக் கூடாது.

இதைச் சொன்னால் சுகுமாறன் ஆனந்தனைச் சும்மா விட்டு விடுவானா...?

‘‘ஒஹோ.’’

‘‘எங்க மாமாவும் கீதாவை எனக்குத்தான் கட்டி வைப்பாருன்னு வாக்குக் கொடுத்திட்டாராம். அப்ப நான் சின்னப் பையன்.’’

"நீயே சின்னப் பையன்னா உன் மாமா பொண்ணு பாவம். பச்சைக் குழந்தையா தொட்டில்ல படுத்து தூங்கிக்கிட்டு இருந்திருக்கும்.’’

'இதைச் சொல்லச் சொல்லி நான் கேட்டேனா...?' சுகுமாறனுக்கு எரிச்சல் வந்தது.

ஆனந்தன் கீதாவைப் பார்த்து 'பாவம்.'' என்று பரிதாபப் படுவது எதற்காக...? அவள் பச்சைக் குழந்தையாய் இருந்ததிற்காகவா...? இல்லை சுகுமாறனுக்குத்தான் அவள் என்று நீலகண்டன் வாக்குக் கொடுத்து விட்டாரே என்பதற்காகவா...?

இரண்டில் எதுவாக இருந்தாலும் சுகுமாரனுக்கு அது ஏற்புடையதாக இல்லை.

# அத்தியாயம் 9

**சு**குமாறனின் மனப்போராட்டத்தை அறிந்தும் அறியாதவன் போல சப்பாத்திக்கு மாவு பிசைந்து கொண்டிருந்தான் ஆனந்தன். வீட்டுக்குள் காலடி பதித்த மறு நொடியிலிருந்து வெகு இயல்பாக அவன் வீட்டோடு ஒன்றிப் போய் செயல்பட ஆரம்பித்து விட்டதில் காண்டாகிப் போனான் சுகுமாறன்.

அவனும்தான் அந்த வீட்டுக்கு குடிவந்த நாள் முதலாக ஒன்ற முனைகிறான். இரண்டு வருடங்களாக அந்த வீடு பேயாட்டம் ஆடி அவனை ஒன்ற விடுவேனா என்று ஒருகை பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஆனந்தனை மட்டும் பயமுறுத்தாமல் ஆட்கொண்டிருக்கிறதே. அது எப்படி...?

இவன் இப்படிப் பயமின்றி கள்ளிச்சொட்டுக்காபி, சப்பாத்தி குருமா என்று ஆண்டு அனுபவிப்பதா என்ற பொறாமையுடன் ஆனந்தனுக்கு அந்த வீட்டைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான் சுகுமாறன். ஆனந்தனைப் பற்றித்தான் அவனுக்குத் தெரியுமே. பேயிருந்தால் அதற்கும் ஒரு தம்ளர் காபி கொடுத்து விட்டால் போச்சு என்று கூட்டுச் சேர்த்துக் கொள்ளும் சூராதி சூரானாயிற்றே.

பேயைப் பற்றிக் கேள்விப்பட்டாலும் பயப்பட மாட்டான்தான். ஆனால் ஒரு நொடியாவது இந்த வீட்டில் வந்து மாட்டிக் கொண்டோமே என்று நினைக்க மாட்டானா என்ற அல்ப ஆசை சுகுமாறனுக்கு. அவனுக்கு அது போதுமே.

"மாமாவுக்கு கொடுத்த வாக்குக்காகத்தான் நான் இந்த பேய் வீட்டில வந்து மாட்டிக்கிட்டு இருக்கேண்டா ஆனந்தா.''

சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்ன சுகுமாறனை நிமிர்ந்து பார்த்த ஆனந்தன் தன் காதில் விழுந்த வார்த்தைகளைத் தான் சரியாகத்தான் புரிந்து கொண்டிருக்கிறோமா என்று சந்தேகப் பட்டான். அவன் புருவங்கள் உயர்ந்தன.

``பேய் வீடா...?!!!...''

"ஆமாண்டா ஆனந்தா. சுகுமாறன் மூக்கை உறிஞ்சினான்.

``போடா டேய்.'' ஆனந்தன்.

``ஹா. ஹா.'' எனச் சிரிக்க ஆரம்பித்தான்.

"நிஜமாத்தாண்டா ஆனந்தா.''

``அடிதாண்டா வாங்கப் போற. உனக்குப் பொண்ணு கொடுக்கப் போகிற மாமன் கட்டியிருக்கிற வீட்டுக்குப் பேய் வீடு'ன்ன பேர் கட்டறயே. இது உன் மாமன் காதில விழுந்தா என்னாகும்ன்னு நினைச்சுப் பார்த்தியா...? அதுக்கப்புறம் அவர் உனக்குப் பொண்ணைக் கட்டிக் கொடுப்பாரா...?''

உருளைக் கிழங்கை பாத்திரத்தில் போட்டு தண்ணிர் ஊற்றியபடி கேட்டான் ஆனந்தன். இதில இப்படி ஒன்னு இருக்கா...? அரண்டு போய் விட்டான் சுகுமாறன். பேயை விட இது ஆபத்தான விவகாரமாச்சே.

விளக்கெண்ணையைக் குடித்தைப் போல மாறி விட்ட நண்பனின் முகத்தை ஒரக்கண்ணால் பார்த்தபடி கேஸ் ஸ்டவ்வைப் பற்ற வைத்து பாத்திரத்தை அடுப்பில் வைத்தான் ஆனந்தன்.

“என்னடா ஆனந்தா. நீயே போய் சொல்லிக் கொடுத்துட்டு வந்துருவ போல இருக்கே.” அழமாட்டாத குறையாய் சொன்னான் சுகுமாறன்.

“எனக்கேண்டா அந்த வேலை...? அப்படியெல்லாம் நான் செய்ய மாட்டேன். கவலையை விடு. யாமிருக்க பயமேன்...?”

ஆனந்தனின் அபயமொழி சுகுமாறனின் காதுகளில் 'யாமிருக்க பயமே...' என்று விழுந்து தொலைக்க அவன் அலறிவிட்டான்.

“என்னடா நீ...? 'யாமிருக்க பயமே.' ங்கிற பேய் சினிமாவோட பேரைச் சொல்ற...?”

“அது பேய் சினிமா இல்லை. பேயைப் பத்தின சினிமா.. ‘யாமிருக்க பயமேன்.'ங்கிறது முருகனோட அருள் வாக்கு. இதையும் மத்ததையும் முடிச்சுப் போட்டேன்னு வைய்யி. நண்பன்னு கூடப் பார்க்க மாட்டேன்.”

வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளியென்று எடுத்துக் கழுவி தட்டில் பரப்பிக் கத்தியால் அவற்றைப் பொடிப்பொடியாக நறுக்கியபடி எச்சரித்தான் ஆனந்தன். பேச்சு பேச்சாக இருக்கக் காரியத்தில் கண்ணாக இருந்தவனைப் பார்த்து பற்றிக் கொண்டு வந்தது சுகுமாரனுக்கு.

மாமா வீட்டில் காபி குடிப்பேன். மாமா வீட்டில் சாப்பிட்டுருவேன் என்று ஊர் முழுக்க அவன் பரப்பும் செய்தியெல்லாம் சும்மா. நீலகண்டனின் வீட்டிற்கு உணவு நேரத்தில் உறவினர்கள் போய் விட்டால் சாப்பிட வைத்துத்தான் அனுப்புவார். அது போன்ற தருணங்களில் கிடைக்கும் சாப்பாட்டைத்தான் அனைத்து நேரங்களிலும் கிடைக்கும் சாப்பாட்டைப் போல சுகுமாறன் பீற்றிக் கொண்டிருக்கிறான். அவன் போகும் நேரங்களெல்லாம் உணவு உண்ணும் நேரமாக இருப்பதில்லையே.

"மகராசன் வீட்டில் நினைச்ச நேரத்தில சாப்பிட்டுத் தொலைக்குதுகளே.'

முதல்நாள் இரவு எட்டு மணிக்கு உணவு கிடைத்ததால் மறுநாளும் அதே போல ஆஜராவான் சுகுமாறன். இப்போதுதான் சாப்பிட்டு முடித்தோம் என்று பாத்திரத்தைக் கழுவ போட்டிருப்பாள் நீலகண்டனின் சகதர்மிணியான பார்வதி.

'வடை போச்சே.' என்ற ரீதியில் பரிதவித்துப் போகும் சுகுமாறன் அரசபட்டினத்து டீக்கடையின் இரவு நேரத்து காய்ந்து போன புரோட்டாவை உள்ளே தள்ளி விட்டு மறுநாள் மாலையில் ஏழு மணிக்கெல்லாம் நீலகண்டனின் வீட்டிற்குப் போய் விடுவான். அவர்கள் வீட்டில் பேசுவார்கள், பேசுவார்கள், பேசிக் கொண்டே இருப்பார்கள்.

பத்து மணியானாலும் பந்தி போடும் நினைவில்லாமல் பேசிக் கொண்டிருப்பவர்களிடம் அதற்கு மேலும் கொலைபட்டினியாக பேசிச் சிரிக்கும் திராணியின்றி டீக்கடையின் புரோட்டாவைத் தேடிப் போவான் சுகுமாறன். அங்கே காய்ந்து போன புரோட்டாவுக்கும் தட்டுப்பாடு வந்து காலியாகி இருக்கும்.

டீக்கடைக்காரன் பன்னை பிய்த்துக் கொடுப்பான். மாமன் வீட்டில் ஏழு மணிக்கே சாப்பிட்ட சாப்பாடு செரித்துப் போனதாக புளுகி விட்டு வரட்டியைப் போன்ற பண்ணைப் பிய்த்து தண்ணிப் பாலில் நனைத்து உள்ளே தள்ளி விட்டு இரவு முழுவதும் பசிக்கும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு தவிப்பான் சுகுமாறன். இதில் டீக்கடைக்காரனிடம் பொய் வேறு சொல்ல வேண்டும்.

‘‘ராத்திரி பன்னெண்டு மணியானாலும் பசிக்குதுன்னு எங்க மாமா வீட்டில போய் நின்னாப் போதும். நடுராத்திரின்னு கூடப் பாக்காம எங்கத்தை அடுப்பங்கரைக்குப் போயி எதையாவது

ஆக்கிக் கொண்டாந்து குமிச்சுருவாங்க. அப்படிச் செஞ்சா நல்லவா இருக்கும்...?''

இதுபோன்ற கொடுமைகளைத் தவிர்க்க மரியாதையாக நேரா நேரத்திற்கு மெஸ்ஸில் மொக்கி விடுவான். ஏதேனும் ஓர் நாளில் இசகுபிசகாக நீலகண்டனின் குடும்பம் சாப்பாட்டுத்தட்டில் கை வைத்திருக்கும் நேரத்தில் இவன் போய் நின்று விட்டால் இவனுக்கும் ஒரு பிடி உணவு ஈயப்படும். அதை முழுநாளும் கிடைக்கும் உணவைப் போல இவன் ஊர் முழுக்கப் பரப்பிக் கொண்டிருப்பான்.

அப்படி உணவுக்காக அடுத்தவரின் கையை எதிர்பார்க்காமல் தன் கையே தனக்கு உதவி என்று உருளைக்கிழங்கு கூட்டைத் தயாரித்து இறக்கிய ஆனந்தனின் கை மணம் நாசியைத் துளைத்ததில் ஆற்றாற்றுப் போனான் சுகுமாறன்.

அடுத்து எண்ணைச்சட்டி அடுப்பில் ஏறியது. பிசைந்து வைத்திருந்த மாவு சப்பாத்திக்கானது இல்லை. பூரிக்கானது என்பதில் சுகுமாறனின் வயிறு பசித்தது. நாவில் எச்சில் ஊறியது.

‘‘பூரியாடா போடப் போற...?''

"ஆமாண்டா. இன்னைக்கு உன் மாமா வீட்டு விருந்தைத் தியாகம் பண்ணிட்டு எனக்குக் கம்பெனி கொடு.''

சுகுமாறனுக்கும் பூரிகிழங்கு கிடைக்கும் என்பதை உறுதி படுத்தினான் ஆனந்தன். ஆஹா என்று மகிழ்ந்து போனான் சுகுமாறன்.

"இப்படி டேஸ்டான பூரி கிடைச்சா மாமன் வீட்டுப் பக்கம் தலை வைத்துக் கூடப் பாக்க மாட்டேனே.."' இவன் மூன்று வேளை உணவையும் உறுதிப் படுத்திக் கொள்ள முனைய.

‘‘அதுக்கென்னடா. நீ வெங்காயத்தை உரிச்சுக் காய் நறுக்கிக் கொடுத்தா நான் பூரிக்கு மாவு பிசைஞ்சுட்டுப் போறேன். நீ பூரி மாவை உருட்டிக் கொடுத்தா எண்ணையில போட்டு எடுத்துக் கொடுத்துட்டுப் போறேன். எனக்கும் சமையல் செய்ய ஒத்தாசைக்கு ஆள் கிடைக்கும்ல.’’

என்று சமையல் வேலையை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பாக சுட்டிக் காட்டி விட்டான் ஆனந்தன்.

‘‘செய்துட்டாப் போச்சு." உற்சாகமானான் சுகுமாறன்.

பூரிகளைப் போட்டு எடுத்து இரண்டு தட்டுகளிலும் நிரப்பி ஓரமாக உருளைக்கிழங்கு கூட்டைப் பரிமாறி அங்கே கிடந்த டைனிங் டேபிளில் வைத்து விட்டு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான் ஆனந்தன்.

‘‘வாடா சாப்பிடலாம்."

‘‘வந்துட்டாப் போச்சு.’’

அதி வேகத்தில் நாற்காலியில் உட்கார்ந்த சுகுமாறன் அதைவிட வேகமாக பூரி கிழங்கை காலி செய்தான். செம பசியில இருந்திருக்கான். ஆனந்தனின் மனம் இளகியது. வீட்டைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டவன்.

''அழகான, வசதியான வீடு. புதுசா ஒரு வீட்டுக்கு குடி வந்திருக்கிற ஃபீலிங்கே இல்லை. கேசுவலா காபி, டி.பன்னு வேலையை ஆரம்பிக்க முடியுது. இதைப் போய் பேய் வீடு ன்னு பேர் கட்டறயே. உனக்கு மனச்சாட்சி இருக்கா...?'' என்று சுகுமாறனை கடிந்து கொண்டான்.

''உனக்குத் தெரியாதுடா ஆனந்தா. இந்த ஹாலில கட்டிலைப் போட்டுப் படுத்திருந்த பாட்டி ஒன்னு தூக்கத்திலேயே மண்டையைப் போட்டிருச்சாம்.''

''அதுக்கு...? பேய் உலாவற வீடுன்னு சொல்லுவியா...? பாவம். வயசானவங்க. இயற்கையான முறையில உயிரை விட்டிருக்காங்க. அவங்க சாமியோட சேர்த்திடா. இனிமேலும் இப்படிப்பினாத்தாதே. அது தப்பு.''

ஆனந்தனின் அதட்டலில் வாயை மூடிக் கொண்டான் சுகுமாறன். ஆனந்தனால் மட்டும் எப்படி இப்படித் தெளிவாக சிந்திக்க முடிகிறது என்ற ஆச்சரியம் அவனுக்குள் வந்தது.

# அத்தியாயம் 10

**மெ**யில் பேக்கை வெட்டிப் பறத்திக் கொண்டிருந்தான் அன்பழகன். முதல் நாளைய வேலைகளின் டெய்லி அக்கவுண்டை சரிபார்த்து அதற்கான வவுச்சர்களுடன் கட்டி வைத்து விட்டு நிமிர்ந்த ஆனந்தனின் முன்னால் அன்றைக்கு வந்திருந்த அக்கவுண்ட் பேக்கை வெட்டி வைத்தான். பிரான்ச் ஆபிஸ்களுக்குப் போக வேண்டிய தபால்களை பிரித்துப் போட்ட ஆனந்தன் அவற்றுக்கான பைகளைக் கட்டச் சொன்னான். சைக்கிள் பெல்லை அடித்தபடி வந்த சிலுவூர், பெருவூரின் ஈ.டி.டி.ஏக்கள் இருவரும் சற்று நேரம் வாய் வளர்த்து விட்டுப் பைகளைத் தூக்கிக் கொண்டு பறந்தார்கள். மூச்சு விடநேரம் கிடைத்ததும் சுழல் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து சுழன்று திரும்பிய ஆனந்தன்.

‘‘டீ குடிக்கலாமா அன்பு...?' என்று கேட்டான்.

"குடிச்சாத்தான் வேலை நடக்கும் சார்.' என்ற அன்பழகன்.

கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு டீக்கடைப் பக்கம் தலைமறைவானான்.

வீட்டில் டீ போட்டு பிளாஸ்க்கில் நிரப்பிக் கொண்டு வரத்தான் நினைத்தான் ஆனந்தன். அதை செயல்படுத்துவதற்கு பலத்த எதிர்ப்பைத் தெரிவித்து விட்டான் அன்பழகன்.

“ஆயிரம்தான் சொல்லுங்க சார். டீக்கடை பெஞ்சில உட்கார்ந்து நாலு பேரை வம்பிழுத்து. ஊருநடப்பு, நாட்டு நடப்பப் பத்திப் புறணி பேசிக்கிட்டே டீயைக் குடிக்கிறதில கிடைக்கிற சுகம் நீங்க கொண்டு வர்ற பிளாஸ்க்கில இருக்கிற டீயைக் குடிக்கிறப்பக் கிடைச்சிருமா...? அந்த சுகமே தனி சார்.”

விழிகள் செறுகப் பேசுபவன் டீயைப் பற்றித்தான் பேசுகிறான் என்று சொன்னால் சின்னக் குழந்தைகூட நம்பாது. அந்த ரீதியில் பேசி வைத்தான் அன்பழகன். இப்படிச் சொக்குகிறவனை பிளாஸ்க் டீயில் அடைப்பது உத்தமமல்ல என்று தண்ணிர் தெளித்து டீக்கடைப் பக்கம் பற்றி விட்டு விட்டான் ஆனந்தன்.

காலை வேலைகள் முடிந்து ஆசுவாசமாகும் பதினொரு மணியளவில் டீக்கடைப் பக்கம் தாவா விட்டால் அன்பழகனுக்கு தலையே வெடித்து விடும்.

“டீ குடிச்சுட்டு வர்றேன் சார்." என்று போகிறவன் ஒரு மணி நேரம் கழித்துத்தான் திரும்பி வருவான்.

வரும் போது ஒரு கையில் ஆனந்தனுக்கான டீயையும் வாய் நிறைய ஊர் நடப்பைப் பற்றிய செய்திகளையும் சுமந்து வருவான். ஆனந்தன் கேட்கிறானோ இல்லையோ. அன்பழகனின் வாய் ஓயாமல் பேசிக் கொண்டேயிருக்கும்.

'இவனுக்கு வாய் வலிக்காதா...?'

சந்தேகம் வந்தாலும் ஆனந்தன் அதைக் கேட்க மாட்டான். அளப்பறை பண்ணுவதைப் போலத் தோன்றினாலும் அன்பழகன் ஒரு சிறந்த விசுவாசி.

ஆனந்தனின் மீது ஆழ்ந்த அன்பு கொண்டவன். அதை வெகு சீக்கிரத்தில் புரிந்து கொண்டுவிட்ட ஆனந்தன் அன்பழகனுடன் இணக்கமான நட்பைப் பூண்டு விட்டான்.

எல்லாம் நான்தான் என்று சிலும்பும் அன்பழகனின் உழைப்பு அளவு கடந்தது. இதுதான் என் வேலை என்று அளந்து வேலை பார்க்காமல் ஆத்மார்த்தமாக வேலை பார்க்கும் தபால்துறை ஊழியன் அவன். ஆனந்தனுக்கு ஆச்சரியமாக இருக்கும். இங்கு பார்க்கும் வேலையை வேறு எங்கு பார்த்தாலும் நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் சம்பாதிக்கலாமே என்ற எண்ணம் தோன்றும்.

கட்டிடத்துறையிலிருந்து, பிளம்பர், எலக்ட்ரீசியன் என்று தொழில் தெரிந்த அத்தனை பேரும் வேலைக்கேற்ற ஊதியம் வாங்கிக் கொண்டிருக்க. ஐந்து மணி நேரம்தான் என்று வரையறுக்கப்பட்ட வேலை நேரத்தைப் பற்றிப் பேச்சே எடுக்காமல் ஆபிஸ் திறப்பதிலிருந்து மூடுவதுவரை அயராமல் உழைக்கும் ஈ.டி.டி ஏக்களுக்கு என்ன கிடைக்கிறது…?

'ஐயா போஸ்ட் ஆபிசில வேலை செய்கிறாரு' என்ற பெருமை மட்டும்தான் கிடைக்கிறது.

பணி பாதுகாப்பு, பென்சன் என்ற எதுவுமின்றி தபால் துறையின் அஸ்திவாரமாக உழைக்கும் அடிமட்ட ஊழியர்கள்தான் கிராமப்புறங்களில் தபால் துறையின் சேவையை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்காமல் கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி கம்யூட்டர்களை இறக்குமதி செய்து துறையை நவின மயம்போல காட்ட முனைந்து கொண்டிருக்கிறது தபால் துறை.!

நிரந்தரப் படுத்தப் படாத வேலையில் இருக்கிற நினைவின்றி வாய் நிறைய சிரிப்பும் பேச்சுமாக அலுவலகத்திற்கு உயிர்ப்பூட்டிக் கொண்டிருப்பது ஈ.டி.டி.ஏ ஊழியர்கள்தான்.

‘‘வாத்தியாரு என்ன சொல்றார் சார்…?’’

ஆனந்தனின் முன்னால் டீத்தம்ளரை வைத்து விட்டு அலுவலகத்தின் மூலையில் கிடந்த கோணிப்பைகளை மடித்து வைத்தபடி கேட்டான் அன்பழகன்.

‘‘என்னத்தைச் சொல்றான். தினமும் சொன்னதையேதான் திருப்பித் திருப்பிச் சொல்றான்." டீயைக் குடித்தபடி அசுவராஸ்யமாக சொன்னான் ஆனந்தன்.

சுகுமாறன் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தான். எங்கே ஆரம்பித்தாலும் அவனுடைய பேச்சு அங்கே சுற்றி. இங்கே சுற்றி. அவன் கீதாவை மணக்க வேண்டியவன் என்பதில்தான் வந்து முடியும்.

‘‘எங்க ஊர்ப்பக்கம் போஸ்டிங் வாங்கிக்காம இந்த அரச பட்டினத்தில நான் குப்பை கொட்டறதுக்கான ஒரே காரணம் கீதாதான் ஆனந்தா. அவதான் எனக்குன்னு சின்ன வயசில இருந்து சொல்லிச் சொல்லி வளர்த்துட்டாங்க.’’

‘‘இதைப் பத்தி நீ ஒரு தடவை கூடச் சொன்னதே இல்லையேடா..’’

ஆனந்தன் யதார்த்தமாகத்தான் கேட்டு வைத்தான். சுகுமாறனின் முகம் கருத்து விட்டது. பதில் சொல்ல

வார்த்தைகளைத் தேடினான். இவன் எதற்காக இந்தப் பாடு படுகிறான் என்று யோசித்தான் ஆனந்தன். அவன் கேட்ட கேள்வி என்ன அத்தனை கடினமாகவா இருக்கிறது...?

‘‘இது பெர்சனல் ஆனந்தா. மத்தவங்ககிட்ட ஷேர் பண்ணிக்கிற விசயமில்லை.’’

இதைச் சொல்லவா இத்தனை நேரம் யோசித்தாய் என்று கேட்க வாயெடுத்துத் தொலைகிறான் என்று விட்டு விட்டான் ஆனந்தன்.

‘‘இப்போ மட்டும் ஏண்டா ஷேர் பண்ணிக்கிற...? இப்பவும் இது உன்னுடைய பெர்சனல்தானே...?’’

‘‘இப்ப நிலைமையே வேறடா. சொல்லித்தானே ஆகனும்...?’’

"அப்படி என்னத்தடா நிலைமையைக் கண்டுட்ட...?’’

"நீயோ இளம் வயசு.’’

"ஆமாண்டா. நான் இளவயசு. நீ கிழவன். ஹா..ஹா...ஹா..."

ஆனந்தன் சிரித்தான். சுகுமாறன் அவனின் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனந்தனின் நகைச்சுவையை ரசிக்காத முகபாவத்தோடு.

"நீ இளவயசா இருக்கறப்ப நான் மட்டும் கிழவனா கிருவேனா...?’’ என்று ஒரு தினுசான குரலில் வினவினான்.

‘‘என்னடா நீ...? விளையாட்டுக்குப் பேசினதை வினயமா எடுத்துக்கற...?’’

‘‘விளையாட்டுக்கும் ஒரு அளவிருக்கனும்.’’

’’ஆகட்டும்டா. நீயே அளந்து ஒரு கோட்டைப் போட்டுரு.’’

‘‘ஆனந்தா.’’

‘‘என்னடா."

‘‘இது விளையாட்டில்லை. என் வாழ்க்கை.

‘‘அடிங். இப்ப என்ன அலுவலுக்கு இம்புட்டு சீரியஸா முகத்தை வைச்சுக்கிட்டு டயலாக் பேசற...?’’

‘‘கீதா சின்னப் பொண்ணு. கட்டிக்கப் போகிறவன் எதிர் வீட்டில இருக்கேன்னு இங்கேயே பார்த்துக்கிட்டு இருக்கும். என்னைப் பார்க்கிற அந்தப் பார்வையை உன்னைப் பார்க்கிறதா நீ நினைச்சுரக் கூடாது."

"டேய்..."

திகைத்து விட்டான் ஆனந்தன். அதுவரை சுகுமாறன் எதையோ பேசுகிறான் என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.

இப்படியா தேங்காயை உடைத்ததைப் போலச் சொல்லி வைப்பான்...?

''உன்னை நம்புவேன் ஆனந்தா. உன் வயசை நம்ப மாட்டேன். கீதாவைப் போல அழகான பொண்ணு பேச வந்தா பேசத்தான் உனக்குத் தோணும். அப்படித் தோணறப்ப என்னை நீ நினைச்சுக்கடா. என் பாட்டிக்கு என் மாமா கொடுத்திருக்கிற வாக்கை நினைச்சுக்க. கீதாவுக்காக இந்தப் பட்டிக்காட்டில நான் குப்பை கொட்டிக்கிட்டு இருக்கிறதை நினைச்சுக்க. பேச நினைக்கிற எதையும் நீ பேச மாட்ட.''

''டேய். சும்மா பினாத்தாம தூக்கம் வந்தா போய் தூங்கு.''

''இல்லேடா ஆனந்தா. நான் என்ன சொல்ல வர்றேன்னா.''

''எதையும் சொல்ல வேணாம். சொன்ன வரைக்கும் போதும். கேட்டுக்க சுகுமாறா. நான் அரசபட்டினத்துக்கு வேலை பார்க்கத்தான் வந்திருக்கேன். வேற எதுக்கும் வரலை.''

ஆனந்தனின் ஆழ்ந்த கோபத்தில் வாயடைத்துப் போனவனாகத் தூங்கப் போய் விடுவான் சுகுமாறன். மறுநாள் பேசும் போது முதல்நாள் சொன்னதில்தான் வந்து நிற்பான்.

"அவ சின்னப் பொண்ணுடா. பெரியவங்களோட வாக்குப் பத்திப் புரியாத வயசு. என் மாமா மானஸ்தர். கொடுத்த வாக்கைக் காப்பாத்த முடியலைன்னா உயிரை விட்டிருவார்.''

‘‘அதுக்கு என்னை என்னடா செய்யச் சொல்ற...?"

"வேலையை ரிசைன் பண்ணிட்டு ஊரைப் பாத்துப் போகச் சொல்றியா...?''

‘‘ஆனந்தா.''

‘‘பின்னே என்னடா...? கூட இருக்கலாம் வான்னு கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டு இந்தப் பாட ுபடுத்தறயே. இதுக்கு நான் ஆபிசிலேயே தங்கி இருந்திருக்கலாம்.''

‘‘ஐயையோ. என்னை இந்த வீட்டில தனியா விட்டுட்டுப் போறேன்ங்கறியா...? வேண்டாம்டா ஆனந்தா.''

‘‘எனக்கென்னவோ உன்கூட நான் இருக்கறது சரிவராதுன்னு தோணுது.''

“எல்லாம் சரிவரும். நீ மட்டும் கீதாவைக் கண்டுக்காம இருந்துக்கனும். அவ பேச வந்தாலும் பேசக் கூடாது.”

“அது கஷ்டம். பொதுவாப் பேசினாப் பேசுவேன். தனிப்பட்ட முறையில எந்தப் பேச்சையும் பேச மாட்டேன். போதுமா...?"

தன்னையும் அறியாமல் வாக்குக் கொடுத்து விட்டான் ஆனந்தன். எதற்காக அப்படியொரு வாக்கைக் கொடுத்தான் என்று அவன் மறுகும் நாளும் வரும் என்று அவன் கண்டானா என்ன...?

# அத்தியாயம் 11

“**சொ**ல்கிறதையே திரும்பத் திரும்பச் சொல்றாரா...?”

சுவராஸ்யமாகிப் போனான் அன்பழகன்.

எப்படித்தான் இப்படி ஒவ்வொரு நாளையும் சுவராஸ்ய மானதாக ஆக்கிக் கொள்கிறானோ என்ற வியப்பு வந்தது ஆனந்தனுக்கு.

அன்பழகனுக்கு மட்டுமா அந்த நாள் சுவராஸ்யமானதாக மாறுகிறது...? ஆனந்தனுக்கும் சேர்த்து அல்லவா மாறுகிறது.!

இவன் மட்டும் இல்லைன்னா இந்த அரசபட்டினத்தில எனக்கு மூச்சு முட்டியிருக்கும். நன்றியுடன் நினைத்துக் கொண்டான் ஆனந்தன்.

“என்னத்தைச் சொல்வாரு...? பண்ணையாரு அவரோட மாமன். பண்ணையாரு மக அவருக்கு மாமன் மக. அதைக் கட்டிக்கிற சொந்தம் இவருக்கு மட்டும்தான் இருக்குன்னு அளந்திருப்பாரு.”

சுவாதீனமாக அன்பழகன் சொன்னதில் ஆனந்தனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

“என்னப்பா பக்கத்தில நின்னு கேட்டதைப் போலச் சொல்ற...?” ஆச்சரியமானான்.

“உங்ககிட்ட மட்டுமில்ல சார். இந்த ஊருப்பூராவும் அப்படித்தான் சொல்லிக்கிட்டு இருக்காரு. நீங்களாவது பரவாயில்லை. இந்த ஒரு மாசமாத்தான் இந்த இம்சையை அனுபவிக்கிறிங்க. இந்த ஊருக்காரங்க பாவம். ரெண்டு வருஷமா இதே இம்சைதான்னா பாத்துக்கங்களேன். மனுசன், நம்ம காதில ரத்தம் வழிஞ்சாலும் பேச்சை நிப்பாட்ட மாட்டாரு. அளந்துக்கிட்டே இருப்பாரு.”

லெட்டர் பாக்சைத் திறந்து எடுத்துக் கொண்டு வந்து கொட்டியிருந்த கடிதங்களை அடுக்கியபடியே சொன்னான் அன்பழகன். இருந்தாலும் இருக்கும்.

தனது ஒரு மாத அனுபவத்தின் அவஸ்தையில் நினைத்துக் கொண்டான் ஆனந்தன்.

“நட்ட நடுராத்திரியில டீக்கடையை மூடிட்டுத் தூங்கறவனைத் தட்டி எழுப்பி புரோட்டா கேப்பாரு. ஐயோ பாவம்ன்னு

கண்ணைக் கசக்கிக்கிட்டு எழுந்திருச்சு. மீந்திருக்கிற புரோட்டாவக் கொடுத்துப் பாலையும் காச்சிக் கொடுத்தா, தின்னுட்டுத் தூங்கப் போகாம என் மாமா வீட்டில கோழியடிச்சு குழம்பு வைச்சுப் போட்டாங்க. பலமா வெட்டினேன். அப்படிச் சாட்பிட்டும் இப்பப் போய் பசிக்குது. மாமாவுக்குத் தெரிஞ்சா போதும். அத்தையை எழுப்பி முட்டைக் குழம்பு செய்யச் சொல்லி இலையைப் போட்டிருவாரு. நான்தான் வேணாம்ன்னு உன்னை எழுப்பி புரோட்டா சாப்பிட்டுட்டுப் போகலாம்ன்னு வந்தேன்னு டீக்கடைக்காரனைத் தூங்க விடாம ரம்பம் போடுவாரு.''

அடுக்கிய கடிதங்களில் டேட் ஸ்டாம்பை அடித்தபடி அன்பழகன் விவரித்த தினுசில்.

''ஹா. ஹா.'' என்று சிரித்து விட்டான் ஆனந்தன்.

''இதில ஒரு கூத்து என்னன்னா. நம்மாளு கோழியடிச்சு குழம்பு சாப்பிட்டக் கதையைச் சொன்ன நாளு. முழு அம்மாவாசை நாளு.''

அன்பழகன் மர்மமாக இமைகளைச் சிமிட்ட.

''அதுக்கென்னப்பா...?' என்று கேட்டான் ஆனந்தன்.

"அம்மா, அப்பா இல்லாத பண்ணையாரு அம்மாவாசை விரதம் இருக்கிறவரு. அன்னைக்குப் போயி கோழியடிச்சு குழம்பு வைக்கச் சொல்வாரா...?''

அன்பழகன் கேட்டபோதுதான் ஆனந்தனுக்கு விவரமே புரிந்தது.

‘‘அடப்பாவி..! புளுகினானா...?''

"ஆமாம் சார். அரசபட்டினத்து ஆளுகளுக்கும் அம்மாவாசைக்கும் இருக்கிற சம்பந்தம் புரியாம இவன் புளுகின புளுகல் இந்த சுத்து வட்டாரம் முழுக்கப் பரவிருச்சு. அதுக்கப்புறமா இவருக்கு. 'கோழிக் குழம்பு.'ன்னு பட்டப் பேரே கொடுத்துட்டாங்கன்னா பாருங்களேன்."

‘‘அது இவனுக்குத் தெரியுமா...?''

‘‘தெரியாம இருக்குமா...? தெரிஞ்சதைப் போலக் காட்டிக்க மாட்டாரு.

‘‘கில்லாடிதான்.."

‘‘வெறும் கில்லாடியில்ல. ஜெகஜாலக் கில்லாடி சார்."

‘‘ஹா. ஹா.''

சிரித்துக் கொண்டே கம்யூட்டரின் கீபோர்டைத் தட்டி வேலையைப் பார்க்க ஆரம்பித்தான் ஆனந்தன்.

“என்ன அன்பு. இது போஸ்ட் ஆபிசா இல்ல கிளப்பா...? சிரிப்பு கொடி கட்டிப் பறக்குது...?”

தேனினும் இனிய பெண் குரலின் கிண்டலில், ‘எவ அவ...?’ என்று நிமிர்ந்து பார்த்த ஆனந்தனுக்கு வாயடைத்துப் போனது.

அங்கே பாவாடை தாவணியில் அழகுச் சிலையாக நின்றிருந்தாள் கீதா. அவளது துளைக்கும் பார்வை ஆனந்தனைத் துளைத்துச் சங்கடப் படுத்தியது.

'இவ என்ன இப்படிப் பார்க்கிறா...?’ பதிலுக்குப் பார்க்க முடியாமல் தவித்துப் போனான் அவன்.

அது என்னவோ கீதாவைப் பார்க்கும் போதெல்லாம் அவன் மனதில் ஆயிரம் வயலின்களின் இசை மொத்தமாக கேட்டுத் தொலைத்தது. அவளுக்கும் சுகுமாறனுக்கும் இடையில் இருக்கும் பந்தம் நினைவுக்கு வர மறுத்தது.

‘ஊஹிம். இது வேலைக்கு ஆகாது.'

வலுக்கட்டாயமாக பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

ஆனந்தனின் மௌனத்தில் யோசனையான அன்பழகன் கடிதங்களை அம்போ என்று விட்டு விட்டு ஆனந்தனின் பக்கம் வந்து ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

‘‘போஸ்ட் ஆபிசுக்காரங்களும் மனுசங்கதாம்மா. நாங்க சிரிக்கக் கூடாதுன்னு சட்டம் ஏதும் இருக்கா..."

‘‘அதுசரி. எல்லாத்துக்கும் சட்டம் பேசிருவீங்களே.’’

‘‘இல்லைன்னா ஏமாந்த சோணகிரி போஸ்ட் ஆபிசுக்காரன்தான்னு இழுத்து வைச்சு தலையில மிளகாயை அரைச்சுருவீங்களே.’’

சரிக்குச் சரியாக அன்பழகன் கொடுத்த பதிலடியில் ஆனந்தனின் இதழோரம் சிரிப்பு மலர்ந்தது. அதை ஓரக் கண்ணால் பார்த்த கீதா.

‘‘அடியாள் வைச்சிருக்கிற ஆளுகளைப் பத்திக் கேள்விப் பட்டிருக்கேன். பதில் பேசறதுக்குன்னே ஒரு ஆளை ரெடி பண்ணி வைச்சிருக்கிற ஆளை இப்போத்தான் பாக்கிறேன்.’’ என்றாள்.

அவள் சொல்வது ஆனந்தனைத்தான் என்று அன்பழகனுக்கு அப்பட்டமாகப் புரிந்தது. ஆனந்தனோ அது புரியாதவனைப்

போல முகத்தை வைத்துக் கொண்டு கம்யூட்டரே கண்ணாக இருந்தான்.

'இந்த மனுசன் ஜகா வாங்கற ஆளில்லையே.'

தாடையைத் தடவினான் அன்பழகன். ஏதேனும் ஓர் பதில் வார்த்தையை உதிர்த்து விடுவானா என்று கீதா ஆர்வமாக பார்த்து வைத்தாள். ஆனந்தன் அசையவே இல்லை. ஏமாற்றத்துடன் அன்பழகனைப் பார்த்து.

‘‘இப்படித்தான் மக்கள்கிட்ட ஊமை வேசம் போடுவீங்களா...? இருங்க. உங்க போஸ்ட் மாஸ்டர் ஆபிசுக்கு வர்ற பப்ளிக்கை ஏன்னு கேக்கறதில்லைன்னு ஒரு கம்ப்ளெயிண்ட் எழுதிப் போடறேன்.’’ என்று முறைத்தாள்.

‘‘எங்களை மிரட்டறதுக்கு கம்ப்ளெயிண்ட்டுன்னு ஒன்னைக் கண்டு பிடிச்சு வைச்சிருக்கீங்கம்மா. உச்சி குளிர்ந்து போகுது. வீட்டை மறந்து ஆபிசே கதின்னு உக்காந்திருக்கிற போஸ்ட் ஆபிஸ்காரங்களுக்கு மெடல் கொடுக்க வேணாம். இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கம்ப்ளெயிண்ட் கொடுக்காம இருந்தாப் போதும்.’’ பதிலுக்கு முறைத்தான் அன்பழகன்.

‘‘பேச்சுக்கொன்னும் குறைச்சலில்லை. என்கூடச் சண்டைக்கு வர்றியே. நான் வந்து இம்புட்டு நேரமாகுது. என்ன வேணும்ன்னு ஒரு வார்த்தை கேட்டாரா உன் போஸ்ட் மாஸ்டர்...? அவரைக் கேட்க வேண்டியதுதானே...?’’

‘‘அம்புட்டுத்தானே. இதோ கேக்கறேன். ஏன் சார். கீதாம்மா சொல்றதும் சரிதானே. பப்ளிக் வந்தா என்ன ஏதுன்னு நீங்க கேக்க வேணாமா...?’’

சடாரென்று கட்சி மாறினான் அன்பழகன். வேறு வழியில்லாமல் காதலியைப் பிரிவதைப் போலக் கம்யூட்டரிலிருந்து கண்களை விலக்கிய ஆனந்தன் கீதாவைப் பார்க்காமல் சுவரைப் பார்த்தபடி.

‘‘என்ன வேணும்...?' என்று கேட்டான்.

சுவரிலிருந்த பல்லி ‘ச்ச்ச். ச்ச்ச்.' என்று சப்தம் எழுப்பி வைத்தது.

‘‘பல்லிக்கு என்ன வேணும்னு சொல்லுச்சாம் அன்பு...? கார்டு வேணுமா...? கவர் வேணுமா...?’’ சிரிக்காமல் கேட்டாள் கீதா.

‘‘ஏன்சார் மானத்தை வாங்கறிங்க...?" சிரித்து விட்டான் அன்பழகன்.

"சாருக்கு பல்லி பாஷை அத்துபடி போல இருக்கு. பப்ளிக்கிட்டப் பேசாம பல்லிகிட்ட பேச்சு வார்த்தை நடத்தறாரு..''

குறும்பான கீதாவின் விழிகள் ஆனந்தனை மொய்த்தன. அவள் இயல்பாகப் பேசியிருந்தால் ஆனந்தனும் இயல்பாக பேசியிருப்பான். அவள்தான் இயல்பாக

பேசித் தொலைக்காமல் முறை மாப்பிள்ளையிடம் பேசித் தொலைப்பதைப் போல ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி கிண்டலும், கேலியுமாகப் பேசித் தொலைக்கிறாளே. ஆனந்தன் என்ன செய்வான்...?

‘‘எனக்கு ரெண்டில ஒன்னு தெரிஞ்சாகனும் அன்பு. என்னை விட எந்த விதத்தில அந்தப் பல்லி உயர்த்தியானதாம்...? கேட்டுச் சொல்லு.'' விடாமல் வம்பு வளர்த்தாள் கீதா.

‘‘அவங்க கேக்கறதிலயும் நியாயம் இருக்கில்ல...? ஆனாலும் உங்களுக்கு இம்புட்டு ஓர வஞ்சனை கூடாது சார். பல்லி கிட்டப் பேசலாம். நம்ம ஊரு பண்ணையாரு மககிட்டப் பேசக் கூடாதா...?''

இசைப் பாட்டு பாடினான் அன்பழகன்.

“யோவ். நீ வேற ஏத்தி விடாம சும்மா இருய்யா.” என்றான் ஆனந்தன்.

“ஐ.! நம்ம போஸ்ட் மாஸ்டரு பேசிட்டாரு. இதுக்கு ஒரு விழா எடுத்தாகனுமே.” குதூகலப் பட்டுப் போனாள் கீதா.

அதற்கு மேலும் தாள மாட்டாமல் விழிகளை உயர்த்தி அவளை இமைக்காமல் பார்த்து வைத்தான் ஆனந்தன். அந்தப் பார்வையில் தடுமாறிப் போனாள் அந்தக் குறும்புக்காரி.!

# அத்தியாயம் 12

*"பார்வை ஒன்றே போதுமா..?*

*பல்லாயிரம் சொல் வேண்டுமா."*

**மெ**துவான குரலில் மேஜையில் விரல்களால் தாளம் போட்டபடி பாடினான் அன்பழகன். அந்தப் பாடலில் பார்வையை விலக்கிக் கொண்ட கீதா, வேறு திக்கில் பார்த்தாள். ஆனந்தன் அன்பழகனைப் பார்த்து விட்டுக் கம்பூட்டரைப் பார்த்தான்.

தனிப்பட்ட முறையில் எந்தப் பேச்சையும் பேச மாட்டேன்னு தானே சுகுமாறனுக்கு வாக்குக் கொடுத்திருக்கேன்.? பார்க்க மாட்டேன்னு வாக்குக் கொடுக்கலையே.

அவன் மனம் சொன்னது. மறுபடியும் விழிகளை உயர்த்தி கீதாவைப் பார்த்தான். அவன் பார்வைக்காக காத்திருந்தவள் முகம் மலர்ந்து போனாள். ஆனந்தனுக்குச் சங்கடமாக இருந்தது. இவள் சுகுமாறனுக்கு உரியவள் என்று உருப் போட்டுப் பார்த்தான். மனம் அடங்காத குதிரையாக விசும்பித் திமிறியது. மனக்குதிரைக்கு கடிவாளமிட முடிந்த மனிதர் இவ்வுலகில் இல்லையெனும்போது ஆனந்தன் பாவம் என்ன செய்வான்.?

“என்ன வேணும்.?” மிருதுவாக கேட்டான்.

அவ்வளவு நேரமும் வாயடித்தவள் பேச்சிழந்த பதுமையாக..

“ஒரு இன்லெண்ட் லெட்டர் வேணும்.” என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

“இந்தாங்க.” ஆனந்தன் நீட்டிய இன்லெண்ட் லெட்டரை வாங்கிக் கொண்டவளின் பார்வை மிட்டாய் தீர்ந்து விட்டக் குழந்தை போல, இவ்வளவுதானா என்ற ஏக்கத்துடன் பார்த்தது.

ஆனந்தனின் மனம் அசைந்தது. அவனைத் தேடும் அந்தப் பார்வையைப் புறக்கணிக்க அவனால் முடியவில்லை. ஆதுரத்துடன் அவளைப் பார்த்தான். அவளுக்கான பிரத்யேகப் பார்வையில் அவள் பூவாக மலர்ந்தாள். இதழ்கள் துடிக்க எதையோ பேச நினைத்து பேச முடியாதவளாக மறுகி நின்றாள்.

“ஆர்.டி. பணம் கட்டனும். சலான் தாங்க சார்.”

போஸ்ட் ஆபிசில் கூட்டம் வரத் துவங்கி விட்டது. சடுதியில் விரைந்து விட்டாள் கீதா. போகும் போது அவனைத் திரும்பிப் பார்த்த அவளது பார்வையில் இருந்த புலப்படாத செய்தியில் புதைந்து போனான் ஆனந்தன்.

'அவனிடம் என்ன சொல்ல விரும்புகிறாள் அவள்.?'

வெகுநேரம் அவன் மனதைக் குடைந்து ஆட்டிப் படைத்தது அந்தக் கேள்வி.

கூட்டம் குறைந்த பின். யோசனையுடன் மௌனமாகி விட்டவனின் பக்கத்தில் வந்த அன்பழகன்.

"கீதாம்மா கிட்டப் பேச மாட்டேங்கறிங்களே. ஏன் சார்.?" என்று கேட்டான்.

மிகச் சரியாக அவன் கணித்து விட்டதில் கொஞ்சமாக ஆசுவாசம் ஏற்பட்டது ஆனந்தனுக்கு. ஒளிந்து விளையாடாமல் அன்பழகனிடம் உண்மையைப் பகிர்ந்து கொள்ளலாமே. மனம் விட்டுப் பேச அன்பழகனை விட நம்பிக்கையான மனிதர் அரசபட்டினத்தில் ஆனந்தனுக்கு இல்லையே.

“எதுக்குப்பா வம்பு.?

“இதில வம்பென்ன இருக்கு சார்.? நீங்களா அந்தம்மாவத் தேடிப் போயி பேசறிங்க..? அவங்கதானே உங்களைச் சுத்திச் சுத்தி வர்றாங்க..?”

"அன்பு.”

‘‘எல்லாம் எனக்கும் தெரியும் சார். அவங்க தேடி வந்தாலும் நீங்க விலகிப் போறது ஏன்னுதான் தெரியலை.’’

‘‘ம்ப்ச்சு. அந்தப் பொண்ணு சுகுமாரனோட மாமா பொண்ணுப்பா.’’

ஆனந்தனின் மன வலியை அவனது கண்களில் கண்ட அன்பழகன்.

"அப்படிப் போகுதா கதை.." என்றான்.

‘‘என்னப்பா சொல்ற..?’’

‘‘கீதாம்மா சுகுமாறன் வாத்தியாரோட தூரத்துச் சொந்தக்காரப் பொண்ணுன்னு சொல்லுங்க. கேட்டுக்கறேன். அதென்ன மாமா பொண்ணு.? ரெண்டு வருசத்தில இவரு மாமாவைக் கண்டு மாமன் பொண்ணச் சொந்தம் கொண்டாடறாரா..? இவங்க என்ன சுகுமாறன் சாரோட சொந்த தாய்மாமன் பொண்ணா..?"

‘‘அவன் அப்படித்தான் சொல்றான்.’’

‘‘அவர் சொல்றதைப் பத்திச் சொல்லாதீங்க சார். வாயைத் திறந்தா பொய்தான். அம்மாவாசை விரதமிருக்கிற பண்ணையாரு வீட்டில அம்மாவாசையன்னைக்கு கோழியடிச்சு குழம்பு

வைத்தாங்கன்னு புளுகற ஆளு. அவர் சொல்றதையெல்லாம் கணக்கில எடுத்துக்கிட்டு மனசைப் போட்டு உழட்டிக்கறிங்களே.’’

ஆனந்தனின் மன உளைச்சலை எளிதாக இனம் கண்டு ஆற்றி விட முனைந்த அன்பழகனின் அன்பில் மனம் நெகிழ்ந்தான் ஆனந்தன்.

'என்ன மாதிரியான அன்பு இது. அவன் யார்.? அன்பழகன் யார். ? அரசபட்டினத்திற்கு வரும் வரை அன்பழகனைப் பற்றி ஆனந்தன் அறிவானா..? எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் மழை பொழியும் கார்மேகத்திற்கு ஒப்பானவனல்லவா. அன்பழகனின் அன்பானது ஆனந்தனின் புண்பட்ட மனத்திற்கு மருந்திட்டுக் குணப்படுத்தும் வல்லமை கொண்டதாக இருந்தது.

‘‘தேங்க்ஸ் அன்பு.’’ மனதார நன்றி சொன்னான் ஆனந்தன்.

‘‘எதுக்கு சார்.?’’அன்பழகன் திகைத்தான்.

எதற்கென்று சொல்வான் ஆனந்தன்.? லேசான புன்சிரிப்புடன் அவன் கம்யூட்டரில் கவனமாகி விட அன்பழகன் கடிதங்களைக் கவனிக்க எழுந்து போனான்.. மாலையில் வேலை முடிந்ததும் அலுவலகத்தை பூட்டி விட்டு வீட்டைப் பார்த்து நடந்த

ஆனந்தனுடன் சைக்கிளை உருட்டியபடி பேசிக் கொண்டு வந்தான் அன்பழகன்.

‘‘எங்க ஸ்கூலிலும் பியூன் இருக்கான் ம்ஹீம்..! எனக்கு மேலே பந்தா காட்டுவான்.’’

அதற்கும் வயிறெரிவான் சுகுமாறான். ஆனந்தனின் காபிக் கடையில் அவனும் அங்கம் வகித்தாலும் ஒரு தம்ளரைக் கூட நகர்த்தி வைக்க மாட்டான். அதைச் சொல்லிக் காட்டி விடுவான் அன்பழகன்.

‘‘ஏன் வாத்தியாரே..! உங்க கூடவும் குடித்தனம் பண்ணத் துணிச்சலா ஒப்புக்கிட்டு வந்திருக்கிற போஸ்ட் மாஸ்டருக்கு கூடமாட ஒத்தாசையா இருப்போம்ன்னு உங்களுக்குத் தோணவே தோணாதா..?"

முகத்தாட்சண்யம் பார்க்காமல் நேருக்கு நேராக கேட்டு விடும் அன்பழகனின் குணத்தை மனதுக்குள் திட்டித் தீர்ப்பான் சுகுமாறன்.

'இவனே நெத்தியடியாய் பேசறவன். இவனுக்கு மேலே இந்த அன்பழகன் இருக்கானே. இவன் மறந்தாலும் எடுத்துக் கெடுக்கிறானே.'

“என்ன வாத்தியாரே. பேச்சைக் காணோம்.”

“என்கூடத் தங்க வைச்சிருக்கிறதே பெரிய ஒத்தாசை அன்பு. இதுக்கு மேலே நான் என்ன செய்ய.?”

வாயிருக்க மாட்டாமல் பேசி விட்டு. நிமிர்ந்து பார்க்கும் ஆனந்தனின் ஆழ்ந்த பார்வையில் அரண்டு போய் விடுவான் சுகுமாறன். இவன் ரோசக்காரனாச்சே. பெட்டியைக் கட்டிக்கிட்டு கிளம்பிப் போயிருவானோ.

சுகுமாறனின் மிரட்சியை அவனது கண்களில் கண்டு விடும் ஆனந்தன் தலையில் அடித்துக் கொண்டு.

“உளராம காபியைக் குடிடா..” என்று அதட்டுவான்.

அதை வேடிக்கை பார்ப்பதில் அப்படியொரு இன்பம் அன்பழகனுக்கு. சுவராஸ்யமாக வேடிக்கை பார்ப்பான்.

இப்படிப்பட்ட இதமான பொன்மாலைப் பொழுதுகள் அரசபட்டினத்தில் கிடைக்கத்தான் செய்தன.

“இந்த சிறுவூக்காரனக் கண்டிச்சு வையுங்க சார்.."

“ஏன்ப்பா..? அவன் என்ன செஞ்சான்."

"டீக்குக் காசு கொடுக்காம நம்ம தலையில கையை வைக்கிறான்."

"ஹா. ஹா. விட்டுத் தள்ளுப்பா. இதை ஒரு பஞ்சாயத்துன்னு பேச வந்திட்ட.''

பேசியபடியே வீடு இருந்த தெருவில் திரும்பிய ஆனந்தன் ஸ்பீடு பிரேக் போட்டதைப் போல தேங்கி நின்று விட்டான்.

''என்னாச்சு சார். ?'' புரியாமல் கேட்ட அன்பழகன் வீடிருக்கும் திசையில் பார்த்தான்.

அங்கே பண்ணையார் வீட்டு வாசலை பதுமை போலப் பெருக்கிக் கொண்டிருந்தாள் கீதா.

விசயம் இதுதானா..?

ஆனந்தன் அப்படியே திரும்பி விடலாமா என்று அபத்தமாக யோசித்து வைத்தான். அவன் அப்படிச் செய்தாலும் செய்து விடுவான் என்பதை யூகித்து விட்ட அன்பழகன்.

''சிரிப்புச் சிரிப்பா வருது சார். இந்தம்மாவப் பாக்கப் பயந்து ஊரை விட்டே ஓடிப் போயிருவீங்க போல இருக்கு..'' என்றான்.

'கண்டு புடிச்சிட்டானே.' வேறு வழியில்லாமல் வீட்டைப் பார்த்து நடந்தான் ஆனந்தன்.

"ஆமாம். இதென்ன சார் புது வழக்கமா இருக்கு. இந்தம்மா வாசலக் கூட்டிப் பெருக்குது. இவுக வீட்டிலதான் வேலையாளுக குமிஞ்சு இருப்பாகளே.''

''தெரியல அன்பு. கொஞ்ச நாளா இந்தக் கததான் நடக்குது.''

"அப்படிப் போடு அருவாளை. காலையிலேயும் இதே கதைதானா..?''

"ம்ம்ம். நான் பால்வாங்க வாரப்ப கோலம் போட்டுக்கிட்டு இருக்கும். சாயங்காலம் நீங்க ஆபிஸ் முடிஞ்சு வாரப்ப கோலம் போட வருவாங்களாக்கும்.."

''இல்லேப்பா. சாயங்காலமும் நான் பால் வாங்க வாரப்பதான் வாசல் தெளிச்சுக் கோலம் போடும். இன்னைக்கு என்னவோ முந்திருச்சு.''

''நீங்க பிந்திட்டிங்கன்னு சொல்லுங்க. இந்த சிறுவூர்க்காரன் கணக்கத் தப்பாப் போட்டு பி.ஓ டெய்லி அக்கவுண்ட அனுப்பிச்சுத் தொலைச்சதில கணக்கு டேலியாகாம நேரமாகிருச்சுல்ல.?''

“இல்ல அன்பு. நாம வீணாக் கற்பனையை வளர்த்துக்கக் கூடாது.”

“ஏனாம்.?”

ஆனந்தன் அதற்குச் சொன்ன பதிலில் இந்தச் சுகுமாறனை வீடு கட்டி அடித்தால் என்ன என்ற வெறி கிளம்பியது அன்பழகனுக்கு.

# அத்தியாயம் 13

“இது சுகுமாறனைப் பார்க்கிறதுக் காகத்தான் கோலம் போட வாசலுக்கு வருதாம்.”

"அப்படின்னு யாரு சொன்னது.?”

“சுகுமாறன்தான் சொன்னான். அவன் மாடி பால்கனியில நின்னு வாசலைப் பார்ப்பானாம். இது வாசல் தெளிச்சுக் கோலம் போட்டுக்கிட்டே அவனைப் பார்க்குமாம்.”

"அப்படியே ராமாயணக் கதையை உல்ட்டா பண்ணிட்டாராக்கும். ? கேட்கிறவங்க இரக்கமானவுகளா இருந்தா கேழ்வரகில நெய் எடுத்தோம்ன்னுதான் சொல்லுவாக. ஆனாலும் நீங்க அவரு பேச்சை ரொம்பத்தான் நம்பறிங்க சார்."

“இதில் நம்பிக்கைக்கு வேலையில்லை அன்பு. திடிர்ன்னு புதுசா காலையிலேயும், சாயந்திரமும் பால்கார கோனா ரோட சைக்கிள் வார நேரத்துக்கு கீதா வாசல் தெளிச்சுக் கோலம் போட வருகிறதை அவன் கண்டுக்கிட்டிருக்கான். அதைத்தான் நாம புரிஞ்சுக்கனும்.”

மனதின் வலியை மறைக்க முயன்றபடி தெளிவான குரலில் ஆனந்தன் விளக்கிய போது சுகுமாறனின் மண்டையை உடைத்தால் என்ன என்ற கோபம் கொண்டான் அன்பழகன்.

‘‘அதனால் அவரோட மாமன்மகள் உங்களைப் பார்க்க வரலை. அவரைப் பார்க்க வருகிறாங்கன்னு உங்ககிட்ட கதை பிணைஞ்சாராக்கும்.?"

"அது கதையோ இல்லையோ. கீதா அவனுக்குத்தான் உறவுக்காரப் பெண். எனக்கில்லை. இந்த வீட்டையும் அவனுக்குத்தான் அவங்க கொடுத்திருக்காங்க. எனக்கில்லை. ரெண்டு வருசமா இந்த ஊரில இந்த வீட்டில இருந்திருக்கான். அவனோட சிநேகிதனாத்தான் இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சிருக்கேன். சிநேகிதன் துரோகியா மாறக் கூடாது அன்பு. அது நியாயமில்லை.’’

பொன்னே. பூவே என்று வாசலைப் பெருக்கிக் கொண்டிருந்த கீதாவின் பக்கம் திரும்பாமல் வீட்டுக்குள் போக முனைந்தான் ஆனந்தன்.

அன்பழகனை நிமிர்ந்து பார்த்த கீதா. ஆனந்தனை ஓரக் கண்ணால் பார்த்தபடி.

‘‘ஆபிஸ் அப்பவே முடிஞ்சிருக்கனுமே அன்பு.?’’ என்றாள்.

“வேலை இப்பத்தானேம்மா முடிஞ்சது.” அன்பழகன் நின்று விட்டான்.

சும்மாவும் நிற்காமல் சுகுமாறன் குடியிருந்த வீட்டுக் காம்பவுண்டுக் கேட்டை மறைப்பதைப் போல சைக்கிளை குறுக்கே மறித்து நிறுத்தி நின்று விட்டதில் கேட்டைத் திறந்து உள்ளே போக முடியாமல் ஆனந்தனும் நின்று விட்டான்.

கீதாவுக்கு குதூகலமாக இருந்தது. ஆனந்தன் பால்வாங்க வரும் போது பார்க்கும் நொடிநேரப் பார்வை போல இல்லாமல் நின்று நிதானமாக அவனைப் பார்த்தபடி பேச்சை வளர்க்க முடிந்ததில் சந்தோசப் பட்டுப் போனாள்.

“அது என்ன. என்னைக்கும் இல்லாம இன்னைக்கு வேலை முடிய இம்புட்டு நேரமாச்சு..?”

என்னவோ கட்டிக் கொண்டவளைப் போல வாசலில் நிற்க வைத்து அவள் கேள்வி கேட்ட விதத்தில் ஆனந்தன் நிமிர்ந்து மின் வெட்டும் பார்வையொன்றைப் பார்த்து வைத்தான். அவள் விழிகள் மின்னின.

'இந்தப் பெண் எதற்காக இப்படி உரிமை கொண்டாடுகிறது.?'

அவனுக்குத் துயரமாக இருந்தது. பேசியபடியே தற்செயலாகப் பார்ப்பதைப் போல சுகுமாறனின் வீட்டுப் பால்கனியைப் பார்த்து வைத்த அன்பழகன் ஆனந்தனுக்கு ஜாடை காட்டினான்.

‘‘டக்குன்னு பார்த்துராதீங்க சார்.’’ என்று தணிந்த குரலில் எச்சரிக்கவும் செய்தான்.

மெதுவாக தலை திருப்பிப் பார்த்த ஆனந்தனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அங்கே நின்றிருந்த சுகுமாறனின் முகம் பயங்கரமாக மாறியிருந்தது.

‘‘சைக்கிளை நகர்த்து அன்பு. நாம வேணும்னே நின்னு வாய் வளர்க்கறோம்ன்னு நினைச்சிரப் போறான்.’’ என்று கவலைப் பட்டான் ஆனந்தன்.

‘‘சும்மா இருங்க சார். இந்தம்மா அவரைப் பாக்கத்தான் வாசல் தெளிச்சுக் கோலம் போட வருகிறாங்களாக்கும். ? உங்ககிட்டக் கதை சொன்னாருல்ல.? இப்ப முகத்தை எங்கே கொண்டு போய் வைச்சுக்குவாருன்னு நானும் பார்க்கறேன்.’’ கொதித்தான் அன்பழகன்.

தணிந்த குரலில் அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருப்பதை விசித்திரமாகப் பார்த்த கீதா.

‘‘என்ன..? ரகசியம் பேசிக்கறிங்க..?’’ என்று கேட்டாள்.

‘‘அது ஒன்னுமில்லேம்மா. சும்மா." என்றான் அன்பழகன்.

‘‘அதை நீதான் சொல்லுவியா..? உங்க போஸ்ட் மாஸ்டர் சொல்ல மாட்டாரா. வாயைத் திறந்தா வைடுரியம் கொட்டிருமா..?’’ கிண்டலாக ஆனந்தனைப் பார்த்தாள்.

அவளது தைரியத்தில் வியப்படைந்தான் ஆனந்தன். அரசபட்டினத்தைப் போன்ற ஒரு கிராமப் பாங்கான ஊரில். பண்ணையாரின் மகள். வேற்று முகம் பார்க்காமல் அவனிடம் சகஜமாக உரையாடுவதில் தர்மசங்கடமும் கொண்டான்.

‘‘எங்க போஸ்ட் மாஸ்டர் தங்கமானவரும்மா. நீதி நேர்மைக்கு கட்டுப்பட்டவரு. இவரு வாயைத் திறந்தா வைடூரியம் தான் கொட்டும். வேற ஒரு சிலர் இருக்காங்க. அவங்க வாயைத் திறந்தா புளுகு மூட்டைதான் கொட்டும்.’’

பால்கனியில் நின்றிருந்த சுகுமாறனைப் பார்த்தபடி சொன்னான் அன்பழகன். புரிந்தும் புரியாமல் சிரித்து வைத்தாள்

கீதா. சிரிக்கும் போது மறக்காமல் ஆனந்தனைக் கள்ளப் பார்வை பார்த்தும் வைத்தாள்.

ஆனந்தனை ஊடுறிவிய அந்தப் பார்வையில் சிலிர்த்துப் போனான் அவன். பதிலுக்குப் பார்க்காமல் இருக்க முடியவில்லை அவனால். அவனது பதில் பார்வையை எதிர்பார்த்துக் காத்திருந்தவளின் பார்வை பரவசம் கொண்டதில் ஆழ்ந்து பார்த்து வைத்தான்.

‘‘ஏன் அன்பு. உங்க போஸ்ட் மாஸ்டர் கணக்கில கொஞ்சம் வீக்கோ..?’’ கீதாவின் பேச்சு முழுவதும் ஆனந்தனை மையமாக கொண்டே வெளிவந்தது.

‘‘கணக்குப் பண்றதில வீக்குன்னு சொல்லுங்க. கேட்டுக்கறேன். மனுசருக்கு அது சுட்டுப் போட்டாலும் வர மாட்டேங்குது. கணக்கில வீக்குன்னு சொன்னாக் கேட்டுக்க மாட்டேன். இவரு கணக்கில சூரப்புலி." அன்பழகன் ரோசப் பட்டான்.

‘‘அதான் தெரியுதே.’’ விசமத்துடன் சொன்னாள்.

அவள். இவள் எதைத் தெரிந்து கொண்டிருக்கிறாள்.?

சுகுமாறனை மறந்து அவளை ஒரு தினுசாக பார்த்து வைத்தான் ஆனந்தன். கீதாவின் முகம் சிவந்து விட்டது..

“எதைச் சொல்றிங்க..?”அன்பழகன் கேட்டான்.

“கணக்கில சூரப்புலிங்கறதைச் சொன்னேன். அப்படியாப்பட்ட சூரப்புலி காலாகாலத்தில ஆபிஸ் கணக்கை முடிக்காம எதுக்காக அல்லல் பட்டாராம்.?”

“இவரு மட்டும் கணக்கில சூரப்புலியா இருந்தாப் போதுமாம்மா..? சிறுவூர்காரனும் பெருவூர்காரனும் இருக்கனுமில்ல.? அவனுக கோக்கு மாக்காக் கணக்கைப் போட்டு விட்டா எங்க தலையில்ல வலிக்குது..? என்னத்தை பண்ணித் தொலைச்சிருக்கானுகன்னு ஒன்னொன்னாப் பார்த்துக் கண்டு பிடிச்சு சரி செஞ்சு கணக்கை முடிக்கிறதுக்குள்ள உன்பாடு என்பாடுன்னுல்ல ஆகிருது..?”

“அதுவும் சரிதான்.”

கீதா ஆமோதிப்பாய் தலையை ஆட்டிக் கொண்டிருந்த போது சுகுமாறன் வந்து விட்டான். அதற்கு மேலும் அவர்கள் மூவரும் பேசுவதை மாடிப் பால்கனியிலிருந்து பார்வையிட அவனால் முடியவில்லை. பேய்க்கு பயந்து கீதாவைக் கோட்டை விட்டு விட்டானோ என்று அவனது மனச்சாட்சி குத்திக் குடைந்து கொண்டிருந்தது. இரண்டு வருடமாக வீட்டை விட்டு வெளியே தலை காட்டாதவள் ஆனந்தனின் வரவுக்குப் பின்னால் அவன்

பால் வாங்க வாசலுக்கு வரும் வரைக்கும் தன்வீட்டு வாசலைப் பெறுக்கித் தண்ணிர் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருப்பதின் மர்மம் என்ன என்று அவனுக்குத் தெரியாமல் இல்லை. அந்த உண்மையில் அவன் அதிர்ந்து போயிருந்தான்.

அவனிடம் முகம் பார்த்துப் பேசாமல் ஒரிரு வார்த்தைகளுடன் நகர்ந்து விடும் கீதா ஆனந்தனிடம் பேச ஆர்வம் காட்டியதில் பதைத்துப் போயிருந்தான்.

‘என் மாமன் வீடு.’ என்று வாய்க்கு வாய் அவன்தான் சொல்லிக் கொண்டிருந்தான். ஒருநாள் கூட 'மருமகனே.' என்றோ ‘மாப்பிள்ளை.' என்றோ. நீலகண்டனும், பார்வதியும் அவனை உறவு முறை சொல்லி அழைத்ததில்லை.

கீதாவின் தம்பியான நிரஞ்சன் கூட சுகுமாறனை 'மாமா' என்று அழைக்க மாட்டான். பூகோள வாத்தியார் என்றுதான் அழைப்பான். சுகுமாறன் வேலை பார்த்த பள்ளியில்தான் அவன் படித்து வந்தான். அவனை 'மாமா' என்று அழைக்க வைத்து விட வேண்டும் என்று எத்தனையோ பிரயத்தனங்களை மேற்கொண்டுத் தோற்றுப் போனான் சுகுமாறன்.

சுற்று வட்டாரத்தில் உள்ள பிள்ளைகள் எல்லாம் படிக்க வரும் அரசபட்டினத்து அரசு மேல்நிலைப் பள்ளியில் சுகுமாறனை

நிரஞ்சன் மாமா என்று அழைக்கும் செய்தி பரவினால் அது சுற்று வட்டாரம் முழுதுவம் பரவும் அல்லவா..?

கெட்டிக்காரத்தனமாக யோசித்துத்தான் காய் நகர்த்தினான் சுகுமாறன். வாத்தியார் என்ற ஹோதாவைக் காட்டிப் பயமுறுத்தலாம் என்றுகூட நினைத்தான். அதற்கு வழியில்லாமல்.

‘‘உங்களை மாமான்னு கூப்பிட்டா எங்கப்பா அடி பின்னியெடுத்திருவாரு சார்.’’ என்று நிரஞ்சன் அறிவுறுத்தியதில் அரண்டு போய் விட்டு விட்டான்.

‘‘அடி பின்னியெடுத்திருவாரா..? யாரைடா..?’’

‘‘உங்களையில்லை சார். என்னைத்தான்."

சுகுமாறனை பொடியன் ஆற்றுப்படுத்திய விதத்தில் அவனை அடி பின்னியெடுத்து விடலாமா என்று கொலை வெறியானான் சுகுமாறன். அப்படிச் செய்து விட்டுத் தப்பித்துப் போய்விட முடியாது என்பதினால் பல்லைக் கடித்துக் கொண்டு அமைதிகாத்தான்.

"உன்னையேண்டா அடிப்பாரு."

“பின்னே..? படிக்கிற பள்ளிக்கூடத்தில சொல்லித்தர்ற வாத்தியாரை மாமா முறை வைத்துக் கூப்பிட்டா பின்னிப் பெடலெடுத்திர மாட்டாரா..?”

"அவர் சொல்வாரோ இல்லையோ. நீ திறமையாத்தான் பேசறடா. பள்ளிக்கூடத்தை விடு. வெளியில, வீட்டில நீ மாமான்னு கூப்பிட வேண்டியதுதானே.?”

“இதே பழக்கம்தான் பள்ளிக்கூடத்திலும் வரும்ன்னு அதுக்கும் அடிப்பார் சார்.”

கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக இருந்தான் நிரஞ்சன். அவன்தான் அப்படியென்றால் சுகுமாறனின் தலையைக் கண்டாலே வீட்டுக்குள் மறைந்து கொள்வாள் கீதா. அவன் கிளம்புகிற வரை அவனிருக்கும் பக்கமே வர மாட்டாள். வெட்கம் என்று அதற்குப் பெயர்சூட்ட முடியாமல் தலைமுடியைப் பிய்த்துக் கொள்வான் சுகுமாறன்.

# அத்தியாயம் 14

**வெ**ட்கப்படும் பெண்களின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்குமா..? சுகுமாறனைக் கண்டாலே கீதாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் தான் வெடிக்கும். அவன் வலுக் கட்டாயமாக பேச்சுக் கொடுத்தாலும் பேச்சை நீடிக்க விடாமல் வெட்டி விட்டுப் போவதில் அவள் கெட்டிக்காரி.

அதற்காக ஒரேயடியாக சுகுமாறனுடன் பேச மாட்டாள் என்று சொல்லி விட முடியாது. பேசுவாள். அளவோடு பேசுவாள். அந்தப் பேச்சும் அவன் அவர்களது வீட்டைச் சுத்தமாக பராமரிக்கிறானா என்பதைப் பற்றித்தான் இருக்கும். அவளும் சுகுமாறனை முறை சொல்லி அழைக்க மாட்டாள். பொதுப்படையாக வாங்க, போங்க என்று தான் பேசுவாள்.

‘‘தோட்டத்தை ஏன் காய விட்டிருக்கீங்க. செடிக பட்டுப் போயிரும்ன்னு தோணவே தோணாதா..?’’

‘‘வீட்டுக்கு வெளியே நூலாம்படையாத் தொங்குது. வீட்டுக்குள்ள எப்படியிருக்குமோ..? ஆளில்லாதப்போ செடிகளும் சிலுசிலுப்பா இருந்துச்சு. வீடும் சுத்தபத்தமா இருந்துச்சு.’’

"அப்பன்னா தினமும் செடிகளுக்கு தண்ணி ஊத்தி வீட்டைச் சுத்தம் பண்ணி வைப்போம். இப்ப என்ன செய்கிறது.?’’

இப்படிப் பேசுகிறவளிடம் காதல் வசனத்தை பேசித் தொலைக்க முடியுமா..? அந்தக் கொடுமையைச் செய்யவும் அவன் தயாராகத்தான் இருந்தான். கேட்டுக் கொள்ள அவள் தயாராக இல்லையே.

அப்படித் தாமரையிலைத் தண்ணிரைப் போலக்கூட இல்லாமல் மொத்தமாக தள்ளி நின்று அவனிடம் பேசிப் பழகும் கீதா ஆனந்தனிடம் மட்டும் வலிய வலிய பேசுவதை சுகுமாறனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அவனுக்கு அவள் கிடைக்காவிட்டால் கூட அவன் தாங்கிக் கொள்வான். ஆனந்தனுக்கு கிடைத்துவிட்டால் தாங்கிக் கொள்ளவே மாட்டான்.

'காத்திருந்தவன் காதலிய நேத்து வந்தவன் அடிச்சுக்கிட்டுப் போகப் பார்க்கிறானே.’’

ஆத்திரத்தில் அவன் மனம் வெந்தது.

கீதாவை அவன் காதலிக்கவில்லை. அவளது 'பண்ணையார் மகள்.' என்ற அடையாளத்தைத்தான் காதலித்தான். என்பதை

வெகு வசதியாக அவன் மறந்து போனான். அவளும் அவனைக் காதலிக்கவில்லை என்ற உண்மையை எளிதாக மறைத்து விட்டான்.

வெகு வேகமாக வாசலுக்கு வந்து நின்றவனைப் \பார்த்த அன்பழகன்.

‘‘பார்த்து சார். கால் தடுக்கிறப் போகுது. காத்தைப் போல வேகமா வராம மெல்ல வர்றதுக்கென்ன..? ஒரு நேரம் போல இருக்காது சார். மாடிப்படி வழுக்கி விட்டிருந்தா என்ன ஆகிறது.?’’ என்று கரிசனப் பட்டான்.

போடா. நீயும் உன் கரிசனமும். அவனை முறைத்த சுகுமாறன். கீதாவைப் பார்த்ததும் வாயெல்லாம் பல்லானான்.

‘‘என்ன கீதா. வாசல் தெளிச்சுக் கோலம் போடவந்தியா..?’’

‘‘இல்லையே. வாசல்பக்கம் புதையல் கிடைக்குதான்னு பார்க்கல்ல வந்தேன்.’’ சிரிக்காமல் சொன்னாள் கீதா.

அதை ரசித்த போதும் சுகுமாறனின் ரத்த அழுத்தத்தை எகிற விட வேண்டாமே என்று முகம் மாறாமல் நின்றான் ஆனந்தன்.

அன்பழகனுக்குத்தான் அப்படியெதுவும் அக்கறையில்லையே.

"ஹா. ஹா. ஜோக்கும்மா. ஜோக்கு..'' என்று அவன் விழுந்து விழுந்து சிரித்து வைத்தான்.

சுகுமாறனின் முகம் கன்றிப் போனது. பல்லைக் கடித்தபடி உக்கிரமாக ஆனந்தனை முறைத்துப் பார்த்தான்.

''ஆபிஸ் விட்டு வந்தா ஒன்னு வீட்டுக்குள்ள வரனும். இல்லைன்னா காலாற தெருவில நடந்துட்டு வரனும். ரெண்டும் இல்லாம வாசலில என்னடா பேச்சு வேண்டிக் கிடக்கு." நேரடியான இந்தத் தாக்குதலில் ஆனந்தனுக்கு கோபம் வந்து விட்டது.

சுகுமாறனுக்கு கொடுத்த வாக்கிற்கு கட்டுப் பட்டுத்தான் அவன் இருக்கிறான். விலகி விலகிப் போகிறவனிடம் நெருங்குவது கீதாதான். இதைப் புரிந்தும் புரியாதவனைப் போல சுகுமாறன் ஆனந்தனைக் குற்றம் சொல்வது எந்த விதத்தில் நியாயமாகும்.?

ஆனந்தன் சும்மாவே முரட்டுக்காளை..!

அன்புக்கும் நியாயத்திற்கும் மட்டுமே கட்டுப்படுபவன். அவனை வம்புக்கு இழுத்தால் சும்மா விட்டு விடுவானா..?

''அதை நீ சொல்லக் கூடாதுடா.'' சுகுமாறனை முறைத்து விட்டான்.

'ஆஹா' என்று கைதட்ட வேண்டும் போல இருந்தது அன்பழகனுக்கு.

'வாயைக் கொடுத்து இந்தாளு வாங்கிக் கட்டிக்கிறாரே.'

சுகுமாறன் சும்மா நின்றிருந்தாலே போதும். அவன் வந்து விட்டான் என்பதில் அந்த இடத்தை விட்டுத் தானாகவே ஆனந்தன் நகர்ந்திருப்பான். சுகுமாறனின் முன்னிலையில் கீதாவும் பேச்சை வளர்த்திருக்க மாட்டாள். அதை விட்டுவிட்டு மனதின் பொருமலை அவன் வெளிப்படுத்தி விட்டான். சும்மாவும் இல்லாமல் ஆனந்தனை சிறு குழந்தையை மிரட்டுவதைப் போல மிரட்டி விட்டான்.

தன்மானச் சிங்கமான ஆனந்தன் அதைக் கேட்டுக் கொண்டா இருப்பான்.?

‘‘சுகுமார். நீயும் நானும் காலேஜ் வரைக்கும் ஒன்னாப் படிச்ச பிரண்ட்ஸ்தான். ஒரே வீட்டில தங்கியிருக்கிற ரூம் மேட்ஸ்தான். அதுக்காக என்னைக் கமாண்ட் பண்றதைப் போல நீ எப்படிடா பேசலாம்.? நான் தெருவிலயும் நடப்பேன். வாசலிலயும் நிற்பேன். இதைச் செய், அதைச் செய். இதைச் செய்யக் கூடாது, அதைச் செய்யக் கூடாதுன்னு எனக்கு ஆர்டர் போட நீ யாருடா..? என் இஷ்டம். நான் எங்கே வேணும்னாலும் நிப்பேன். என்கிட்டப்

பேசறவங்களை மதிச்சுப் பதில் பேசுவேன். எனக்கு அது வேண்டியிருக்கு. என்னாங்கிற...?"

ஆனந்தனின் கோபத்தில் சுகுமாறனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கீதாவின் முன்னால் அவனைத் தட்டி வைக்கலாம் என்று பார்த்தால் அவனோ எகிறிக் குதிக்கிறான்.

கீதா வேறு ஆனந்தனின் கோபத்தை ரசித்து இப்ப என்ன செய்வ.?' என்பதைப் போலப் பார்த்து வைக்கிறாள்.

இனிப் பின் வாங்க முடியாது.

சுகுமாறன் பேச வேண்டிய வார்த்தைகளை மனதுக்குள் கோர்த்தான்.

‘‘அது என்னடா என்னாங்கிறன்னு எளிசா கேட்டுப்புட்ட.? சொந்தக்காரன்னு நம்பி என் மாமா அவரோட வீட்டில என்னைத் தங்க வைச்சிருக்காரு. ஐயோ பாவம். வீடு கிடைக்காம அல்லாடறேயேன்னு பரிதாபப்பட்டு நான் என்கூட உன்னைத் தங்க வைச்சிருக்கிறேன். நாளைக்கு ஏதாச்சும் ஒரு வினையை நீ இழுத்து விட்டுட்டின்னா அவருக்குப் பதில் சொல்றது யாரு..?’’

ஆனந்தனைக் குறிபார்த்துத் தாக்கும் வார்த்தைகளுக்கான பதில் கீதாவிடமிருந்து வந்தது.

‘‘நான் சொல்லிக்கறேன்."

‘‘கீதா."

‘‘இது எங்க வீடு. நிரஞ்சன் படிக்கிற பள்ளிக்கூடத்தில வேலை செய்கிற வாத்தியாராச்சேன்னு பாவம் பார்த்து எங்கப்பா உங்களை இந்த வீட்டில தங்க விட்டிருக்காரு. இந்த ரெண்டு வருசத்தில இந்த வீட்டை நீங்க ஒரு வழி பண்ணிட்டிங்க. போஸ்ட் மாஸ்டர் உங்ககூட தங்க வந்தப்புறம்தான் வீடு வீடா இருக்கு. நீங்க வீட்டைப் போலவா வைச்சிருந்தீங்க..? வீடு பூராவும் தூசி, ஒட்டடைன்னு பாழடைஞ்ச மண்டபம் போல இருந்துச்சு. வாசல்பக்கம் இருக்கிற செடி கொடிகளுக்கு தண்ணி ஊத்தனும்னு ஒரு நாளாவது உங்களுக்குத் தோணியிருக்குமா..? செடிகளை வாட விடறவன் மனுசப் பிறவியே கிடையாது."

"இவர் வந்த முதல் நாளிலேயே வாடிப் போன செடிகளுக்குத் தண்ணி பாய்ச்சினாரு. அதை நான் மட்டும்தான் பார்த்தேன்னு நினைச்சீங்களா..? எங்க அப்பாவும் பார்த்தாரு. யாரும்மா அந்தத் தம்பின்னு கேட்டாரு. நம்ம ஊருக்குப் புதுசா வந்திருக்கிற போஸ்ட் மாஸ்டருன்னு சொன்னேன். பரவாயில்லையே. தம்பி

மனசில ஈரமிருக்கேன்னு சொன்னாரு. ஆமாம். தெரியாமத்தான் கேட்கிறேன். எங்க வீட்டில இவரைத் தங்க வைக்கிறதுக்கு எங்கப்பாகிட்ட நீங்க அனுமதி வாங்கினீங்களா..?’’

கீதாவின் அழுத்தமான கேள்வியில் திகைத்து விட்டான் சுகுமாறன். அவன் வீடு போல அவன் உரிமை கொண்டாடிய வீட்டில் அவனுக்கான உரிமையைப் பற்றிய கேள்வியை எழுப்பி விட்டாள் கீதா.

‘‘நான் உங்க சொந்தக்காரன் கீதா."

‘‘இந்த ஊரு பூராவும்தான் எங்களுக்குச் சொந்தக்காரங்க இருக்காங்க. சுத்துபட்டியில இருக்கிற அத்தனை சனமும் உறவுமுறை சனம்தான். அதுக்காக ஓசியா வீட்டில குடியிருந்துக்கன்னு விட்டுக் கொடுத்துற முடியுமா..? இந்த வீட்டுக்கு வாடகைன்னு ஒற்றைப் ரூபாய்' கொடுத்திருப்பீங்களா..? சம்பளம் வாங்கறிங்கதானே..? ஓசியில குடியிருக்கோ மேன்னு உங்க மனச்சாட்சி உறுத்தலை.?’’

‘‘என்கிட்டேயே வாடகை கேட்பியா..?’’

‘‘கட்டாயம் கேட்பேன். என் அனுமானம் சரியா இருந்துச்சுன்னா, நிச்சயமா போஸ்ட் மாஸ்டர் இந்த வீட்டில

ஒசியில குடியிருந்திருக்க மாட்டார். வாடகைன்னு கொஞ்சப் பணத்தை உங்க கையில கொடுத்திருப்பார்.''

கீதாவின் அதி நிச்சயமான அந்த அனுமானத்தில் ஆடிப் போனான் சுகுமாறன். அப்படித்தான் நடந்திருந்தது.

"உனக்குத்தான் இது மாமா வீடு. எனக்கு அப்படியில்லை. கை நிறைய சம்பளம் வாங்கறேன். வாடகைன்னு பணம் கொடுக்காம ஒசியில குடியிருக்க என்னால் முடியாது.''

கண்டிப்பாக சொல்லி விட்டு மாதா மாதம் வாடகைப் பணம் தந்து கொண்டிருந்தான் ஆனந்தன். அதை உணக்கையாக வாங்கிச் செலவளித்துக் கொண்டிருந்த சுகுமாறனுக்கு அதை கீதா கண்டுபிடித்து விட்டாளே என்ற சங்கடம் வரவில்லை.

மாறாக. அந்த அளவுக்கு அவள் ஆனந்தனைப் புரிந்து வைத்திருக்கிறாளே என்று வெறி வெறியாக வந்தது.

# அத்தியாயம் 15

**ஞா**யிற்றுக்கிழமையின் ஒய்வில் மனம் லயிக்க பரபரப்பில்லாத மனதோடு, காலைப் பொழுதை ரசித்தபடி ஏரிக்கரையின் மீது ஏறினான் ஆனந்தன். அன்பழகன்தான் அவனை அங்கே வரச் சொல்லியிருந்தான்.

"ஏரியில் விரால் மீன் பிடிப்பாங்க சார். ஞாயித்துக்கிழமை அந்தப் பக்கமா வாங்க. நான் முன்னாடி போயி காத்திருக்கிறேன். விரால் மீன் வாங்கிட்டு வந்திரலாம்.’’

அவன் மூட்டி விட்ட ஆசையில் ஞாயிறின் சிறப்பு உணவாக விரால் மீனைத் தீர்மானித்து விட்டான் ஆனந்தன். அதை வாங்க வந்தவன் ஏரிக்கரையின் அழகில் சொக்கிப் போய் விட்டான்.

கூடுகளை விட்டு இரை தேடிப் பறவைகள் கிளம்பிக் கொண்டிருந்தன. காலை நேரக் காற்றே சுகம்தான். அந்தக் காற்றும் ஏரித் தண்ணிரின் ஈரப்பசை படிந்த காற்றாக அவன் உடல் தழுவியதில் ஏற்பட்ட புத்துணர்வில் குளிர்ந்து போனான்.

ஏரியில் வாத்துக்கள் கூட்டம் கூட்டமாக நீந்திக் கொண்டிருந்தன. ஏரிக்கரையோரமாக நீர்வரத்தை உண்டு

பண்ணும் பனைமரங்கள் வரிசை கட்டி நின்றன. அவற்றின் மத்தியில் ஒடிய பாதையில் நடந்த ஆனந்தனுக்கு உற்சாகமாக இருந்தது.

அது ஏரிக்கரையைப் போலவே இல்லை. கண்ணுக்கு எட்டியதுரம் வரை தண்ணிர் அலை மோதிக் கொண்டிருக்க கடற்கரையைப் போல உணர்ந்தான் ஆனந்தன். ஏரிக்கரையோரமாக பனை மரங்களின் இடையினில் பூத்துக் குழுங்கிய செடிகள் காற்றில் ஆடியது நாட்டியத்தைப் போலவே இருந்தது.

கைலியை மடித்துக் கட்டிய ஆனந்தன் சன்னமாக விசிலடித்தபடி நடந்தான். அவனது கம்பீரமான நடையழகைக் கண்ட கீதா சொக்கிப் போனாள்.

ஆனந்தனைப் போல அவள் மீன் வாங்க அங்கே வரவில்லை. ஏரிக்கரையோரமாக இருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு வந்திருந்தாள். தொடர்ச்சியாக சிலதினங்கள் பிள்ளையாருக்கு நீர் ஊற்றி. பூக்களைக் கொண்டு அர்ச்சனை செய்து விளக்கேற்றி வழிபட வேண்டும் என்று பார்வதி சொல்லியிருந்ததால் இடுப்பில் குடமும் கையில் பூஜைக் கூடையுமாக அவள் ஏரிக்கரைக்கு வந்திருந்தாள்.

தன் போக்கில் கரையேறியவள் முன்னால் சென்று கொண்டிருந்த ஆனந்தனைப் பார்த்து விட்டாள். அவளுக்குள் புதுரத்தம் பாய்ந்தது. கைலியை மடித்துக் கட்டியவனின் உருண்டு திரண்ட கால் அழகில் அவளுக்கு ஏதோ போல ஆனது.

தினமும் அவள் பார்க்கும் ஆனந்தனாக அவனில்லை. எதிர் வீட்டிலிருப்பவன் பால் வாங்க வரும்போது கைலியை மடித்துக் கட்டாமல் இறக்கி விட்டிருப்பான். மற்ற நேரங்களில் பேன்ட், சட்டையோடு இருப்பான். இப்படி விச்ராந்தியாக கைலியை மடித்துக் கட்டிக் கொண்டு விசிலடித்தபடி நடக்கும் ஆனந்தன் புதியவனாகத் தெரிந்தான். அவனுக்குத் தெரியாமல் அவனைத் தொடர்ந்து நடப்பது புதுவித அனுபவமாக கீதாவுக்கு இருந்தது.

*முன்னாடி நீ போனா.*

*பின்னாடி வாரேன்.”*

மனதுக்குள் பாடிக் கொண்டாள். அவனது நடை திடிரென்று நின்றது. சுற்று முற்றும் பார்த்தான். பனைமரத்தின் பின்னால் கீதா மறைந்து கொண்டாள். சரிவில் இறங்கிய ஆனந்தன் கைலியையும் டி சர்ட்டையும் கழட்டி விட்டு பனியனும் இறுக்கிப் பிடித்த டிரவுசருமாக கால் பந்தாட்ட வீரனைப் போல நின்றான்.

ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்த கீதாவின் மூச்சுத் திணறியது. அது போன்ற உடையில் வெளிப்பட்ட அவனது உடலழகில் மனம் மயங்கினாள் அவள். ஆனந்தன் ஏரிக்குள் இறங்கினான். தண்ணீரைக் கிழித்துக் கொண்டு அம்பு போல லாவகமாய் நீந்தினான். இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்த கீதாவைப் பாடாய் படுத்தினான். அவளால் அங்கே நிற்கவும் முடியவில்லை. கடந்து நடக்கவும் முடியவில்லை.

அதிக நேரம் சோதிக்காமல் கரை திரும்பி விட்டான் ஆனந்தன். நனைந்திருந்த அவன் தலைமுடியில் தண்ணிர் சொட்டிக் கொண்டிருந்தது. உடல் முழுவதும் நீர்த் திவலைகள் படிந்திருந்தன. தாவணி கொண்டு துவட்டி விடவேண்டும் போல அலை பாய்ந்தது கீதாவின் மனம்.

*'நெஞ்சம் பொறு. கொஞ்சம் இரு.*

*தாவணி விசிறிகள் வீசுகிறேன்.*

*மன்மதன் அம்புகள் தைத்த இடங்களில்*

*சந்தன மாவிலை பூசுகிறேன்."*

மனதுக்குள் மத்தளம் வாசித்த பாடல் தோன்றியது. ஒரு துவாலையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு

வந்திருக்கலாம் அல்லவா என்று மனதுக்குள் அவனை கடிந்து கொண்டாள் கீதா.

இப்படித் துவட்டாம கைலியைக் கட்டி, டி சர்ட்டை மாட்டிக்கிறானே. ஏரித் தண்ணி. உடம்புக்கு சரிப்படலைன்னா என்ன செய்கிறது.?' கவலைப் பட்டாள்.

அவளது கவலையைப் பற்றி அறியாமல் கரையேறிய ஆனந்தன் இடுப்பில் குடத்துடன் நின்றிருந்த கீதாவைப் பார்த்து விட்டான்.

அவன் சும்மாவே கீதாவைக் கண்டு விட்டால் விலகிப் போக வழியைத் தேடுவான். இப்படி ஆளில்லாத ஏரிக்கரையில் அவளைக் கண்டு விட்டதும் ஒதுங்கி மறைய இடம் தேட ஆரம்பித்துவிட்டான்.

''இப்பத்தான் தண்ணிக்குள்ள இருந்து எழுந்திருச்சு வந்திருக்கீங்க. திரும்பவும் தண்ணிக்குள்ள குதிச்சு வைச்சிராதீங்க. இந்த ஏரிக்கரைப் பாதை எல்லோருக்கும் பொதுவானது. எனக்கு மட்டும் பட்டாப் போட்டதில்லை. இதில நீங்களும் நடக்கலாம். நானும் நடக்கலாம்.'' என்றாள் கீதா.

துணிச்சலான அவளது பேச்சில் ஒதுங்கி மறைய இடம் தேடிய ஆனந்தன் நிதானித்தான். ஒரு பெண்ணே இத்தனைத்

துணிச்சலாக பேசும் போது ஆண்பிள்ளையான அவன் ஓடி ஒளிய நினைப்பதா..? அவன் பேசாமல் நின்றதில் இடுப்பில் குடத்துடன் நடக்க ஆரம்பித்தாள் கீதா.

போதுமான இடைவெளி விட்டு பின்னால் நடந்த ஆனந்தனுக்கு.

*"ஏரிக்கரையின் மேலே.*

*போறவளே. பெண் மயிலே..!"*

என்று பாடத் தோன்றியது.

வேற வினையே வேணாம். மானசீகமாக குட்டு வைத்துக் கொண்டவன் வேகமாக எட்டு வைத்து அவளைக் கடந்து விரைந்தான்.

''போஸ்ட் மாஸ்டரு எந்தக் கோட்டையைப் பிடிச்சுக் கொடியை நட்டு வைக்க இம்புட்டு விரசா போறாராம்.?'' கீதா வம்பிழுத்தாள்.

பதில் சொல்லாமல் ஆழ்ந்து அவன் பார்த்த பார்வையில் அவளுக்கு மூச்சுத் திணறி விட்டது. விரைந்து அவன் மறைந்ததில்

ஏரிக்கரையே வெறுமையாகிப் போனதைப் போல அவளுக்கு இருந்தது.

அவன் இல்லாத பாதையில் நடந்து பிள்ளையார் கோவிலை அணுகியவள் ஒரு பெருமூச்சுடன் சரிவில் இறங்கி ஏரியிலிருந்த தண்ணீரை குடத்தில் நிரப்பி இடுப்புக்கு கொடுத்து கரையேறினாள். பிள்ளையாருக்கு நீர் ஊற்றி. அவரிருந்த மேடையைக் கழுவி சுத்தம் செய்து விட்டு. அவருக்கான புதுவஸ்திரம் அணிவித்து பூக்கள் கொண்டு அலங்கரித்து, கல் விளக்கில் எண்ணை ஊற்றி விளக்கேற்றி வணங்கினாள்.

அவளை முந்திக் கொண்டு விரைந்த ஆனந்தன் வேக நடையுடன் ஏரிக்கரையின் முனையை அணுகினான். அங்கே மீன் பிடித்துக் கொண்டிருந்த பொன்னழகனிடம் பேசிக் கொண்டிருந்த அன்பழகன் ஆனந்தனின் விரைவிற்கு ஆட்சேபம் தெரிவித்தான்.

‘‘நான்தான் முன்னாடியே இங்கே வந்து காத்திருக்கேன்னு சொன்னேனில்ல.? விரால் மீன் எங்கே ஓடிறப் போகுது. மத்த நாள்களிலதான் பரபரப்பா இருக்கீங்கன்னா ஞாயித்துக்கிழமையும் அப்படியே இருக்கனுமா..? மெதுவாத்தான் வந்தா என்ன..?’’

‘‘அந்தப் பொண்ணும் ஏரிக்கரைமேலே வந்துக்கிட்டு இருக்குப்பா.’’

“எந்தப் பொண்ணு.?”

ஏரிக்கரையை பார்த்தான் அன்பழகன். அங்கே யாருமில்லாததில் போஸ்ட் மாஸ்டரை மோகினி எதுவும் பயமுறுத்தி விட்டதோ என்று யோசனையானன். இந்த மனுசன் மோகினிக்கு பயப்படற ஆளில்லையே...

“என்னப்பா அப்படிப் பார்க்கிற.?"

“அங்கே எந்தப் பொண்ணையும் காணோமேசார்.."

“வந்துக்கிட்டு இருந்துச்சே.”

திரும்பிப் பார்த்தான் ஆனந்தன். யாருமில்லாததில் அவன் முகத்தில் ஏமாற்றம் கவிந்தது. அவனையே பார்த்துக் கொண்டிருந்த அன்பழகன். என்று கேட்டான்.

“யாரு சாரு வந்தது..?"

“அதான். எதிர் வீட்டுப் பொண்ணு.” எங்கோ பார்த்தான் ஆனந்தன்.

“கீதாம்மாவா..?"

“அடமாம்ப்பா. அடமாம்...."

‘‘இதுக்கா இப்படி ஒடி வந்தீங்க..? அவங்க இடுப்பில குடமும் கையில பூக்கூடையும் வைச்சிருந்தாங்களா..?"

‘‘அது எப்படிப்பா அவ்வளவு கரெக்டாச் சொல்ற..?’’

"தினமும் ஏரிக்கரை பிள்ளையாருக்கு தண்ணி ஊத்தி பூப்போட்டு கும்பிட்டு பூஜை பண்ணி விளக்கேத்திட்டுப் போவாங்க. இருந்தாலும் போஸ்ட் மாஸ்டர் அவங்களைக் கண்டாலே நடுங்கக் கூடாது.’’

ஆனந்தன் பதில் சொல்லவில்லை. அவளைக் கண்டு அவன் மனம் நடுங்குதென்னவோ உண்மைதானே.

# அத்தியாயம் 16

அரசபட்டினத்தின் அரசு மேல் நிலைப் பள்ளியை ஒட்டிய பரந்த மைதானம் அன்று கிரிக்கெட் மைதானமாக மாறியிருந்தது. திருவிழாக் காலங்களில் அங்குதான் சிலம்பப் போட்டி நடைபெறும் என்று அன்பழகன் சொல்லியிருந்தான். தேர்தல் சமயங்களில் அதே மைதானம் பொதுக்கூட்டத் திடலாகவும் மாறுமாம். அரச பட்டினத்தின் கபடிக் குழுவினர் கபடி விளையாடும் இடமும் அதுதானாம். அரசு மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டுப் போட்டிகளும் அங்குதான் நடக்குமாம்.

இப்படி எண்ணற்ற பயன்பாடுகளைக் கொண்ட விளையாட்டு மைதானத்தில் நிரஞ்சனும் அவனுடைய நண்பர்களும் கிரிக்கெட் விளையாடும் ஆயத்தங்களில் இருந்தார்கள். அனைத்து தெய்வங்களின் அனுகிரகத்தால் அன்றைய வேலைகளை சீக்கிரமே முடித்து விட்ட ஆனந்தனும் அன்பழகனும் அலுவலக பணி நேரம் முடிவடைந்த நொடியில் அலுவலகத்தைப் பூட்டி விட்டு அன்று மழை கொட்டோ கொட்டென்று கொட்டப் போகிறது என்ற தீர்மானத்தைப் பகிர்ந்தபடி வீட்டைப் பார்த்துக் கிளம்பினார்கள்.

யதேச்சையாக மைதானத்தின் பக்கம் பார்த்த ஆனந்தன் ஆர்வமாகி...

“அந்தப் பசங்க கிரிக்கெட்டா விளையாடறாங்க..?" என்று கேட்டான்.

"அப்படித்தான் அவனுக சொல்லிக்கிறானுக சார்.” அசுவராஸ்யமாகச் சொன்னான் அன்பழகன்.

“என்னப்பா இப்படிச் சொல்ற..?”

“வேற எப்படிச் சொல்றது சார். ? கிரிக்கெட்டைப் பத்தின அரிச்சுவடி கூட இந்தப் பயலுகளுக்குத் தெரியாது. இதில இவனுகளா ஒரு டீமை உண்டாக்கிக்கிட்டு பக்கத்து ஊருக்காரனுக கூட விளையாடப் போவானுக...“

"போயி...?”

"தோத்துப்புட்டுத் திரும்பி வருவானுக. வேற என்னத்தைச் செய்வானுக.?”

இலகுவாக அன்பழகன் சொன்ன விதத்தில் வாய் விட்டுச் சிரித்தான் ஆனந்தன்.

"அப்புறம். ?”

"அப்புறம். பக்கத்து ஊர்க்காரனுக இவனுககூட விளையாட அரசபட்டினத்துக்கு வருவானுக."

‘‘வந்து..?’’

‘‘வந்து, அவனுக ஜெயிச்சுட்டுப் போயிருவானுக.’’

மறுபடியும் இலகுவாக சொன்னான் அன்பழகன். ஆனந்தனின் சிரிப்பு தொடர்ந்தது. ஏனோ விளையாட்டு மைதானத்திற்குப் போக வேண்டுமென அவன் விரும்பினான். எதனால் அந்த ஆர்வம் ஏற்படுகிறது என்று அவனுக்குப் புரியவில்லை. நிரஞ்சன் கீதாவின் தம்பி என்பதினாலா..?

அதுதான் என்பது அவனுடைய ஆழ் மனதிற்கும் தெரியும். அன்பழகனுக்கும் தெரியும். அடுத்த விசாரணை எதுவாக இருக்கும் என்று அன்பழகன் ஆனந்தனின் முகம் பார்த்தான். ஆனந்தனோ மைதானத்தை நோக்கி நடந்தான்.

‘‘என்னாச்சு சார். காத்து அந்தப் பக்கமா அடிக்குது..?’’

சைக்கிளை உருட்டியபடி கூட வந்த அன்பழகன் கேட்டான்.

‘‘சும்மாப்பா. வீட்டுக்கு போயி என்னத்த செய்யப் போறோம்.?’’

‘‘அதுக்கு.?’’

‘‘இவனுக எப்படித்தான் விளையாடறானுகன்னு வேடிக்கை பார்க்கலாமில்ல.?’’

‘‘தேவையா சார். ? என்னதான் சீக்கிரமா வேலை முடிஞ்சாலும் வீட்டுப் பக்கம் போயிறக் கூடாதுங்கிறது போஸ்ட் ஆபிஸ்காரன் தலைவிதியா சார்...?"

"யோவ். புலம்பாம கூட வாய்யா..."

"புலம்பிட்டாலும் கழுதையில.."

‘‘என்ன முணுமுணுக்கிற.?’’

"ம்ம்ம்..? எங்க போஸ்ட் மாஸ்டரு, தங்க போஸ்ட் மாஸ்டருன்னு பாட்டுப் பாடறேன். போவிங்களா. புலம்பினா மட்டும் ஐயோ பாவம்ன்னு வீட்டைப் பாத்து போக விட்டுறப் போறிங்களா..?’’

‘‘வீட்டில போய் என்னய்யா செய்யப் போற.?’’

புதிதாகக் கல்யாணமான அன்பழகன் இந்தக் கேள்வியில் நொந்து போய் விட்டான். கண்ணுக்கு லட்சணமான புதுப் பெண்டாட்டி அவன் நினைவுக்கு வந்தாள்.

‘‘உங்களுக்கே நாயமா இருக்கா சார்.? நீங்கதான் கல்யாணமாகாத மனுசன்னா உங்ககூட வேலை பார்க்கிறவனும் அப்படியே இருப்பானா..?’’ கொதித்து விட்டான்.

‘‘விடுப்பா. விடுப்பா.’’ என்று அவனை ஆற்றுப் படுத்தினான் ஆனந்தன்.

அவர்கள் இருவரும் மைதானத்திற்குப் போன போது நிரஞ்சன் கேப்டனைப் போல அங்கே நில்லு, இங்கே நில்லு என்று பசங்களைப் போட்டுப் பாடாய் படுத்திக் கொண்டிருந்தான்.

‘‘இதுக்கே ஒன்னும் தெரியாது. அதில இது பண்ற அலம்பலைப் பாத்தீகளா சார்.?’’

தலையில் அடித்துக் கொண்டான் அன்பழன்.

"பாவம்ப்பா. சின்னப்பையன். ஆனந்தன் நிரஞ்சனைத் தாங்கிப் பேசினான்..."

‘‘அதானே. பையன் யாரு..? அனுதாப அலை அடிக்காமப் போயிருமா..?" அர்த்தத்துடன் கேட்டான் அன்பழகன்.

"நீயா எதையாவது நினைச்சுக்கிட்டா அதுக்கு நான் பொறுப்பில்ல.’’

பற்றில்லாத ஞானியைப் போல முகத்தை வைத்துக் கொண்டான் ஆனந்தன்.

“நம்பிட்டேன்..." நம்பாத பார்வையுடன் சொன்னான் அன்பழகன்.

அவர்கள் இருவரையும் பார்த்து விட்ட பையன்கள் தங்களுக்குள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்கள். நிரஞ்சனின் முகத்தில் வெட்கம் வந்திருந்தது. சும்மாவே சொதப்பும் பையன்கள் போஸ்ட் மாஸ்டர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற பதட்டத்தில் மட்டக் கேவலமாக ஆடி வைத்தார்கள்.

“என்னாப்பா இப்படி விளையாடறானுக.?” ஆனந்தன் அரண்டு விட்டான்.

"நான்தான் சொன்னேனே சார். இவனுக கிட்டிப்புல்லையும், பச்சைக் குதிரை தாண்டறதையும் ஒன்னாப் போட்டுக் கலக்கியடிக்கிறவனுக. இவனுக ஆடறதை இவனுகதான் கிரிக்கெட்டுன்னு சொல்லிக்கிட்டுத் திரியறானுக. கிரிக்கெட்டை கண்டு பிடிச்சவனுக மட்டும் இவனுக ஆடறதப் பாத்தான்னு வையுங்க. அந்த இடத்திலேயே ரத்தம் கக்கிப் போய்

சேர்ந்திருவானுக.’’ சிரிக்காமல் விளக்கம் கொடுத்தான் அன்பழகன்.

கீதாவின் தம்பி கிரிக்கெட்டில் சொதப்புவதா..? ஆனந்தனுக்கு மனம் தாங்கவில்லை.

‘‘நிரஞ்சா. இங்கே வாப்பா.’’ கூப்பிட்டான்.

"அவனை ஏன்சார் கூப்பிடறீங்க..?’’ சந்தேகமாக கேட்டான் அன்பழகன்.

"ம்ம்ம். அவனோட அக்காகிட்ட தூது சொல்லி அனுப்ப.’’ என்றான் ஆனந்தன்.

"நீங்க தூது சொல்லி அனுப்பிட்டாலும். கழுதையில. அந்தக் தைரியமெல்லாம் உங்களுக்கு கிடையாது சார்.’’ அறிவித்தான் அன்பழகன்.

"அப்பேற்பட்ட தைரியமே எனக்கு வேணாம்ப்பா." என்ற ஆனந்தன் தயக்கத்துடன் வந்த நிரஞ்சனின் தோள்மீது நட்புடன் கை போட்டான்.

பதினொன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த நிரஞ்சனின் முகம் மலர்ந்த விட்டது. அவன் விளையாடிய மட்டக் கேவல

விளையாட்டை விமரிசிக்கத்தான் ஆனந்தன் கூப்பிடுகிறான் என்ற நினைவுடன் வந்தவன் அப்படியில்லை என்பதில் ஆனந்தமாகி விட்டான்.

“கிரிக்கெட்டுன்னா உனக்கு ரொம்ப பிடிக்குமா..?”

“உயிர் சார்.”

“இதை யார்கிட்டக் கத்துக்கிட்ட.? உங்க ஸ்கூலில் கோச்சிங் கொடுத்தாங்களா..?”

“நீங்க வேற. அவங்க புட்பால், வாலிபால்ன்னு விளையாட விடுவாங்க. அதையும் பி.யி.டி. சமயத்திலதான் விளையாடனும். இதை நாங்களா விளையாடறோம் சார்."

"உன்னோட ஆர்வத்தைப் பாராட்டறேன்.”

“தேங்க் யு சார்.” மகிழ்ந்து போன நிரஞ்சன் என்னவோ போட்டியில் வென்று வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றி விட்டவன் போல பெருமையுடன் கூட்டாளிகளைப் பார்த்துக் கொண்டான்.

“கோச்சிங் இல்லாமலே வெளுத்துக் கட்டறிங்களே. கோச்சிங் கிடைச்சா இந்தியா டீமிலேயே இடம் பிடிச்சிற மாட்டிங்களா..?”

அன்பழகனுக்கு முதுகு காட்டி நின்றபடிதான் நிரஞ்சனிடம் உரையாடினான் ஆனந்தன். உரையாடலின் போக்கைத் தாங்க முடியாத அன்பழகன் விடுவேனா என்று ஆனந்தனின் முன்னால் வந்து நின்று.

"ஆனாலும் உங்களுக்கு இம்புட்டுப் பேராசை கூடாது சார்.." என்று பார்த்து வைத்தான்.

அன்பழகனைப் பார்க்காததைப் போல படு தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு நிரஞ்சனுக்கு தெம்பூட்டும் பணியை செவ்வனே தொடர்ந்தான் ஆனந்தன்.

‘‘இந்தியா டீமில ஆடனும்ங்கிற ஆசையெல்லாம் எங்களுக்குக் கிடையாது சார். இந்த சிறுவூர்க்காரனுக டீமையும் பெருவூர்க்காரனுக டீமையும் ஒரே ஒரு தடவையாவது ஜெயிச்சுப் புடனும்.’’ கண் சிவந்தான் நிரஞ்சன்.

"சிறுவூரும், பெருவூருமா..?" அன்பழகனை நிமிர்ந்து பார்த்தான் ஆனந்தன்.

‘‘என்னத்தைப் பார்க்கறிங்க..? எல்லாம் நம்ம பிரான்ச் ஆபிஸ்தான். சப் ஆபிஸை ஜெயிச்சுக்கிட்டு இருக்குது. எல்லாம் இந்தப் பசங்களச் சொல்லனும் சார். வராத கிரிக்கெட்ட விட்டுத்

தொலைங்கன்னா கேட்கிறானுகளா..?’’ சலித்துக் கொண்டான் அன்பழகன்.

"அப்படியா சேதி.? கவலையே படாதே நிரஞ்சா. உனக்கு நானிருக்கேன். இப்பவே ரெண்டு ஊருக்கும் தகவல் சொல்லிரு. எண்ணி பதினைஞ்சே நாளிலே ரெண்டு ஊருக்காரங்க கூடவும் உன் டீம் மோதுது. ஜெயிச்சுக் காண்பிக்குது. அரசபட்டினமா கொக்கா..?’’ சூளுரைத்தான் ஆனந்தன்.

"நிஜமாவா சார்.? நாங்க ஜெயிச்சுருவோமா..?’’ நம்பிக்கையில்லாமல் கேட்டான் நிரஞ்சன்.

‘‘பாத்திங்களா..? இவனுகளுக்கே நம்பிக்கையில்லை. இவனுகளை நம்பி சிறுவூர், பெருவூரோட மோதச் சொல்றீகளா..? இவனுக தேற மாட்டானுக சார்." என்றான் அன்பழகன்.

‘‘நான் தேத்திக் காட்டறேன்ய்யா..." ஆனந்தன் அப்போதே களமிறங்கி நிரஞ்சனுக்கும் அவனுடைய தோழர்களுக்கும் கிரிக்கெட்டைப் பற்றிய நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விட்டான்.

விதியே என்று தலையில் கை வைத்தபடி தள்ளி நின்று வேடிக்கை பார்த்த அன்பழகன் போகப் போக விளையாட்டில்

சுவராஸ்யமாகி கைதட்டி ஊக்கப் படுத்த ஆரம்பித்து விட்டான். இருட்டின பின்பு நிரஞ்சனுடன் பேசியபடி வீட்டுக்குப் போனார்கள். வாசலில் பால் பாத்திரத்துடன் நின்றிருந்தாள் கீதா.

‘‘என்னப்பா இது.?" பயந்து போனான் ஆனந்தன்.

‘‘அட சும்மாயிருங்க சார். பொசுக்கு பொசுக்குன்னு பயந்துக்கிட்டு. எதுத்த வீட்டுக்காரங்க பால் வாங்கி வைச்சுக் கொடுக்கிறது பழக்கம்தானே..?" சண்டைக்கு வந்தான் அன்பழகன்.

‘‘பால்காரக் கோனார் அப்பவே வந்துட்டார் அனபு."

‘‘நானும் போஸ்ட் மாஸ்டரும் நிரஞ்சனுக்கு கிரிக்கெட் சொல்லிக் கொடுத்துக்கிட்டு இருந்தோம்மா.’’

"நீயும். போஸ்ட் மாஸ்டரும் சொல்லிக் கொடுத்தீங்களா..?’’

‘‘போஸ்ட் மாஸ்டரு சொல்லிக் கொடுத்தாரு. நான் தள்ளி நின்னு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தேன். ஹி. ஹி..’’

அன்பழகனிடம் பால் பாத்திரத்தைக் கொடுத்தபடி ஆனந்தனைப் பார்த்த கீதாவின் விழிகளில் சொந்தம் மின்னியது.

# அத்தியாயம் 17

கீதாவைப் பார்க்காமல் ஆனந்தனுடன் பேசியபடி எதிர் வீட்டுக்குள் போய் விட்டான் நிரஞ்சன். கீதாவின் மனதில் இதம் பரவியது. நிரஞ்சன் எளிதில் யாரிடமும் பேசிப் பழகிவிட மாட்டான். அவன் ஆனந்தனுடன் ஒட்டிக் கொண்டதில் ஆச்சரியப்பட்டுப் போனாள் அவள். சிறு பையனின் மனதையும் வெல்லக்கூடிய ஆகர்ஷசக்தி ஆனந்தனிடம் இருக்கிறது என்பதில் அவளது மனம் விகசித்தது. சுகுமாறன் அரசபட்டினத்திற்கு வந்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிறது. ஒருநாள்கூட அவனிடம் நிரஞ்சன் பேச முயன்றதில்லை என்பதை அவள் நினைவு கூர்ந்தாள்.

சுகுமாறனும் நிரஞ்சனுடன் பேச முயன்றதில்லை. அவன் கீதாவிடம் பேசுவதற்கே ஆர்வம் காட்டுவான்.

மனம் நிறைய இனிக்கும் எண்ணங்களை நிரப்பி அசை போட்டபடி வீட்டுக்குள் போய் விட்டாள் கீதா. இவை எதையும் அறியாதவனாக மாடியில் கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்தான் சுகுமாறன்.

வீட்டுச்சாவிகள் இரண்டில் ஒன்றை ஆனந்தனிடம் அவன் கொடுத்திருந்ததால் வீட்டைத் திறந்து உள்ளே போன ஆனந்தன் விளக்குகளை எரிய விட்டான்.

‘‘வீடு இருட்டுக்கட்டிக் கிடக்கு. வாத்தியாரு வரலையா..?’’ அன்பழகன் சுற்று முற்றும் பார்த்து விட்டு.

‘‘வந்துட்டாரு போல் சார். வண்டி நிக்குதே.’’ என்று சுகுமாறனின் இருசக்கர வாகனத்தைச் சுட்டிக் காட்டினான்.

‘‘மாடியில இருப்பான்.’’

அதைப்பற்றிக் கண்டு கொள்ளாமல் பாலைக் காய்ச்ச ஆரம்பித்தான் ஆனந்தன். அன்பழகன்தான் பொருமினான்.

"ஆனாலும் இது அநியாயம் சார். வீட்டில லைட்டைப் போட்டுட்டு பாலை வாங்கி வைச்சிருக்கலாமில்ல.? இதைக்கூடச் செய்யாம குறட்டை விட்டுத் தூங்கினா எப்படி சார்.?’’

‘‘அவன் குணம்தான் தெரிஞ்சதாச்சே. விடு அன்பு.’’

ஆனந்தனின் பெருந்தன்மையை வியந்தபடி அவன் பின்னாடியே அலைந்து கொண்டிருந்தான் நிரஞ்சன். மூவருக்கும் காபி கலந்து முடித்த ஆனந்தன் நிரஞ்சனுக்கும் அன்பழகனுக்கும்

காபித் தம்ளர்களைக் கொடுத்து விட்டுத் தானும் ஒரு தம்ளரை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான். அங்கிருந்த சோபாக்களில் உட்கார்ந்து அவர்கள் காபி குடித்தபடி பொதுவாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பேச்சுச் சப்தத்தில் விழித்துக் கொண்ட சுகுமாறன் மெதுவாகப் பேச வேண்டியதுதானே என்று ஆனந்தனிடம் சண்டை போடுவதற்காக தடதடவென மாடிப்படிகளில் இறங்கி வந்தான். எள்ளும், கொள்ளும் முகத்தில் வெடிக்க வந்தவன் நிரஞ்சனைக் கண்டதும் திகைத்துப் போய் நின்று விட்டான்.

‘இவன் எங்கே. இங்கே..? ஆனந்தனின் பக்கத்தில் வெகு சுவாதீனமாக உட்கார்ந்து நிரஞ்சன் கதை பேசி சிரித்துக் கொண்டிருந்ததில் சுகுமாறனின் உடல் முழுவதும் மிளகாயை அரைத்துப் பூசியதைப் போல இருந்தது.

'களவாணிப்பய..! அக்கா மாதிரியே இவன்கிட்டப் பல்லப் பல்லக் காட்டிப் பேசறான். ஒருநா. ஒரு பொழுது என்கிட்ட முகம் பார்த்துப் பேசியிருப்பானா..? கேட்டா இவனுக்கு நான் வாத்தியாரும்பான். இவன் என்ன ஜியாக்ரபி குருப்பா எடுத்திருக்கான்.?' தாங்க முடியாமல் அவன் மேனி பதறியது.

“ஆனந்தா.” அவன் போட்ட சப்தத்தில் நிரஞ்சன் காபித் தம்ளரை நழுவவிட இருந்தான். அன்பழகன் கெட்டியாக பிடித்து நிரஞ்சனின் தம்ளரைத் தடுத்தாட் கொண்டான்.

“ஏன் சார் இப்படி எட்டுருக்குக் கேக்கிறாப்புல சத்தம் போடறிங்க. எங்களுக்குத்தான் உங்க சத்தம் பழக்கம். நிரஞ்சனுக்குமா பழக்கம். ? பாவம். பிள்ளைக்கு உடம்பே தூக்கிப் போட்டிருச்சு.” அன்பழகனின் பரிவில் சுகுமாறனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

“நீசும்மாயிரு அன்பு. உனக்கெதுவும் தெரியாது.”

“அதைச் சொல்லுங்க. உங்களுக்குத் தெரியற சூட்சுமம் வேற யாருக்கும் தெரியாதுதான்.”

“பேச்சு உனக்கும் எனக்குமில்லை அன்பு. ஆனந்தனுக்கும் எனக்கும்தான்.”

“அதுதான் தெரிஞ்ச சங்கதியாச்சே. போஸ்ட் மாஸ்டர் சார். வாத்தியாரு உங்ககிட்ட ஏதோ பேசனுமாம். பேசுங்க..."

“என்னடா..?”

“உன் மனசில என்னதாண்டா நினைச்சுக்கிட்டு இருக்க..? நினைச்சா வர்ற. நினைச்சாப் போற. வீடான வீட்டில சத்தமாப் பேசி கூத்தடிக்கிற.”

“பார்த்துப் பேசு சுகுமார். மாடியில நான் கால்வைச்சா ஏன்னு கேளு. உன் போர்சனில நீ இருக்கிற. கிரௌவுண்ட் ப்ளோரில நானிருக்கிறேன். ஆளுக்கொரு சாவிய வைச்சிருக்கோம். உன் வசதிக்கு நீ வந்து போகிற. என் வசதிக்கு நான் வந்து போகிறேன். உன்னைக் கதவைத் திறந்து விடச் சொன்னா ஏன்னு கேளு. சத்தமில்லாமப் பேசினா அது வீடே இல்லைடா. எல்லோரும் உக்காந்து பேசிச் சிரிக்கத்தான் ஹாலையே கட்டி வைச்சிருக்காங்க.”

அதைத்தானே சுகுமாறனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனும் அந்த வீட்டில் இரண்டு வருடங்களுக்கு மேல் குடியிருக்கிறான். அழகான பெரிய ஹால். விலையுயர்ந்த சோபாக்கள். உட்கார்ந்தால் ஆளை உள்ளே இழுத்துக் கொள்ளும் பஞ்சின் மென்மை கொண்டவை. சுவரில் பொருத்தப்பட்டிருந்த அகலமான பெரிய திரையைக் கொண்ட டிவி.! இவை அனைத்தையும் அனுபவிக்க முடியாமல் நீலகண்டனின் அம்மாவைப் பற்றிய பயம் சுகுமாறனைப் பிடித்து ஆட்டி வைத்துக் கொண்டிருந்ததே. அந்த ஹாலின் அழகை நின்று

பார்க்கக் கூட முடியாமல் அவன் நடுங்கிக் கொண்டிருக்க ஆனந்தனும் அவனுடைய சகாவும் அந்த ஹாலில் உட்கார்ந்து காபி குடிக்கிறார்கள். பேசிச் சிரிக்கிறார்கள். டிவி பார்க்கிறார்கள் என்றால் அவனுக்கு எப்படியிருக்கும்.?

அவன் பெறாத இன்பத்தை ஆனந்தனும் மற்றவர்களும் பெறுவதா..? பொறாமையில் பொசுங்கியபடி அவன் நிரஞ்சனைப் பார்த்தான். அவன் இவன் பார்வையை சட்டை செய்யாமல் ஆனந்தனிடம் ரகசியம் பேசிக் கொண்டிருந்தான். அந்த நெருக்கத்தைத் தாள முடியாத சுகுமாறன்.

“எப்ப வந்த நிரஞ்சா..?” என்றபடி நிரஞ்சனின் பக்கத்தில் உட்கார்ந்தான்.

நான்கு நபர்கள் உட்காரக்கூடிய சோபாவில் ஆனந்தனுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த நிரஞ்சன் சட்டென நகர்ந்து ஆனந்தனுடன் ஒட்டிக் கொண்டு உட்கார்ந்ததில் சுகுமாறனின் தன்மானம் அடி வாங்கியது. எதிரில் இருந்த ஒற்றைச் சோபாக்களில் ஒன்றில் உட்கார்ந்திருந்த அன்பழகனின் எக்ஸ்ரே கண்கள் இந்நேரம் இந்நிகழ்வை பகிர்ந்து கொண்டிருக்கும் என்ற நினைவில் புழுங்கிப் போனவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கெத்தாக இருக்க முயன்றபடி.

“கீதா எதுவும் சொல்லி விட்டுச்சா..?” என்று கேட்டு வைத்தான்.

“என்னது.?” முகம் சுளித்தான் நிரஞ்சன்.

ஆனந்தனுக்கும், அன்பழகனுக்கும் அந்த கேள்வி பிடிக்க வில்லையென்றாலும் சுகுமாறனிடம் பேச முடியாது என்பதில் பல்லைக் கடித்தபடி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“இங்கே உட்கார்ந்திருக்கயே. அதான் கேட்டேன்.”

“அதுக்கு இப்படித்தான் கேப்பீங்களா சார்.? இப்படிக் கேக்காதீங்க. அப்பாவுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்.”

"பயபுள்ள போட்டுக் கொடுத்திருவானோ.’

நிரஞ்சனின் எச்சரிக்கையில் சுகுமாறனுக்கு குலை நடுங்கிப் போனது.

'எதைப் பேசினாலும் மண்ணைக் கவ்வ வைக்கிறானே...'

நீலகண்டனின் வீட்டுச் சுவரில் மாட்டப் பட்டிருக்கும் இரட்டைக்குழல் துப்பாக்கியின் நினைவில் நொந்து போனான்.

‘‘நான் போஸ்ட்மாஸ்டர் சார் கூட வந்தேன்..." நிரஞ்சன் கொண்டாடிய சொந்தத்தில் சுகுமாறன் வெறி கொண்டான்.

‘‘உனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற வாத்தியாரப் பாக்க வந்தேன்னு சொல்லு. அதில ஒரு அர்த்தமிருக்கு. போஸ்ட் மாஸ்டர் கூட வந்தேன்னு சொல்றியே. படிக்கிற பையனுக்கும் போஸ்ட் ஆபிசுக்கும் என்னப்பா சம்பந்தம்..?"

‘‘நான் பூகோள குருப்பில்லையே சார்.‘‘

"இதை எதுக்கு இப்பச் சொல்ற..?’’

"நீங்க எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கலைங்கிறதுக்குச் சொல்றேன். அப்புறம், படிக்கிற பையனுக்கு மட்டுமில்ல. ஊரில இருக்கிற அத்தனை மக்களுக்கும் போஸ்ட் ஆபிசுக்கும் சம்பந்தம் இருக்கும் சார். எல்லோரும் தபால் போடுவாங்க. எல்லோருக்கும் தபால் வரும். இது போக படிக்கிற பையன் மணி ஆர்டர் அனுப்பக் கூடாது. பணம் சேர்க்கக் கூடாதுன்னு ஏதாச்சும் சட்டம் இருக்குதா சார்..? இல்லைல்ல.? அதுக்கெல்லாம் போஸ்ட் ஆபிசுக்குப் போய்த்தானே ஆகனும். ?’’

நிரஞ்சன் போட்ட போட்டில் இவனுக்கு இவ்வளவு திறமையாக பேச வருமா என்று ஆனந்தனும், அன்பழகனும்

ஆச்சரியப் பட்டுப் போனார்கள். சுகுமாறனோ வியர்த்துப் போன முகத்தை துடைத்துக் கொண்டான்.

'ஒற்றைக் கேள்விக்கு இம்புட்டு நீள பதிலா..? அதுவும் போதாது என்று ஆனந்தனுடன் நிரஞ்சன் ஐக்கியமாகி இருப்பதற்கான தாத்பர்யத்தையும் பிட்டுப்பிட்டு வைத்தான் நிரஞ்சன்.

‘‘எது எப்படியோ சார். எங்க பள்ளிக்கூடத்தில நீங்க வாத்தியாரா இருந்தும் உங்ககிட்ட பாடம் படிக்கிற குடுப்பிணை எனக்கு இல்லை.’’

'இதை சந்தோசமா சொல்றானே.'

‘‘ஆனா. போஸ்ட் மாஸ்டர்கிட்டப் பாடம் படிக்கிற குடுப்பிணை மட்டும் எனக்கு இருக்கு.’’

'இதை மட்டும் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிக்கிட்டுச் சொல்லுறானே.'

‘‘போஸ்ட் மாஸ்டர்தான் எங்க கிரிக்கெட் டீமுக்கு கோச்.." பெருமிதமாக அறிவித்தான் நிரஞ்சன்.

# ஆனந்த கீதம்

தனக்குக் கிரிக்கெட் தெரியாது என்பதில் தலைவேதனை கொண்டான் சுகுமாறன். கிரிக்கெட்டுக்கும் அவனுக்கும் காத தூரம். கிரிக்கெட்டில் தேர்ந்த வல்லுனனாக இருந்த ஆனந்தனை வெல்ல முடியாத சாத்தியக் கூறுகள் இருந்ததில் ஊமையாகிப் போனான். அனுதினமும் சாயங்கால வேளைகளில் நிரஞ்சனுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் தீவிரமான பயிற்சி கொடுத்தான் ஆனந்தன். சிறுாவூர், பெருவூருடன் மோதி ஜெயித்த அரசபட்டினத்தின் கிரிக்கெட் டீம் அதை நம்ப முடியாமல் ஆனந்த அதிர்ச்சியுடன் திக்கு முக்காடியது. ஆனந்தனை அலேக்காகத் தூக்கி மைதானத்தைச் சுற்றி வந்தது. நிரஞ்சனும் அவனுடைய நண்பர்களும் மகிழ்ந்து போனார்கள்.

# அத்தியாயம் 18

“என்ன சார். கோவிலுக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கீங்க..?”

அலுவலகம் முடிந்தவுடன் வழக்கம் போல ஆனந்தனுடன் ஜோடி போட்டுக் கொண்டு சைக்கிளை உருட்டியபடி வீட்டுக்குச் சென்று. பால்கார கோனார் வந்தவுடன் அவனுடன் கொஞ்சம் வம்பிழுத்து, வாய் வளர்த்து ஒருவழியாக அவனை ஓட வைத்து விட்டு ஆனந்தன் போட்டுக் கொடுத்த கள்ளிச்சொட்டுக் காபியை சொட்டு மீதமில்லாம காலி செய்து விட்டு தன் வீட்டுக்குக் கிளம்பப் போனவனை.

"இருப்பா. மெதுவாப் போகலாம்..." என்று நிறுத்தி வைத்து விட்டுக் குளித்து உடை மாற்றி வந்தான் ஆனந்தன். வேட்டி சட்டையில் சாத்வீகமாக வந்தவனைப் பார்த்து அயர்ந்து போன அன்பழகன்.

“என்னாச்சு சார் உங்களுக்கு.” என்று கவலைப்பட்டுப் போனான்.

“ஒன்னும் ஆகலை. வா. போகலாம்.”

ஆனந்தன் வீட்டைப் பூட்டிக் கொண்டு தெருவில் இறங்கி நடந்ததும் எங்கேயோ ஊர் சுற்றத்தான் அழைத்துக் கொண்டு போகிறான் என்ற நினைவில் உடன்பிறப்பான சைக்கிளை உருட்டியபடி ஊர்க் கதைகளை அள்ளி விட்டபடி கூட நடந்த அன்பழகன் எங்கே போகிறோம் என்பதைக் கவனிக்கவில்லை.

‘‘ஒம். நமச்சிவாய. சிவாய. நம ஒம்..."

பக்திப் பரவசமான ஒலிபெருக்கியின் உச்சரிப்பில் எங்கே வந்திருக்கிறோம் என்று நிமிர்ந்து பார்த்தால் எதிரே சிவன் கோவில் இருந்தது.

அன்பழகன் ஊர் சுற்ற என்றால் முதல் ஆளாக நிற்பான். கோவில் என்றால் ஒரு காத தூரத்திற்கு ஒடி விடுவான். அதனால் சொல்லாமலே அவனைக் கோவிலுக்குத் தள்ளிக் கொண்டு வந்து விட்டான்

‘‘என்ன சார். கோவிலுக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கீங்க..?’’

‘‘இன்னைக்கு என்ன கிழமை அன்பு.."

‘‘வெள்ளிக்கிழமை சார்.’’

‘‘அதான். கோவிலுக்கு வந்திருக்கோம்.’’

“இது நாயமே இல்லை சார். ஒரு மனுசனாப்பட்டவனுக்கு தான் எங்கே போகிறோம்ன்னு தெரிஞ்சுக்கக் கூட உரிமையில்லையா..?”

“அதான். இப்பத் தெரிஞ்சுக்கிட்ட இல்ல.? அப்புறம் என்ன..?"

“நான் கோவில் பக்கமே வாரதில்ல சார்..."

“ஏன் வர்றதில்ல.? மந்திரமாவதும் திருநீறு.! புரிஞ்சுக்க.”

“என்னத்தைப் புரிஞ்சுக்கிட்டு.”

ராகம் போட்டபடி சைக்கிளை கோவிலுக்கு வெளியே நிறுத்தி பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்ட அன்பழகன் பக்கத்திலிருந்த பூக்காரம்மாவிடம். “சைக்கிளைப் பார்த்துக்கம்மா..". என்று சொல்லி வைத்தான்.

“உன் ராயல் என்ஃபீல்டை யாரும் கைப்பத்திக்கிட்டுப் போக மாட்டாங்க. வா. வா.” என்றான் ஆனந்தன். அன்பழகனுக்கு ரோஷம் வந்து விட்டது.

“என்னோடது ஒட்டை சைக்கிளாவே இருக்கட்டும் சார். அதையாவது நான் வைச்சிருக்கேனா இல்லையா..? போஸ்ட்

மாஸ்டரா இருந்து என்ன பிரயோசனம். ? அங்கே ஒட்டை சைக்கிளுக்குக் கூட வழியைக் காணோமே.'' என்று சண்டைக்கு கிளம்பினான்.

''நடக்கிறதில இருக்கிற சுகம். டு வீலரில கிடைச்சிருமா அன்பு...?"

''இப்படியே சொல்லிக்கிட்டு இருங்க. சுகுமாறன் வாத்தியாரப் பாருங்க. எம்மாம் பெரிசா வண்டி வைச்சிருக்கார்..."

''அவனுக்கென்னப்பா. பெரிய இடத்துக்கு மாப்பிள்ளையாகப் போறான்.

"அப்படியா சார். இருங்க. இதை இப்படியே நீங்க சொன்னதாச் சொல்லி கீதாம்மா காதுல போட்டு வைக்கிறேன்.''

''ஏன்ப்பா இந்த காண்டு.?''

பேச்சு வாக்கில் இருந்தவனைக் கோவிலுக்குள் இழுத்துக் கொண்டு நடந்தான் ஆனந்தன். மாலை நேரத்துக் கோவிலின் பிரகாரம் மனதுக்கு அமைதியைத் தருவதாக இருந்தது.

''நல்லா இருக்கே சார்.'' அன்பழகன் வியந்து போனான்.

“அதுக்குத்தான் சொன்னேன். கோவிலுக்கு வந்து பாருன்னு.” ஈஸ்வரனின் சன்னதியில் மிதமான கூட்டம் இருந்தது. பெண்கள் பகுதியில் பட்டும், வைரமுமாக பெரிய வீட்டுக் களையுடன் மங்களகரமான தோற்றத்துடன் இருந்த பெண்மணி அன்பழகனைப் பார்த்து புன்னகைத்தாள்.

“வணக்கம்மா..." மரியாதையுடன் சொன்னான் அன்பழகன்.

"ஆண்டவன் சன்னதியிலே அவருக்குத்தான் வணக்கம் சொல்லனும். மனுசங்களுக்குச் சொல்லக் கூடாது.” என்றாள் அந்தப் பெண்மணி.

ஆனந்தனை அவள் பார்த்த பார்வை அறிமுகமான மனிதரைப் பார்க்கும் பார்வையாக இருந்ததில் இந்தப் பெண்மணியை எங்கே பார்த்தோம் என்று யோசித்துக் குழம்பிப் போனான் அவன். அன்பழகனிடம் கேட்கலாம் என்றால் அது ஈசனின் சன்னிதானமாக இருந்தது. அன்பழகன் வெங்கலத் தொண்டையில் பதில் சொல்லி விட்டால் நன்றாக இருக்காது. அதனால் அப்புறமாக அன்பழகனிடம் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம் என்று தள்ளி வைத்து விட்டு. தீபாதரனை ஒளியில் தெரிந்த ஈசனை ஆவலுடன் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

“எங்கப்பன் சிவனைப் பத்தி யாராச்சும் பாட்டுப் பாடுங்க.” அர்ச்சகர் கூறினார்.

குழுமியிருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி பேசாமல் இருக்க. ஆனந்தன் கணிரென்ற குரலில் பாட ஆரம்பித்தான்.

*“தீன கருணாகரனே நடராஜா.!*

*தில்லைநாதனே.”*

சுருதி சுத்தமான அவனது பாடலில் குழுமியிருந்தவர்கள் மௌன வியப்புடன் ஆழ்ந்து கேட்க ஆரம்பித்தார்கள்.

*“பஞ்ச பூத தலங்கள் கொண்டாய்.*

*பாருக்கெல்லாம் காவல் நின்றாய்.*

*கைலாயத்தில் குடி கொண்டாய்.*

*நீல கண்டனே.”*

அர்ச்சகரின் முகத்தில் பக்திப் பரவசகம். ஆனந்தனின் பாடல் சிவனின் ஆலயத்தில் காற்றோடு கலந்து ஆகாய மார்க்கமாக

பயணிப்பதைப் போல உணர்ந்தான் அன்பழகன். அவனறிந்த ஆனந்தனா இவன் என்ற பிரமிப்பு அவன் முகத்தில் தெரிந்தது.

*“பிறை நிலாவைத் தலையில் சூடினாய்..!*

*பிள்ளையாரின் தந்தையாய் சாடினாய்.*

*முருகனை நெற்றிக் கண்ணில் படைத்தாய்.*

*நமச் சிவாயனே.”*

பெண்களின் வரிசையில் நின்றிருந்த பெரிய வீட்டம்மாள் பக்திப் பிழம்பாய் மாறிப் போயிருந்தாள். நெற்றியில் திருநீறிட்டு. வேட்டி சட்டையுடன் பாந்தமாக கை குவித்து இமைகளை மூடி உருகிப் பாடும் ஆனந்தனையே இமைக்காமல் பார்த்தாள்.

*“சடைமுடியில் கங்கையை வைத்தாய்.*

*உடலில் பாதியை உமையவளுக்குக் கொடுத்தாய்.*

*அம்மையோடு அப்பனும் ஆனாய்.*

*சொக்க நாதனே.!*

*தீன கருணாகரனே நடராஜா.!*

*தில்லை நாதனே."*

பாடி முடித்து இமைகளைத் திறந்து பரவசப் பட்டுப் போன ஆனந்தனுக்கு தீபாதரனை ஒளியில் புன்னகையோடு காட்சி தந்து அருள் பாலித்தார் ஈஸ்வரன். அம்பாளின் சன்னதிக்குக் சென்று உமையவளை வணங்கி விட்டு, நவக்கிரகங்களைச் சுற்றி விட்டு பிரகாரத்தை வலம் வந்தார்கள்.

"ஏன் சார் கோவிலுக்கு வந்தா இம்புட்டெல்லாம் செய்யனுமா..?" முட்டியைத் தடவியபடி கேட்டான் அன்பழகன்..

"ஏம்ப்பா.. கால்.. வலிக்குதா..?"

"வலிக்காதா சார். என்னவோ கிரௌவுண்டைச் சுத்தி ஓட விடறதைப் போலயில்ல நடக்க வைச்சுக்கிட்டு இருக்கீங்க."

"அவ்வளவுதாம்ப்பா. உக்காந்து எழுந்ததும் வீட்டுக்குப் போயிரலாம்."

"நிஜமாத்தான் சொல்றீங்களா..? வார்த்தை மாற மாட்டிங்களே.?"

"அட..! என்னாச்சுப்பா உனக்கு.? இதுக்குப் போய் இம்புட்டுக் கேள்வி கேட்கற.?"

“உங்களை நம்ப முடியாது சார். வாப்பா ஊரைச் சுத்தலாம்ன்னு சொல்லிக் கோவிலுக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்த ஆளுதானே நீங்க..?”

“கோவிலுக்கு வந்தா புண்ணியம் கிடைக்கும்ப்பா. உட்காரு..."

அவர்கள் பிரகாரத்தின் தூணில் சாய்ந்து உட்கார்ந்தார்கள். கோவில் கோபுரத்தை அண்ணாந்து பார்த்த அன்பழகன்.

“இதுவும் கூட நல்லாத்தான் இருக்கு சார்.” என்று லயிப்புடன் சொன்னான்.

ஆனந்தன் எது என்று கேட்காமல் புன்னகைத்தான். சில ஆழ்ந்த உணர்வுகளை சொல்லால் உணர்த்த வேண்டிய தேவையில்லை.

“இத்தனை நாளா இதையெல்லாம் கண்டுக்காம இருந்திருக்கேன் பாருங்க. என்னை என்னான்னு சொல்றது.?”

“இனிக் கண்டுக்க.”

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது அந்த பெரிய வீட்டம்மாள் அங்கே வந்தாள். சற்றுத் தள்ளி பிரகாரத்தில் அமர்ந்தவள் ஆனந்தனைப் பார்த்து வாத்சல்யத்துடன் சிரித்து.

“அருமையாப் பாடினிங்க தம்பி. மனசில பக்தி இருந்தாத்தான் லயிச்சுப் பாட வரும். உங்ககிட்ட அந்த பக்தி இருக்குது. இந்த சின்ன வயசில கடவுள் பக்தியோட இருக்கிறவங்களை பார்க்கிறது அபூர்வம் தம்பி. மனசுக்கு நிறைவா இருக்கு.” என்றாள்.

ஆனந்தனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. பொதுப் படையாக சிரித்து வைத்தான். அந்தப் பெண்மணி கையிலிருந்த பூஜைக்கூடையிலிருந்த தேங்காய் வாழைப் பழங்களை அன்பழகனிடம் நீட்டினாள். அவசரமாக அதை வாங்கிக் கொண்டான் அன்பழகன்.

“வர்றேன் தம்பி.." அந்தப் பெண்மணி போய்விட்டாள்.

“இப்படியா பறக்கா வெட்டியைப் போல வாங்குவ..?” ஆனந்தன் திட்டினான்.

“அடப்போங்க சார். மதியம் சாப்பிட்ட சாப்பாடு எப்பவோ செரிச்சுப் போயிருச்சு. நீங்க கொடுத்த காபி எவ்வளவு நேரத்துக்குத் தாக்குப் பிடிக்கும்.? புண்ணியவதி. பசிச்ச வயித்துக்கு பிரசாதத்தக் கொடுத்துட்டுப் போயிருக்காங்க. அதைச் சொல்ல வந்துட்டிங்களே.”

“அது சரிப்பா. அந்த புண்ணியவதி யாரு..?”

“நிசமாகவே உங்களுக்குத் தெரியாதா..?”

ஆச்சரியப்பட்டுப் போனான் அன்பழகன். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்று புரியாமல் விழித்தான் ஆனந்தன்.

# அத்தியாயம் 19

“**சா**ர் அந்தம்மாவ நிறையத் தடவ நீங்க பார்த்திருக்கீங்க.”

“எனக்கு நினைவில்லையேப்பா.”

“எப்படித்தான் நீங்க சுகுமார் வாத்தியாரோட பிரண்டா இருக்கீங்களோ..? அவருக்கு இருக்கிற விவரத்தில கால்வாசிகூட உங்களுக்கு இல்லை."

“இருந்துட்டுப் போகட்டும். அதனால ஒரு குறைவுமில்லை.”

“சார். அந்தம்மாதான் பார்வதியம்மா. பண்ணையாரோட சம்சாரம். கீதாம்மா, நிரஞ்சனோட அம்மா. எதுத்த வீட்டுல இருக்கிறவங்களைத் தெரியாதுன்னு சொல்ற பிரகிருதியை இப்பத்தான் பார்க்கிறேன். நேத்துக்கூட நாம ஆபிசில இருந்து வந்தப்ப அந்தம்மா வாசலில நின்னுக்கிட்டு இருந்தாங்களே.”

“நான் கவனிக்கலை அன்பு.”

“ம்ஹீம். நீங்க தேறாத கேஸ் சார்.”

“இனித் தேறி என்ன பண்ணப் போறேன்.? ஆல்ரெடி எனக்கு சென்ட்ரல் கவர்ண்மெண்ட் வேலையே கிடைச்சாச்சு. விடுவியா..?”

ஆனந்தனும் அன்பழகனும் கோபுரத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டபடி வீட்டைப் பார்த்துக் கிளம்பினார்கள். அன்பழகனின் சைக்கிள் பத்திரமாக நின்றிருந்தது.

“உன் ராயல் என்ஃபீல்டை யாரும் டச் பண்ணலை அன்பு.” கேலியாக சொன்னான் ஆனந்தன்.

“எனக்கு இதுதான் ராயல் என்ஃபீல்ட்.” காதலுடன் சைக்கிளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

அன்பழகன். அந்தக்கதை, இந்தக்கதை, சொந்தக்கதை என்று கதைகள் பலவற்றை பேசியபடி வீட்டுக்குப் போனவர்களை கோபத்துடன் எதிர் கொண்டான் சுகுமாறன்.

“நீ ஒரு முடிவோடதாண்டா இருக்க.”

“என்னடா சொல்ற..?”

“புரியாததைப் போலப் பேசாதே ஆனந்தா. திட்டம் போட்டுத்தானே காய் நகர்த்தற.?”

‘‘எந்தத் திட்டத்தைப் போட்டேன்..? எந்தக் காயை நகர்த்தறேன்.?’’

‘‘அன்னைக்கு என்னன்னா நிரஞ்சனுக்கு கிரிக்கெட் ஆசையைக் காட்டிக் கைக்குள்ள போட்டுக்கிட்ட. இன்னைக்கு எங்கத்தை முன்னாடி பக்திப் பாட்டுப் பாடி வேசம் போட்டு நல்லவன்னு பேரு வாங்கிக்கிட்ட இல்ல."

"டேய்..."

‘‘நான் வீட்டுக்கு வாரேன். எங்கத்தை கோவிலில இருந்து அப்பத்தான் வந்தாங்க. என்னைப் பார்த்ததும் உங்க நண்பர் நல்ல குடும்பத்தில பிறந்த குணமான தம்பி போல இருக்கு. கோவிலில சிவனைப் பத்தி பக்திப் பாடல் பாடினாரே பார்க்கனும். மனசெல்லாம் நிரம்பிருச்சுன்னு புகழ்ந்துட்டுப் போறாங்க. எனக்கு எப்படியிருக்கும். ? நீ நல்ல குடும்பத்தில பிறந்தவன்னா நான் எந்தக் குடும்பத்தில பிறந்தேன். நீ தங்கக் கம்பின்னா நான் யாரு..? பித்தளைக் கம்பியா..? "

‘‘சுகுமார்..."

"நிம்மதியா இருந்தேண்டா. நீ இந்த ஊருக்கு வாற வரைக்கும் நிம்மதியா இருந்தேன். நீ வந்த பின்னாலே என்

நிம்மதியே போச்சுடா. நான் உனக்கு என்னடா கெடுதல் செஞ்சேன்..? அறியாத ஊருக்கு வேலைக்கு வந்திருக்கேன்னு அடைக்கலம் கொடுத்தேன். அது தப்பாடா..?''

''ஷட் அப் சுகுமார். நீ குடியிருக்கிற வீட்டை என்னோட ஷேர் பண்ணிக்கிட்ட. அடைக்கலம் கொடுக்கல. மைண்ட் யுவர் வெர்டுஸ். உன்னைப் போல நானும் சம்பாதிக்கிறவன்தான். இன்னும் சொல்லப் போனா உனக்குச் சாப்பாட்டை நான்தான் போட்டுக்கிட்டு இருக்கேன். வீட்டு வாடகைக்குன்னு நான் உனக்குப் பணம் கொடுக்கிறேனே. உணக்கையாய் நேரா நேரத்துக்கு நீ சாப்பிடுகிற சாப்பாட்டுக்கு என்னைக்காவது நீ பணம் கொடுத்திருக்கியா..? பாலில இருந்து காய்கறி, மளிகை ஜாமான் வரை நான் பணம் போட்டு வாங்கறதும் இல்லாம உனக்குச் சமைச்சுக் கொட்டிக்கிட்டும் இருக்கேன். நீ அதை மொக்கு, மொக்குன்னு மொக்கிட்டு எனக்கு அடைக்கலம் கொடுத்ததா பேசிக்கிட்டு இருக்கே. குட்ஜோக். நான்தாண்டா உனக்கு அடைக்கலம் கொடுத்திருக்கேன்.''

''ஆனந்தா.''

''கத்தாதே. குரள் வளையைப் பிடிச்சுருவேன். ஆளைப் பாரு. உன்கூட ஹவுஸ் மேட்டா தங்கினா நீ என்ன வேணும்னாலும்

வாய்க்கு வந்தபடி பேசுவியா..? அன்பு. ஏதாச்சும் டிரை சைக்கிள் இருந்தாக் கூப்பிடு. ஜாமான் சட்டைக் கட்டிக்கிட்டு ஆபிசைப் பார்த்துப் போயிரலாம். இவன் தொல்லை தாங்கலை."

ஆனந்தன் முடிவெடுத்தவனாக பெட்டியைத் திறந்து சுவர் அலமாரியில் இருந்த துணிகளை இழுத்துத் திணிக்க ஆரம்பித்ததில் திகிலடைந்து விட்டான் சுகுமாறன்.

ஆனந்தன் வந்த பின்னால்தான் பயமின்றி அந்த வீட்டில் தூங்கி எழுந்திருக்கிறான். ஆனந்தன் போய் விட்டால் அவனோடு சுகுமாறனின் தூக்கமும் போய்விடுமே. அது மட்டுமில்லாமல் ஆனந்தன் நிரஞ்சனின் கிரிக்கெட் விளையாட்டுக்கான குருவாக ஆகி விட்டான். அவன் வீட்டை விட்டுப் போய் விட்டால் விபரிதமாகப் போய் விடும். நிரஞ்சன் பொடியன் நீலகண்டனிடம் சுகுமாறனைப் பற்றி வத்தி வைத்து விடுவான். பிள்ளைகளை தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடும் பண்ணையார் நிரஞ்சனின் வார்த்தையை சிரமேற் கொண்டு சுகுமாறனை வீட்டை விட்டுப் பற்றி விட்டு. அங்கே ஆனந்தனை மட்டும் ஏகபோக உரிமையுடன் குடிவைத்து விடுவார்.

அதன் பின் அரச பட்டினத்தில் சுகுமாறனால் தலை காட்ட முடியுமா..?

இத்தனையும் போதாது என்று நீலகண்டனின் பக்திப் பழமான பத்தினி. பார்வதியம்மாள், திருஞானசம்பந்தரைப் புகழும் அளவுக்கு ஆனந்தனை உயர்த்திப் புகழ்பாடி விட்டுப் போயிருக்கிறாள். ஆனந்தன் வீட்டை விட்டு வெளியேறி விட்டால் அவள் பங்குக்கு பண்ணையாரை தூண்டி விட்டு விடுவாள்.

அதற்கு மேல் அரசபட்டினத்தில் குப்பை கொட்டுவதைப் பற்றிச் சுகுமாறன் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

அவசரமாக ஆனந்தனின் பெட்டியைப் பிடுங்கி வைத்தான் சுகுமாறன்.

"நீயே என்னைப் புரிஞ்சுக்கலைன்னா வேற யார் என்னைப் புரிஞ்சுக்குவாங்க.. ஆனந்தா..?'' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான்.

'இவன் காரியக் கிறுக்கன்.' வெறுப்புடன் நினைத்துக் கொண்டான் அன்பழகன்.

‘‘வேணாம் சுகுமார். இது எல்லை மீறிப் போய்க்கிட்டு இருக்கு. நீ மெண்டலி டிஸ்டர்ப் ஆகிற. நாம தள்ளியிருக்கிறதுதான் உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது.’’ கண்டிப்புடன் சொன்னான் ஆனந்தன்.

'படுபாவி..! போறதிலயே தீவிரமா இருக்கானே.' திகிலானான் சுகுமறான்.

‘‘பேசறத எல்லாம் பேசிப்புட்டு டகால்ன்னு காலிலயும் விழுந்துடறிங்க வாத்தியாரே. நீங்க படா கெட்டிதான். அப்படியே நாடகசாலையைப் பார்க்கிறதைப் போலவே இருக்கு..’’ என்றான் அன்பழகன்.

‘‘சும்மாயிரு அன்பு. நீ வேற கிளப்பி விடாதே. ஆனந்தா உனக்கே தெரியும். நான் கீதா மேல உசிரையே வைச்சிருக்கேன்.’’

‘‘இது கீதாம்மாவுக்குத் தெரியுமா..?’’ ஊடே புகுந்தான் அன்பழகன்.

"உன்னைச் சும்மாயிருக்கச் சொன்னேனில்ல.’’

‘‘இதையெல்லாம் கேட்டுட்டு சும்மாயிருக்க நான் சித்தரும் இல்ல. புத்தரும் இல்ல. எப்பப் பார்த்தாலும் எங்க போஸ்ட் மாஸ்டரையே இம்சை பண்றதுக்குப் பதிலா கீதாம்மா கிட்ட நேரடியா உங்க மனசில இருக்கிற ஆசையைச் சொல்லிற வேண்டியதுதானே.?’’ கறாராக கேட்டான் அன்பழகன்.

‘‘அது என் முறைப் பொண்ணுதானேப்பா..?’’

‘‘பார்த்தா அப்படித் தெரியலையே. முறைக்கிற பொண்ணு மாதிரியில்ல தெரியுது..? மாமா, மாமான்னு நீங்கதான் சொல்லிக்கறிங்க. ஒருதரம் கூட பண்ணையாரு வாயாலே உங்களை மருமகன்னோ மாப்பிள்ளைன்னோ சொன்னதில்லையே.’’

அன்பழகன் பாயிண்ட், பாயிண்டாக போட்டுத் தாக்கியதில் கிளின் போல்டான சுகுமாறன் வெறி பிடித்தவனைப் போல சண்டைக்கு வந்தான்.

‘‘உன் லிமிட்டைத் தாண்டிப் பேசற அன்பு. என் குடும்ப விவகாரத்தைப் பேச நீ யார்.?’’

‘‘உங்க குடும்ப விவகாரத்தை எங்ககிட்ட கொண்டு வராதீங்கன்னுதான் நாங்களும் சொல்றோம்.’’

‘‘நீயென்ன இவன்கூட கூட்டுச் சேருகிற. இவன் என் பிரண்டு.’’

‘‘அது இவரைப் பெட்டியத் தூக்க வைக்கிற வரைக்கும் தான். இதுக்கு மேல பிரண்டுங்கிற வார்த்தையை நீங்க சொல்லக் கூடாது.

“இப்ப என்னதான் சொல்ல வர்ற..?” சுகுமாறன் இறங்கி வந்தான்.

அதுதான் அவன் குணம். கெஞ்சினால் மிஞ்சுவான். மிஞ்சினால் கெஞ்சுவான். என்ன பிறவியோ என்று கசந்து போனான் ஆனந்தன்.

“நீங்க கீதாம்மாவைக் கட்டிக்கனும்னு நினைக்கிறது உங்க பிரச்சனை. அதில போஸ்ட் மாஸ்டரை இழுக்கக் கூடாது. உங்களுக்காக இவரு வில்லன் வேசம் கட்ட முடியாது. யதார்த்தமாக எல்லோர் கூடவும் நல்லாப் பேசிப் பழகற மனுசனை இம்சை பண்ணக் கூடாது. உங்களுக்குத் திறமையிருந்தா கீதாம்மாவோட மனசை ஜெயித்துத் தாலியைக் கட்டுங்க. இல்லேன்னா கம்முன்னு இருங்க. மத்தவங்க மனசை புண் படுத்தாதீங்க. ஆமாம். சொல்லிட்டேன். ரொம்பப் பண்ணினிங்கன்னா பண்ணையார்கிட்ட நியாயம் கேட்டிருவேன்.”

அரண்டு விட்டான் சுகுமாறன். அன்பழகன் அப்படிச் செய்து விடக் கூடியவன்தான் என்பதில் சர்வாங்கரும் ஒடுங்கிப் போனான். அன்றைய சண்டை அத்துடன் முடிந்தது.

# அத்தியாயம் 20

**தூ**க்கம் வராமல் புரண்டு படுத்தான் ஆனந்தன். ஜன்னல் வழி அறைக்குள் விழுந்த நிலா வெளிச்சத்தின் வெண்மை அவனை தோட்டத்திற்கு வா என்று அழைத்தது.

அறைக்கதவைத் திறந்து ஹாலுக்கு வந்தவன் பிரிட்ஜைத் திறந்து தண்ணிர் பாட்டிலை எடுத்துத் தொண்டையில் கவிழ்த்தான். மாடிப்பக்கமிருந்து யாதொரு சப்தமும் வரவில்லை. சுகுமாறன் தூங்கியிருப்பான் என்று நினைத்துக் கொண்டான். ஆனந்தன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்ப முனைந்ததில் அரண்டு போனவன் அடக்கி வாசித்துக் கொண்டிருந்தான். ஆனந்தனுடன் அவ்வளவாக வம்பு பண்ணுவதில்லை. பொதுவாக எதையாவது பேசுவதைப் போல ஆரம்பித்து ஆனந்தன் கீதாவைப் பார்க்கக் கூடாது, பார்த்தாலும் பேசக் கூடாது என்று வந்து நிற்பான். தீர்க்கமாக ஆனந்தன் பார்க்கும் பார்வையில் வாயடைத்துப் போய் பேச்சை மாற்றி விடுவான்.

இவனை என்னதான் செய்வது..?

வாசல் கதவைத் திறந்தான் ஆனந்தன்.

சிலுசிலுவென்ற காற்று அவன் உடல் தழுவியது. இமை மூடி அதை ரசித்தான்.

'ஆஹா... அற்புதம்.'

அந்த சுகானுபவத்தில் மனமும் உடலும் மூழ்கித் திளைத்தன. தோட்டத்தில் நடந்தவன் யதேச்சையாக நிமிர்ந்து பார்த்தான். எதிர் வீட்டுப் பால்கனியில் கோட்டோவியமாக நின்ற கீதாவைக் கண்டதும் அவனது நடை நின்று விட்டது.

சுகுமாறன் பார்த்து விட்டால் வம்பு. இவளைப் பார்க்கத்தான் நான் தோட்டத்துக்கு வந்தேன்னு பட்டம் கட்டி சண்டைக்கு வந்துருவான். திரும்பிப் போய் விடலாம் என்ற முடிவுக்கு அவன் வந்தபோது கீதா பால்கனியை விட்டு அகன்று விட்டாள்.

நல்லதாகப் போனது என்று அவனால் மகிழ்ந்து போக முடியவில்லை. கடல்நீர் நடுவே குடி நீரைத் தேடும் வறியவனைப் போலத் தன்னை உணர்ந்தான். அவள் இல்லாத பால்கனி அவன் மனதுக்கு வலி நிரம்பிய ஏமாற்றத்தைத் தந்தது. ஒரு பெருமூச்சுடன் நடையைத் தொடர்ந்தான். காம்பவுண்டு கேட்டின் தாழை யாரோ சப்தம் இல்லாமல் நகர்த்தும் ஒலி வெகு துல்லியமாக அவன் காதுகளில் விழுந்ததில் நடையை நிறுத்தி

காதுகளை கூர்மையாக்கி பார்வையைத் தீட்டி வெகு உன்னிப்பாக கவனித்தான்.

மல்லிகையின் மணம் வந்தது. என்னடா இது. அன்பழகன் சொல்வதைப் போல மோகினி எதுவும் வந்து விட்டதோ என்று ஒர்கணம் நினைவு வந்தது. நிலவு வெளிச்சத்தில் பாவாடை தாவணி தெரிந்ததில் மோகினி பாவாடை தாவணி அணியுமா என்ற ஆராய்ச்சி அவன் மனதில் ஒடியது. சிகப்பு வண்ண தாவணி ஆடியது. வெண்மை நிறப் புடவை காற்றில் பறக்க வந்தால்தான் மோகினி. இது வேறு ஒரு தாவணி என்ற முடிவிற்கு வந்தவன் உற்றுப் பார்த்தான்.

கொழுசின் ஒலி கேட்காமலிருக்க அடிமேல் அடியெடுத்து வைத்து தோட்டத்தில் கால்பதித்தாள் கீதா.

இவளா..?.' ஆனந்தனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. துளிக்கூட இதை அவன் எதிர்பார்க்கவில்லை. பால்கனியில் நின்றிருந்தவள் வீட்டுக்குள் போனதும் தூங்கப் போயிருப்பாள் என்றுதான் அவன் நினைத்தான். இப்படித் துணிச்சலாக அவன் தங்கியிருக்கும் வீட்டுத் தோட்டத்திற்கே வந்து நிற்பாள் என்று நினைத்தும் பார்க்காததில் ஸ்தம்பித்து விட்டான்.

“கீதா. என்ன இது.?” தன்னுணர்வு வந்ததும் பதறினான்.

“என் பேர் கூட உங்களுக்குத் தெரியுமா..?”

அவள் தழுதழுத்தாள். ஆனந்தனுக்கு கலக்கமாக இருந்தது. அவளின் துக்கம் கலந்த கேள்வி அவன் நெஞ்சைத் தொட்டது. இருந்தாலும். அவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.

“இந்த நேரத்தில இங்கே வரலாமா..? ஊர்ப் பண்ணையாரோட மக நீங்க. அதுக்கான பொறுப்புணர்வு இருக்க வேணாமா..? ராத்திரி நேரத்தில துணிச்சலா வீட்டு வாசப்படியைத் தாண்டி இந்த வீட்டுத் தோட்டத்துக்கு வந்திருக்கீங்களே. யாராச்சும் பார்த்தா என்ன ஆகும்ன்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தீங்களா..?”

பேசியபடியே வீட்டை ஒட்டியிருந்த தோட்டத்து மரத்தின் நிழலுக்கு அடியில் நகர்ந்து விட்டான் ஆனந்தன். நிலா வெளிச்சத்தை மறைத்து இருள் போர்வையால் பாதுகாத்த அந்த நிழலுக்குள் கீதாவும் புகுந்து மறைந்து கொண்டாள்.

“எதையும் யோசிக்கிற நிலைமையில நானில்லை. பகலில் உங்களைப் பார்க்க முடியலை. பார்த்தாலும் பேச முடியலை. அப்படியே நானாக வலிய வந்து பேசினாலும் பேயைக்

கண்டதைப் போல என்னைக் கண்டாலே பயந்து நடுங்கி விலகி ஒடறிங்க. ஆபிஸிக்கு நான் வந்தா பேசக் கூலி கேக்கறிங்க. நான் என்ன பண்ணட்டும்.?''

உரிமையோடு அவள் அங்கலாய்த்ததில் ஆனந்தனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது. அவனை அன்னியனாகவே அவள் நினைக்கவில்லை. உடந்தைப் பட்டவனாக நினைத்து மனம் குமுறிக் கொண்டிருந்தாள்.

''கீதா..?'' ''எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. ஏன்னு தெரியலை. எங்க வீட்டு பால்கனியில இருந்து பார்த்தா இந்த வீட்டு ஹால், உங்க பெட்ரூம், முதற்கொண்டு எல்லாமே தெரியும். இரண்டு வருசமா சுகுமாறன் இங்கே தங்கியிருந்தார். ஆளில்லாத வீடு போல இருக்கும். நீங்க கால்வைச்ச மறுநொடியில வாடிக்கிடந்த செடிகளுக்கு தண்ணிர் பாய்ச்சினீங்களே. அப்ப ஆரம்பித்தது இந்த வீட்டோட உயிர்ப்பு.''

''இது உங்க வீடா இருக்கிறதாலே உங்களுக்கு இப்படித் தோணுது.'' ''காலம் காலமா இந்த வீட்டில குடியிருக்கிறதைப் போல முதல்நாளே சமைத்துச் சாப்பிட்டிங்க. சுகுமாறன் இந்த வீட்டோடு ஒட்ட மாட்டார். நீங்க பசை போட்டு ஒட்டிக்கிட்டிங்க. உங்க கண்ணியம், நிதானம், நிரஞ்சனோட மனசைக் கூட வெல்ல

முடிகிற அரவணைப்புன்னு சொல்லிக்கிட்டேப் போகலாம். உங்களைப் போல ஒருத்தரை நான் பார்த்ததே இல்லை.''

''என்னையும் மிஞ்சி வேறொருத்தன் வரலாம். நீங்களும் பார்க்கலாம். இது இளமைப்பருவத்தில் புதிதாக யாரையாவது பார்த்தா ஏற்படும் அட்ராக்சன்..! ஈர்ப்புணர்வு.! தட்ஸ் ஆல்.''

"தட்ஸ் ஆலா..? என் உணர்வுகள் அத்தனை சாதாரண மானவையா..?''

கீதா உடைந்து போன குரலில் கேட்டாள். மனம் தாள முடியாத ஆனந்தன் அவனையும் அறியாமல் அவள் தோள் தொட்டதில் சன்னமாக விசும்பியபடி அவன் மார்பில் சாய்ந்து விட்டாள்.

பதறிப் போனான் ஆனந்தன். அவளை விலக்கி நிறுத்தி விடு என்றது அவனது அறிவு. அவளது முதுகைச் சுற்றி வளைத்தன அவனது கரங்கள். அறிவின் எச்சரிக்கையை ஆழ்மனம் புறக்கணித்து ஜெயிக்க முற்பட்டதில் அவன் அதிர்ந்து போயிருந்தான்.

அவளது முதுகில் அவன் கரங்கள் படர்ந்ததில் அவள் இறுக்கமாக அவனை அணைத்துக் கொண்டு அவன் மார்பில்

முகம் புதைத்து விட்டாள். அவனது தோளை வளைத்துப் பிணைந்திருந்த அவளது வளைக்கரங்களின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் தவித்துப் போனான் ஆனந்தன்.

அவன் தீரன்தான். இரும்பு வேலியை உடைத்து நொறுக்கித் தூள் தூளாக்கி விடும் வல்லமை பெற்றவன்தான். அந்த இரும்பு மனிதனுக்கு அவனைச் சுற்றி வளைத்திருக்கும் பூவேலியை உடைக்கும் திராணியில்லை.

அவளது பின்னலில் சூடியிருந்த மல்லிகையின் வாசம் அவன் மனதை மயக்கியது. அவளது கூந்தலில் இருந்து வந்த சீயக்காய் பொடியுடன் கூடிய நறுமணம் அவனை சுண்டியிழுத்தது. அவளது மேனியிலிருந்து வந்த சந்தனச் சோப்புடன் கூடிய சுகந்த வாசனை எங்கோ ஓர் மாய உலகுக்கு அவனை இழுத்துச் சென்றது.

அவனிடம் அடைக்கலமாகி விட்ட உணர்வுடன் அவன் மீது தன் மனதில் ஒளித்து பொதித்து வைத்திருந்த காதல் உணர்வுகளைக் கொட்டிக் கொண்டிருந்தாள் கீதா.

“வீடு பூரா வேலையாளுக. இருந்தாலும் வாசல் தெளித்துக் கோலம் போடன்னு நான் ஒடியோடி வந்ததுக்கு நீங்க மட்டும் தான் காரணம். கோலம் போடற சாக்கில பால் வாங்க வர்ற உங்களைப் பார்க்கலாம். கோலம் போடறப்ப நீங்க

தோட்டத்துப்பக்கம் செடிகளுக்கு தண்ணிர் ஊத்தறதைப் பார்க்கலாம். சாயங்காலம் வாசலில் நின்னா ஆபிஸ் விட்டு வர்ற உங்களைப் பார்க்கலாம். இப்படி உங்களைப் பார்க்கிறது மட்டுமே என்னோட வேலையா மாறிப் போச்சு. நீங்க வீட்டுக்குள்ள இருக்கறப்ப. பால்கனி இருட்டில் உட்கார்ந்து உங்க வீட்டையே பார்த்துக்கிட்டு இருப்பேன். நீங்க அன்பழகன்கூடப் பேசுவீங்க. சிரிப்பீங்க. எனக்குப் பொறாமையா இருக்கும்.''

ஆனந்தனின் சட்டையை நனைத்த கீதாவின் கண்ணிர் துளிகளில் மனம் நெகிழ்ந்து போனான் அவன். இப்படியொரு காதலை இதயத்தில் சுமந்து கொண்டு அவள் இருப்பாள் என்று நினைத்தும் பார்த்திராதவனுக்கு நெஞ்சம் கனத்தது. வறியவன் கையில் வைரம் வந்து சேர்ந்திருக்கிறது.

அதைப் போற்றி வாழும் பாக்கியம் அவனுக்கு கிடைத்திருக்கிறதா..?

சுகுமார். ஏண்டா இந்த ஊருக்கு வந்தேன்.? எதுக்காக உன்னையும், இவளையும் சந்திச்சுத் தொலைத்தேன்.

இதயம் ரணமாக அவளை அணைக்கவும் முடியாமல் விலக்கவும் முடியாமல் மனம் மறுகினான் ஆனந்தன். அவன் கேட்டானா..? இப்படியொரு தேவதைப் பெண்ணின் காதல்

வேண்டுமென்று. கேட்காமலே வரம் கொடுக்கும் தேவதையாக அவனிடம் அவள் அடைக்கலமாகி உருகுகிறாள்.

அவள் அளிக்கும் வரத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஆண்டவன் அவனை வைக்கவில்லையே.

# அத்தியாயம் 21

“ஏன் என்னை வெறுக்கறிங்க..? விசும்பியபடி கேட்ட கீதாவின் கேள்வியில் அவனுக்கு துக்கம் கலந்த சிரிப்பத்தான் வந்தது. அவன் கீதாவை வெறுக்கிறானா..?

"அப்படின்னு யார் சொன்னது.?”

“யாரும் சொல்லனுமா என்ன..? அதான் உள்ளங்கை நெல்லிக்கனியப் போல உங்க மனசு தெரியுதே. என்னைக் கண்டாலே விலகி நடக்கறிங்க. பேசறதில்ல. இதுக்கு அர்த்தம் என்னவாம்.?”

இவள்தான் எத்தனை நுணுக்கமாக அவனை கவனித்து வைத்திருக்கிறாள் என்று வியந்து போனான் அவன்.

“இதைவிட அதிகமாவே கவனிச்சு வைச்சிருக்கேன். அங்கேதான் என்னைப் பத்தின எண்ணமில்லை.” குற்றம் சொன்னாள் அவள்.

ஆனந்தன் பெருமூச்சு விட்டான். அவளைப் பற்றி அவன் எண்ணுவதில்லை என்பது என்னவோ உண்மைதான் என்றாலும்

அவனது இதயத்தில் ஓர் ஓரமாக அவளைப் பற்றிய எண்ணங்களும், நினைவலைகளும் மண்டிக்கிடப்பது உண்மைதானே.

அதை அவள் அறிவாளா..? இல்லை. அவள் அறியும்படி அவனால் சொல்லத்தான் முடியுமா..? இயலாமையுடன் அவளை விலக்க யத்தனித்தான். அவள் விலக மறுத்து அவன் உடலோடு ஒட்டிக் கொண்டாள்.

என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறிப் போனான் ஆனந்தன். உடலோடு உடலாக ஒட்டி நிற்பவளை விட்டுப் பிரிக்கவும் அவனுக்கு மனம் வந்து தொலைக்கவில்லை. அதே சமயத்தில் அந்த நிலையை நீடித்தால் அவனையும் அறியாமல் அவனுடைய கட்டுப்பாடுகள் தகர்ந்து அவளுடன் சங்கமித்து விடுவானோ என்றும் அஞ்சினான்.

எப்படி அவளை விலக்குவது. ‘‘கீதா.’’ மிருதுவாக அழைத்தான்.

"ம்ம்ம்..’’ அவனை இறுக்கியபடி இமைதிறக்காமல் முணுமுணுத்தாள் கீதா.

‘‘எனக்கு உன்னைத் தெரிவதற்கு முன்னால் சுகுமாறைத் தெரியும்.’’ அவன் சொல்லி விட்டான். இமைமூடி அவன் மீது புதைந்திருந்தவளிடம் ஓர் அதிர்வு வந்ததை அவனது உடல் உணர்ந்தது. இமை திறந்தவள் அண்ணாந்து அவன் முகம் பார்த்தாள்.

‘‘புரியலை. இப்ப சுகுமாறனைப் பத்தி எதுக்குப் பேசனும். ?’’

‘‘பேசியாகனும் கீதா. அவனும் நானும் ஸ்கூலில இருந்து காலேஜ் வரைக்கும் ஒன்னாப் படிச்சவங்க.’’

"அப்படிப்பட்ட நெருங்கின நண்பர்தான் உங்களை நான் தோட்டக்காரன்னு நினைச்சப்ப இல்லேன்னு சொல்லாம ஆமாம்ங்கிறதைப் போல நின்னாராக்கும்..?"

கீதா சுட்டிக்காட்டிய நிகழ்வில் சங்கடம் கொண்டான் ஆனந்தன். சுகுமாறனின் பொடித்தனத்தால் எப்படியெல்லாம் கேலிக்கு ஆளாக வேண்டியிருக்கிறது..?

‘‘அவன் குணம் அப்படி..?’’

"அதைக் காட்டிக் கொடுக்காத உங்க குணத்தைத்தான் எனக்குப் பிடிக்குது.’’

‘‘இல்லை கீதா. அவன் ஒன்றும் கெட்டவனில்லை.’’

சுகுமாறனைத் தங்கிப் பேசினான் ஆனந்தன். அவன் பேசித்தான் ஆக வேண்டும். கீதாவின் மனதில் சுகுமாறனைப் பற்றிய நல் அபிப்ராயத்தை உருவாக்கித்தான் ஆக வேண்டும்.

இல்லாவிட்டால் சுகுமாறனின் காதலியைத் தட்டிப் பறித்து விட்ட பாவத்திற்கு அவன் ஆளாகி விடுவான்.

‘‘நல்லவரும் இல்லை."

‘‘சந்தர்ப்ப சூழ்நிலைகள்தான் ஒரு மனிதனை நல்லவனா இல்லை கெட்டவனான்னு தீர்மானிக்குது கீதா.’’

‘‘ஒஹோ.’’

‘‘சுகுமாறனுக்கு ஒரேயொரு ஆசைதான்.’’

"அப்படின்னு நீங்க நினைச்சுக்கிட்டு இருக்கறிங்க. அவருக்கு ஊருப்பட்ட ஆசை இருக்கு.’’

'எனக்குத் தெரியாதா..?’ என்று நினைத்துக் கொண்டான் ஆனந்தன். நினைப்பதை எல்லாம் வெளியில் சொல்லிவிட முடியுமா..? இல்லை. நினைக்காமல்தான் இருக்க முடியுமா..?

‘‘அவன் உன்மேல உயிரையே வைச்சிருக்கான் கீதா.’’

கை வளைவில் காதலியை வைத்துக் கொண்டு. இறுக்கி அணைத்துக் கொண்டிருப்பவளின் காதோரமாக ரகசியக் குரலில் இப்படியாகப்பட்ட வார்த்தைகளைப் பேச வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு ஆளாகி விட்டதில் துயரப்பட்டுப் போனான் ஆனந்தன்.

‘‘என்னது.?’’

கீதா விலகி விட்டாள். அவளை விலக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த ஆனந்தனால் அவள் விலகியதில் மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை. வைரத்தை பறி கொடுத்த வறியவனாக அவன்துக்கம் கொண்டு நின்றான்.

‘‘என்னை மன்னிச்சிரு கீதா. அவன் என்னிடம் சொன்னதைத்தான் உன்னிடம் சொல்றேன்.

‘‘அவர் சொன்னா. அதை நீங்க கேட்டுக்குவீங்களா..? என் மனசில என்ன இருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா..?’’

‘‘இந்த ஊருக்கு நான் வந்தப்ப இருக்க இடம் கிடைக்காம ஆபிஸில் தங்கிரலாம்ன்னு முடிவுக்கு வந்திருந்தேன். அவன்தான் இந்த வீட்டில அவனோட தங்கிக்கலாம்ன்னு கூப்பிட்டுக்கிட்டு

வந்தான். அப்படி வரப் போய்தான் என்னை நீ பார்த்த. இல்லேன்னா நீயாரோ. நான் யாரோ.’’

‘‘அதுக்கு...?"

‘‘ரெண்டு வருசமா உன்னையே நினைச்சுக்கிட்டு இருந்திருக்கான். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற கனவில வேற ஊருக்கு டிரான்ஸ்பர் வாங்கிக்காம இந்த ஊரிலேயே காலத்தை ஒட்டிக்கிட்டு இருக்கான். அதையும் நீ நினைச்சப் பார்க்கனும்.’’

‘‘என் மனசில அவரைப் பத்தின எந்த எண்ணமும் இல்லை. அவரைப் போல ஒரு பிரகிருதியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா மூச்சு முட்டிப் போய் சேர்ந்திருவேன்.’’

‘‘சீச்சி. என்ன பேச்சுப் பேசற.?’’

ஆனந்தனின் அதட்டலில் சுகமான இன்பம் வந்தது கீதாவுக்கு. அவனது உரிமையான அதட்டல் அவளைத் தாலாட்டியது. அதன் இதத்தில் அவள் முக்குளித்து எழுந்தாள்.

‘‘இதுக்குத்தானே ஆசைப்பட்டிங்க ஆனந்தனே.?’’

அவளின் கோபமான கேலியில் உதட்டைக் கடித்துக் கொண்டான் ஆனந்தன். அவளது கோபமான கேலியிலும் ஒரு நியாயம் இருக்கிறதே.

"அவனை விடு.’’

"ஆஹா. இதைச் சொல்றது நீங்கதானா..?’’

‘‘என்னைப் பத்தி நினைச்சுப் பாரு.’’

‘‘அதைத்தானே நானும் சொல்லிக்கிட்டு இருக்கேன். தினமும் உங்களை நினைச்சுப் பார்த்துக்கிட்டுத் தானே இருக்கேன்.? உங்களைக் காதலிக்கிறேங்க. உங்களை மட்டும்தான் காதலிக்கிறேன்.’’

கீதா மறுபடியும் அவன் மார்பில் சாய்ந்து விட்டாள். தேவதை வரம் கொடுத்து விட்டாள். துரதிர்ஷ்டசாலியான அவனால்தான் அந்த வரத்தைக் கொண்டு வாழ முடியவில்லை. சுகுமாறனுக்குக் கொடுத்திருந்த வாக்கு அவனைக் கட்டிப் போட்டிருந்தது.

‘‘இல்லை கீதா.’’ மனதை திடப்படுத்திக்கொண்டு அவளை விலக்கி நிறுத்தினான். அவள் முகம் பார்க்காமல் நிலவைப் பார்த்தபடி பேசினான்.

“இந்த வீட்டுக்கு வந்த முதல் நாளிலேயே தன் மனதைச் சொல்லி வாக்குக் கேட்டான் சுகுமாறன். அவனது குரல் பிசிறியது.

“என்ன..?” பதறினாள் கீதா.

"ம்ம்ம். இந்த வீட்டில நான் பெட்டிய வைச்ச மறுநிமிசமே அவன் ரெண்டு கண்டிசன் போட்டான். முதலாவது நான் மாடிப் பக்கம் வரக்கூடாது.”

“ஏன்னா அவன் கோட்டானைப் போல முழிச்சுக்கிட்டு பால்கனியிலே நின்னு எங்க வீட்டையே பார்த்துக்கிட்டு இருப்பான். அவனுக்குத் தெரியாம இருட்டுக்குள்ள நான் உக்காந்திருப்பேன்.”

அவன் இதைத்தான் செய்து தொலைப்பான் என்பதை புரிந்து வைத்திருந்த ஆனந்தன் கையாலாகாத கோபத்துடன் பல்லைக் கடித்தான்.

“இரண்டாவது கண்டிசன் உன்னுடன் பேசக் கூடாதுங்கிறது. நீயா பேச வந்தாலும் நான் விலகிப் போயிரனும்.”

அர்த்தத்துடன் உதடுகளைக் குவித்து 'ஓ போட்டாள் கீதா. அந்த ‘ஓ’ வைக் கேட்பதற்கு பதில் பூமிக்குள் புதைந்து போய் விடலாம் என்று காயப் பட்டுப் போனான் ஆனந்தன்.

‘‘அதனாலதான் ஐயா என்னைக் கண்டா எட்டடி தூரத்துக்குத் தள்ளித்துள்ளிக் குதிச்சு ஓடினீங்களா..?’’

"ம்..ம்..ம்..."

நிலா வெளிச்சம் மறைத்த மரத்தின் இருள் படர்ந்தநிழலில் ஒரு ரோமானியச் சிற்பம் போல அவளது மனதை மயக்கிக் கவர்ந்து இழுத்தவனின் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள் கீதா. அதில் தெரிந்த துயரத்தில் அவள் மனம் வலித்தது.

இவன் நல்லவன். இந்த நல்ல குணத்தை வைத்து காய் நகர்த்தி பகடை விளையாடறான் அந்த சுகுமாறன். நண்பனை வேணும்னா அவன் பகடைக்காயாக்கலாம். என்னை ஆக்க முடியாது.

‘‘எப்படின்னு தெரியலை கீதா. என்னையறியாம வாக்குக் கொடுத்திட்டேன். ஏன் அந்த வாக்கைக் கொடுத்தேன்னு இப்ப மறுகறேன்.’’

‘‘எப்படியோ நொந்து நூலாகுங்க. அது உங்க தலைவிதி. உங்களைக் காதலிச்சுத் தொலைச்ச பாவத்துக்கு வாழ்க்கையில் ஒன்னு சேர முடியாம தவியா தவிச்சு நான் செத்து ஒழியறேன். அது என் தலைவிதி. உங்களைக் சொல்லிக் குத்தமில்லை.

அவனோட காலமும் நேரமும் நல்லாயிருக்கு. என்னோட காலமும் நேரமும் என்னைப் பழிவாங்கி என் வாழ்க்கையை வாழ விடாம செய்யுது.''

விருட்டென்று அவள் போய் விட்டாள். ஆனந்தன் சிலை போல அசையாமல் நின்றான்.

# அத்தியாயம் 22

ஏரிக்கரை பிள்ளையாருக்கு நீர் ஊற்றி அபிசேகம் செய்து கொண்டிருந்தாள் கீதா. அவளது மனம் ரணமாக இருந்தது. அரசபட்டினத்தின் திருவிழாவுக்காக வந்திருந்த கீதாவின் சித்தி மகள் கமலா சலசலத்துக் கொண்டிருந்தாள். எப்போதும் அவளுடன் வாயடிக்கும் கீதா தனக்குள் மறுகியபடி பதில் பேசாமல் கடமையே கண்ணாக இருந்ததில் ஆச்சரியமாகி கீதாவை விசித்திரமாக பார்த்து வைத்தாள்.

‘‘நானே. நானா..? யாரோதானான்னு. ஒரு பாட்டு இருக்குது.’’ கீதாவின் வாயைக் கிளறினாள்.

‘‘அதுக்கென்னடி இப்ப.’’ மௌனத்தைக் கலைத்து வெடு வெடுத்து வைத்தாள் கீதா.

"உன்னைப் பார்க்கிறப்ப இதுவும் நீதானா..? வேற யாரோதானான்னு பாட்டுப் பாடத் தோணுது.’’

‘‘தோணும். தோணும்.’’

சலித்துக் கொண்ட கீதா ஏரிக்கரையின் சரிவில் இறங்கி ஏரித் தண்ணீரை குடத்தில் நிரப்பி இடுப்பில் வைத்துக் கொண்டு கரையேறி வந்தாள். அரச மரத்தடியில் சட்டமாக உட்கார்ந்திருந்த பிள்ளையார் ஆனந்தமாக அவளது குடத்து நீரில் நீராடினார். புது வஸ்திரம் உடுத்தி. சந்தன, குங்குமம், திருநீறுடன் பூக்களைச் குடி சர்வாலங்கார பூஷிதராய் இருந்தவரின் முன்னால் இருந்த கல் தீபத்தில் எண்ணை ஊற்றி விளக்கேற்றி கும்பிட்டாள் கீதா. முணுமுணுத்த அவளது வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் மந்திரங்களோ என்று காதைத் தீட்டிக் கொண்டு கவனித்தாள் கமலா. காதில் விழுந்த வார்த்தைகளில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

‘‘உனக்கென்ன பிள்ளையாரப்பா. தினமும் குளிப்பாட்டி அலங்கரிச்சு விட நானிருக்கேன். நீயும் ஜம்முன்னு ரெடியாகி ஏரிக்கரைக்கு வர்ற பொண்ணுகள்ல உங்கம்மா பார்வதி போல எவ இருக்கான்னு தேடி சைட்டடிச்சுக்குட்டு உக்காந்திருக்க. இந்தப் பார்வதி பெத்த மகளைப் பத்தி நீயேன் நினைக்கப் போற.?’’

‘‘அடிப்பாவி. இப்படியாடி சாமி கும்பிடுவ. பிள்ளையாரு சைட்டடிக்கிறாரா..? உருப்படுவியா பொங்கின கமலாவை 'யார் நீ' என்பதைப் போல பட்டுக் கொள்ளாமல் பார்த்து விட்டு

குங்குமத்தையும், திருநீறையும் நெற்றியில் இட்டுக் கொண்டு குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்தபடி நடையைக் கட்டினாள் கீதா.

“என்னடி இப்படி யாரோ போல பார்த்துட்டுப் போற.?”

அரண்டு போன கமலா பூஜைக் கூடையைக் கையில் எடுத்துக் கொண்டு.

“போயிட்டு வரேன் பிள்ளையாரப்பா.” என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு கீதாவை பின் தொடர்ந்து ஓடினாள்.

வேகுவேகு என்று பித்துப் பிடித்தவளைப் போல விரைந்து கொண்டிருந்த கீதாவின் நடை தளர்ந்தது. அவளது பார்வை கூர்மையானது. அங்கே மரத்தடியில் சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருப்பது யார். ? ஆனந்தனா..?

உற்றுப் பார்த்ததில் அது ஆனந்தன்தான் என்று ஊர்ஜிதமானது. கூடவே ஒட்டுப்புல்லைப் போல ஒட்டிக் கொண்டிருக்கும் அன்பழகனும் இருந்தான். மரத்தின் வேரில் கால் நீட்டி உட்கார்ந்து ஆனந்தன் பாடுவதை இரக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

இப்படி இந்த அன்ப பாவமா பார்க்கிறாப்புல என்னத்தை இவன் பாடித் தொலைக்கிறான். கமலாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பக்கத்து மரத்தின் மறைவில் பதுங்கினாள் கீதா.

எதையோ கேட்கப் போன கமலாவை பார்த்து வாயில் ஆள் காட்டி விரலை வைத்து. “உஷ்.” என்று எச்சரித்தாள்.

*“ஓடும் மேகங்களே..!*

*ஒரு சொல் கேளீரோ.*

*ஆடும் மனதினிலே.*

*ஆறுதல் தாரீரோ.”*

ஆனந்தனின் கண்ணில் குரலில் கண்கலங்கி விட்டாள்

கீதா. பெரியம்மாவின் மகளை வினோதமாக பார்த்தாலும் ஆனந்தனின் பாடலின் சோகத்தில் தாக்கப் பட்டவளாக மௌனமானாள் கமலா.

*“நாடாளும் வண்ண மயில்*

*காவியத்தில் நான் தலைவன்..!*

*நாட்டிலுள்ள அடிமைகளில்*

*ஆயிரத்தில் நான் ஒருவன்..!*

*மாளிகையில் அவள் வீடு.!*

*மரக்கிளையில் என் கூடு.!*

*வாடுவதே என் பாடு.*

*இதில் நான் அந்தமான்*

*நெஞ்சை நாடுவதெங்கே கூடும்.?"*

கரகரவென கண்ணிர் விட ஆரம்பித்த கீதாவை திகைப்புடன் பார்த்தாள் கமலா. அந்த பாடலின் ஜீவன் கீதாவுக்கானது என்பதை அவளது இளம் மனம் உணர்ந்து கொண்டது.

*"ஊரெல்லாம் தூங்கையிலே.*

*விழித்திருக்கும் என் இரவு.!*

*உலகமெல்லாம் சிரிக்கையிலே.*

*அழுதிருக்கும் இந்த நிலவு.!*

*பாதையிலே வெகுதூரம்*

*பயணம் போகும் நேரம்*

*காதலை யார் மனம் நாடும்.?*

*இதல் நான் அந்தமான்*

*நெஞ்சை நாடுவதெங்கே கூடும்.?"*

பாடலை நிறுத்திய ஆனந்தன் கைலியை மடித்துக் கட்டியபடி நடந்து விட்டான். பெருமூச்சுடன் எழுந்து நின்று கைலியில் படிந்திருந்த தூசியைத் தட்டி விட்டு சைக்கிளை நகர்த்தப் போன அன்பழகன்.

"பாட்டுக் கச்சேரி முடிஞ்சுருச்சு போல." என்றபடி மரத்தின் மறைவிலிருந்து வெளிப்பட்ட கீதாவைப் பார்த்ததும்.

"அந்தக் கோராமையை ஏம்மா கேக்கறிங்க..? எப்பப் பார்த்தாலும் இந்தப் பாட்டைப் பாடிக்கிட்டே திரியறார்ம்மா. இதை விட்டா யார் அந்த நிலவு. ஏன் இந்தக் கனவுன்னு பாட ஆரம்பிச்சுடறாரு." என்று ஆதங்கப்பட்டபடி நின்று விட்டான்.

‘‘பாருப்பா. அரசபட்டினத்துக்கு வந்த வாழ்வை. புதுப்பாடகர் கிடைச்சிட்டார். ம்ம்ம். நமக்கு என்ன குறை அன்பு.?’’

சிவந்திருந்த கீதாவின் விழிகளை ஆழ்ந்து பார்த்தான் அன்பழகன். அவளது மனதின் குருதி கண்களில் வடிவதைப் போல இருந்தது அவனுக்கு. இரு மனங்கள் தவிக்கும் தவிப்பை அவனால் தாங்க முடியவில்லை.

‘‘அந்த வாத்தி கெட்டிக்காரன்ம்மா. எதை வைச்சு மடக்கனுமோ அதை வைச்சு மடக்கிட்டான்.’’ பொருமினான்.

"ம்ப்ச்... என் விதி அன்பு. வேற என்னத்தைச் சொல்ல. விதி வலியதுன்னுதான் சொல்ல முடியும்.’’

‘‘வாழற வாழ்க்கையில நல்லவனா மட்டும் இருக்கக் கூடாதும்மா. ஒரே சமயத்தில நூறுபேரை பந்தாடறவருதான் ஆனந்தன் சார். அவரையே ஒரு வாக்குறுதியில கட்டிப் போட்டுட்டான்னா இந்தக் காலக் கொடுமைய எங்கே போய் சொல்றது.?’’

‘‘அதைச் சொல்லு.’’

“என்னவோ வாத்தியோட அம்மா வழிப் பாட்டி மேலே உங்கப்பாவுக்கு பாசமாம். சாகக்கிடக்கிறப்ப அந்த பாட்டி பண்ணையாருகிட்ட சத்தியம் கேட்டுச்சாம்.”

“என்னன்னு.?”

“உங்களை சுகுமாறன் வாத்தியாருக்கு கட்டிக் கொடுக்கனும்ன்னு.”

“இது என்ன புதுக்கதை. அன்பு.?”

“இந்தக் கதையைச் சொல்லித்தான் ஆனந்தன். சாரோட மனசை கரைச்சிருக்கான் அந்த சுகுமாறன். அந்த சத்தியத்தைக் காப்பாத்தத்தான் சாரு பெட்டி படுக்கையோட அரச பட்டினத்துக்கு வந்து இறங்கியிருக்காராம். அது நிறைவேறுகிறது ஆனந்தன் சாரோட கையிலதான் இருக்குன்னு முதலைக் கண்ணிர் விட்டா இந்த மனுசன் பாவம் என்ன பண்ணுவார்.? இப்படித்தான் பித்துப் பிடிச்சுப் போய் ஏரிக்கரை மேலே பாட்டுப் பாடிக்கிட்டே அலைவார்.”

அன்பழகன் சைக்கிளை உருட்டியபடி போய் விட்டான். கீதா பதுமைபோல யோசனையுடன் நடந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தையே பார்த்த கமலா.

“சுகுமாறன் உன்மேல ஆசைப்படறாரா..?” என்று பொறாமையுடன் கேட்டு வைத்தாள்.

அவளது பொறாமையை புரிந்து கொண்ட கீதாவுக்கு ஆச்சரியமாகி விட்டது. கமலாவுடன் விளையாடிப் பார்க்க ஆசை கொண்டாள்.

"ஆமாம். என்மேல அவருக்கு ஆசைதான். அதுக்கு என்னாங்கிற..?"

"உனக்கும் அவர்மேல ஆசையா..?"

"ஆமான்னுதான் வைச்சுக்கயேன்.”

“ஊமை போல இருந்துக்கிட்டு கவண்ட்மென்ட் பள்ளிக் கூடத்தில வேலை பாக்கிற வாத்தியாரைக் கட்டிக்கப் போகிற. உங்கப்பாவைப் போல எங்கப்பாவும் ஊர் பண்ணையார்தான். சொத்து சுகம் இருக்கிறவர்தான். நானும் அழகிதான். இருந்து என்ன பண்ண. ? இப்படியாப்பட்ட மாப்பிள்ளையை வளைச்சுப் போட முடியலையே.

“இந்த மாப்பிள்ளை கிடைக்கலேன்னா என்ன. இப்ப பாட்டுப் பாடிக் கிட்டுப் போனவரும் கவர்ண்மெண்ட் வேலை

பார்க்கிறவருதான். அதிலும் சென்ட்ரல் கவர்ண்மெண்டு. அவரை வளைச்சுப் போடு.''

''அய்யே..! யாருக்கு வேணும் போஸ்ட் ஆபிசில வேலை பார்க்கிற மாப்பிள்ளை..? இருபத்தி நாலு மணி நேரமும் ஆபிசே கதின்னு கிடக்கனும். வருசத்துக்கு எட்டு நாள்தான் கேசுவல் லீவு. சனிக்கிழமையும் ஆபிஸ். இழுத்துக்கிட்டுக் கிடந்தாக்கூட மெடிகல் லீவில அனுப்ப மாட்டாங்க. அதுவே வாத்தியார் வேலைன்னு வைய்யி. மணியடிச்சதும் வீட்டைப் பார்த்து ஓடி வந்திரலாம். சனிக்கிழமை லீவு. கால்பரிட்சை, அரைப் பரிட்சைன்னு லீவு, முழுப்பரிட்சைக்கு முழுசா ஒரு மாசம் லீவு. இதுபோக கேசுவல் லீவு, கவர்ண்ட்மெண்ட் லீவு. மெடிகல் லீவு. ஈஎல் லீவுன்னு எம்புட்டு லீவு தெரியுமா..? எனக்கு போஸ்ட் ஆபிஸ்ல வேலை பார்க்கிற மாப்பிள்ளை வேணாம். வாத்தியார் மாப்பிள்ளைதான் வேணும்.''

கமலா விவரித்த தினுசில் அடிப்பாவி என்று முகவாயில் கையை வைத்துத் தன் கவலையை மறந்து நின்று விட்டாள் கீதா.

# அத்தியாயம் 23

*“கற்பூர நாயகியே. கனகவள்ளி.!*

*காளி மகமாயி. கருமாரியம்மா.”*

**கா**லத்தால் அழியாத எல்.ஆர். ஈஸ்வரியின் கணிரென்ற மந்திரக் குரலில் ஒலித்த பாடலில் அரச பட்டினத்தின் அம்மன் கோவில்கள் களை கட்டியிருந்தன. ஒலி பெருக்கியில் ஒலித்துக் கொண்டிருந்த பக்திப் பாடல்கள் சுற்றுப்பட்டி ஊர்மக்களையெல்லாம் அரசபட்டினத்திற்கு இழுத்து வந்து கொண்டிருந்தன. களை கட்டியிருந்த ஊரில் களையில்லாமல் ஆபிசே கதியென்று வேலை பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

அன்பழகன் புதுமாப்பிள்ளை போல பட்டு வேட்டியும் பட்டுச் சட்டையுமாக பரபரப்பாக இருந்தான்.

"திருவிழாவுக்குக் கூட லீவு தரமாட்டேன்னா எப்படி சார்.? உங்களைப் போல நான் தனிக்கட்டைன்னாப் பரவாயில்லை. சாதி, சனம், சொந்த பந்தம்ன்னு இருக்கிற ஊர்க்காரன். புதுசாக் கல்யாணம் கட்டியிருக்கிறவன். அக்கா, தங்கச்சி, மாமனார்,

மாமியார்ன்னு ஒரு படையே திருவிழாவுக்கு வந்து இறங்கியிருக்கு. அட. இவங்களைக்கூட என் ஆத்தா, அப்பன், அப்பத்தா, பெண்டாட்டின்னு வீட்டில இருக்கிறவங்க பார்த்துக்குவாங்கன்னு வையுங்க. என் கொழுந்தியா வந்திருக்கா சார். அவளைப் பார்த்துக்க நான் வீட்டில இருக்கனுமா, வேணாமா..?"

‘‘அதை நான் முடிவு பண்ணக் கூடாது அன்பு.."

‘‘வேற யாரு முடிவு பண்றதாம்.?’’

‘‘உன் சம்சாரம்தான் முடிவு பண்ணனும்."

‘‘கெடுத்தீங்களே காரியத்தை. ஏன் சார். நீங்களும் கல்யாணம் கட்டிக்க மாட்டிங்க.. கட்டிக்கிட்டவன் குடும்பத்திலயும் கலகம் பண்ணுவீங்கன்னா என்னா சார் நியாயம் இது.?’’

‘‘எனக்கு இதுதான் நியாயம். வேலையைப் பாரு."

‘‘லீவு.?"

‘‘மூச். வேணும்னா பெர்மிசன் போட்டுக்க.’’

அன்பழகனுக்கு இவ்வளவு சொன்னால் போதாதா..? காலையில் மெயில் வந்தவுடன் பரபரவென பிரித்து அடித்து

பிரான்ச் ஆபிஸ்களுக்குப் பை கட்டும் வரை ஆபிசில் வளைய வருவான். பிரான்ச் ஆபிஸ்களுக்கான பைகள் நகர்ந்தவுடன் இந்தப் பக்கம் இவனும் பறந்து விடுவான்.

மதியத்திற்கு மேல் பிரான்ச் ஆபிஸ் பைகள் வரும்போது வந்து சேர்வான். மடமடவென வேலைகளைப் பார்த்து மெயிலை அனுப்பியதும் விசிலை அடித்தபடி வீட்டைப் பார்த்து ஓடி விடுவான்.

மற்ற தினங்களில் நேரம் காலம் பார்க்காமல் உழைக்கிறவனிடம் ஆனந்தனால் கண்டிப்பைக் காட்ட முடியவில்லை. அவன் லீவ் போட்டுவிட்டால் புதிய ஆளை வைத்து வேலை வாங்குவது வெகு சிரமமான ஒன்று என்பதால் அன்பழகனை இழுத்துப் பிடிக்காமல் தளர்த்தி விட்டு விட்டான் ஆனந்தன்.

திருவிழாவின் முதல் நாளில் அம்மன்களை ஆற்று மணலில் செய்து ஊர்வலமாக கோவில்களுக்கு எடுத்து வந்தார்கள். அதிகாலையில் அம்மன்கள் கோவிலுக்கு வர. முளைப்பாரி ஊர்வலம் வந்தது. வீட்டுக்குள் படுத்துக் கிடந்த ஆனந்தனை நிரஞ்சன் அனத்தி இழுத்துக் கொண்டு போனதில் அவன் கோவில் திருவிழாவில் கலந்து நின்று வேடிக்கை பார்த்தான்.

மண் சட்டிகளில் வளர்ந்திருந்த முளைப்பாரி பயிரை இளம் பெண்கள் தலையில் சுமந்து வந்தார்கள். அதில் கீதாவும் இருந்ததில் ஆனந்தனின் விழிகள் மின்னின. அவள் ஆனந்தனைப் பார்த்தபடியே மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

மஞ்சள் நிறத்தில் அரக்குசிகப்பு வண்ண கெட்டி ஜரிகை பார்டர் கொண்ட பாவாடையும் அரக்கு வண்ண தாவணியுமாக இருந்தவளின் பாரம்பர்ய அழகில் மெய் மறந்தான். அவளது நீண்ட பின்னலில் சூடியிருந்த மல்லிகைச் சரம். அவனுக்கு தோட்டதது இரவில் முகர்ந்த மல்லிகையின் வாசத்தை நினைவு படுத்தியதில் கிளர்ச்சியுற்றான்.

முளைப்பாரி சட்டிகளை இறக்கி வைத்த பெண்கள் வட்டமாக அதைச் சுற்றி வந்து கும்மியடித்துப் பாடல் பாடினார்கள். கீதாவின் விழிகள் ஆனந்தனையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அன்றைய இரவில் கோவில் வாசலில் பள்ளிக்கூடத்தை ஒட்டிய மைதானத்தில் நாடகத்திற்கான மேடை போடப்பட்டு விடிய விடிய நாடகம் நடந்தது.

மறுநாள் பொங்கல் வைத்து வணங்கினார்கள். அன்று வீடு தோறும் கெடா வெட்டி விருந்து ஆக்கியதில் தன் வீட்டில் கறி விருந்து சாப்பிட வேண்டும் என்று சண்டைபோட்டு ஆனந்தனைத்

தன் வீட்டில் விருந்து சாப்பிட தள்ளிக் கொண்டு போய் விட்டான் அன்பழகன்.

‘‘யாரு..? நம்ம போஸ்ட் மாஸ்டரு பேராண்டியா..?"

அன்பழகனின் அப்பாவைப் பெற்ற பாட்டி கண்களுக்கு மேல் கையை விரித்து மறைத்து அடையாளம் பார்த்தாள்.

"ஆமாம் அப்பத்தா. விருந்து சாப்பிட வந்திருக்கிற மனுசரைப் பயமுறுத்தி விரட்டியடிச்சிராதே.’’ என்றான் அன்பழகன்.

‘‘யாருடா இவன் கூறு கெட்டவனா இருக்கான். சிங்கம் போல வந்து நிக்கிற ஆபிசர நான் ஏண்டா விரட்டப் போறேன். வாங்க சாமி. சுக்கா வறுவலும். கறிக் கோலா உருண்டையுமா விருந்து ஆக்கியிருக்கோம். சாப்பிடுங்க. ஏ புள்ள. இலையைப் போடுதாயி.’’

அன்பழகனின் பாட்டி வாஞ்சையாக பரிமாறினாள். அவள் வெங்கலத் தொண்டையில் பாடக் கூடியவள் என்று சொன்னான் அன்பழகன்.

‘‘பாட்டுப் பாடியே தாத்தாவைத் துரத்தி விட்டிருச்சு. மலேசியாவுக்குப் பிழைக்கப் போறேன்னு ஓடின மனுசன் அங்கேயே ஒரு பாட்டியைக் கட்டிக்கிட்டு செட்டிலாகிட்டாரு.’’

'பாவம் பாட்டி.’ ஆனந்தன் இரக்கப் பட்டான். கறிவிருந்தைச் சாப்பிட்டு வெற்றிலை பாக்கை மென்றபடி ஆபிசிற்கு வந்தவனுக்கு இன்ப அதிச்சி காத்திருந்தது. கீதா நின்றிருந்தாள்.

‘‘மதியச் சாப்பாட்டுக்கு எங்க வீட்டுக்கு வருவீங்களாம். அம்மா அழைக்கச் சொன்னாங்க.’’

அவன் விழியோடு விழி கலந்து சொன்னாள். ‘‘இப்பத்தான் அன்பு வீட்டில கறி விருந்தை ஒருபிடி பிடிச்சுட்டு வர்றேன். தேங்க்ஸ்ன்னு சொன்னேன்னு சொல்லு.’’ என்றான் ஆனந்தன்.

‘‘இப்படிச் சொன்னாத் தப்பிக்க விட்டிருவோம்கிற நினைப்பா..? நடக்காது சாரே. ராத்திரிச் சாப்பாடு எங்க வீட்டிலதான்.' விரலை உயர்த்தி எச்சரித்து விட்டுப் போய் விட்டாள் கீதா.

சுகுமாறனிடம் என்ன சொல்லி சம்மதம் வாங்குவது என்று குழம்பியபடி வீட்டுக்குப் போனவனுக்கு அடுத்த அதிர்ச்சியைத் தந்தான் சுகுமாறன்.

‘‘ஆனந்தா, உனக்கும், எனக்கும் நைட் டின்னர் மாமா வீட்டிலதான். உன்னையும் அழைத்துக்கிட்டு வரனும்னு மாமா ஸ்ட்ரிக்ட்டா சொல்லியிருக்காரு..’’ என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு சொன்னான்.

அப்பாடி என்ற விடுதலையுணர்வுடன் அன்றைய இரவு உணவுக்கு நீலகண்டனின் வீட்டுக்குப் போனான் ஆனந்தன். கூட வந்த சுகுமாறன் முன்னால் சென்றுவிட. இவன் நிதானமாக அந்தப் பெரிய வீட்டின் பாரம்பர்ய அழகை ரசித்தபடி நடந்தான்.

‘‘வாங்கய்யா." வாய் நிறைய வரவேற்றாள் பார்வதி.

சுகுமாறனை கண்டு கொள்ளாமல் ஆனந்தனை மட்டும் அவள் வரவேற்றதில் முகம் சுண்டிப் போனது சுகுமாறனுக்கு. கறிக்குழம்பு, வறுவல் என்று படு சிறப்பாக இருந்த இரவு உணவை ஒரு பிடிபிடித்து விட்டு வீட்டுக்கு வந்த ஆனந்தனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது. படுத்தவன் அசதியுடன் தூங்கி விட்டான்.

அன்று ஞாயிறு என்பதால் அரக்கப் பரக்க எழுந்திருக்காமல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவனை உலுப்பி எழுப்பி விட்டான் நிரஞ்சன்.

சார். கிரௌவுண்டில சிலம்பப் போட்டி நடக்கப் போகுது சார். ஊரே அங்கேதான் இருக்குது. நீங்க என்னடான்னு தூங்கிக்கிட்டு இருக்கீங்க..’’ என்று குற்றம் சாட்டினான்.

‘‘சுகுமாறன் எங்கே..?’’

‘‘அவர் மாடியில தூங்கறார். அவரும் நீங்களும் ஒன்னா..? வாங்க சார்."

நிரஞ்சனின் அன்பில் நெகிழ்ந்த ஆனந்தன் போர்வையை உதறிவிட்டு எழுந்து சோம்பல் முறித்தான். சமையலறைப் பக்கம் நகரப் போனவனின் கைபற்றி நிறுத்தி பிளாஸ்க்கையும், டிபன் கேரியரையும் திணித்தான் நிரஞ்சன்.

‘‘உங்களுக்கும், வாத்தியாருக்கும் காபி, டிபனை கொடுத்து விட்டிருக்காங்க.’’

‘‘யாரு..?’’

"அம்மாதான். வேற யாரு..? உங்களுக்காகத்தான் வாத்தியாருக்கும் சேர்த்து டிபன் காபி கிடைச்சிருக்கு. இல்லேன்னா கண்டுக்க மாட்டாங்க."

‘‘ஏன்ப்பா. சுகுமாறன் உங்களுக்குச் சொந்தக்காரனாச்சே."

"அப்படின்னு அவர்தான் சொல்லிக்கிறார். ஐயோ பாவம்ன்னு சாப்பாடு கொடுத்து விட்டா அதை ஊர் பூராவும் சொல்லி இம்சை பண்ணுவார். அதனாலதான் அம்மா அவருக்கு பச்சைத் தண்ணி கூட குடுக்கக் கூடாதும்பாங்க.’’

'என்னடா இது..?'

திகைப்புடன் குளித்து உடைமாற்றி டிபன் சாப்பிட்டு விட்டு நிரஞ்சனுடன் மைதானத்திற்குப் போனான் ஆனந்தன். மைதானத்தைச் சுற்றி மூங்கில் குச்சிகளால் வேலி கட்டியிருந்தது. மைதானத்தின் ஒரு பக்கம் இருந்த மேடையில் நாற்காலிகள் போடப்பட்டு ஊரின் முக்கியமான பெருந்தனக்காரர்கள் உட்கார்ந்திருக்க மையத்தில் நீலகண்டன் அமர்ந்திருந்தார்.

சிலம்பப் போட்டி ஆரம்பமானது. உள்ளூர் வீரர்களை வென்ற வெளியூர் சிலம்பாட்டக்காரன் மமதையுடன் சிலம்பத்தைச் சுற்றியபடி.

‘‘என்னை ஜெயிக்க அரசபட்டினத்தில் ஒரு ஆம்பளை கூட இல்லையா..?’’ என்று மீசையை முறுக்கியபடி கொக்கரித்தான்.

கோபம் கொண்ட நீலகண்டன் வேட்டியை மடித்துத் தார் பாய்ச்சுக் கட்டுக் கட்டி சிலம்பத்தை எடுக்கப் போனார். தடுத்து சிலம்பக் குச்சியை கையில் எடுத்துக் கொண்ட ஆனந்தன்.

“என்னால் முடியலைன்னா நீங்க களம் இறங்குங்க. நான் இருக்கிறப்ப நீங்க உங்க லெவலை விட்டு இறங்கி சிலம்பாட்டப் போட்டிக்குப் போகக் கூடாது." என்றான்.

நீலகண்டனின் விழிகள் விரிந்தன. பெற்ற மகனைப் போல அவரின் சார்பாக களம் இறங்கியவனைப் பார்த்தவருக்குள் பிரியம் பெருகியது. ஆனந்தன் சிலம்பத்தைச் சுழற்றியபடி மைதானத்தில் குதித்தான். கீதாவுக்குப் பயத்தில் மூச்சுத் திணறியது.

சுகுமாறனும் அங்கேதான் இருந்தான். எவனுக்கு வந்த அறை கூவலோ என்பதைப் போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனை நீலகண்டனும் பார்த்தார். அவர் விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன.

***“மதுரை வீரன்தானே. அவனை உசுப்பி விட்டே வீணே...***

***இனி விசிலு பறக்கும் தானே.***

***என் பேராண்டி மதுரை வீரன்தானே.”***

கூட்டத்திலிருந்த அன்பழகனின் பாட்டி சத்தமாக பாட ஆரம்பிக்க போட்டி களை கட்டியது.

# அத்தியாயம் 24

**கூ**ட்டத்தில் விசில்கள்தூள் பறந்தன.

*“ஏ. சிங்கம் போலே நடந்து வற்றான்.*

*செல்லப் பேராண்டி..! –அவனை*

*சீண்டியவன் தாங்க மாட்டான்*

*உதையில தாண்டி.*

*ஏ. டில்லா டாங்கு டாங்கு*

*சும்மா திருப்பிப் போட்டு வாங்கு*

*ஏ. சிய்யான் சிய்யான் சிலுக்கு*

*இவனை புத்தூருக்கு அனுப்பு.”*

அன்பழகனின் பாட்டியின் பாடலுக்கு கரகாட்டக் குழுவினர்கள் மேளம் கொட்டி, நாதஸ்வரம் ஊதி ஆட ஆரம்பித்ததில் ஆனந்தனுக்கு உற்சாகம் ஏற்பட்டது. அவன் சுற்றிய சிலம்பம் எதிரியை பின்னடைய வைத்தது.

*“ஏ. புலியைப் போல*

*துணிஞ்சவண்டா எங்க பேராண்டி.*

*உங்களை பஞ்சு மிட்டாய் போலே*

*பிச்சு வீசப் போறாண்டி.*

*ஏ. டில்லா டாங்கு டாங்கு.*

*சும்மா திருப்பிப் போட்டு வாங்கு.*

*ஏ. இந்தா. ஏ. இந்தா. ஏ. இந்தா இந்தா..”*

இப்போது கரகாட்டக் குழுவினருடன் அரச பட்டினத்தின் இளைஞர்குழாம் சேர்ந்து கொண்டது. ஆனந்தனின் சிலம்பம் சூறாவளிக் காற்றைப் போல சுழன்று ஆடியது. எதிராளி மிரண்டான்.

*“ஏ. சூறாவளிக் காத்தைப் போல*

*சுழன்று வாராண்டி.*

*அவனை எதுத்து நின்ன சிலம்பக்காரன்*

*மிரண்டு போறாண்டி.*

*ஏ. டில்லா டாங்கு டாங்கு*

*சும்மா திருப்பிப் போட்டு வாங்கு.*

*ஏ. கோவில்பட்டி முறுக்கு*

*சும்மா குனிய வைச்சு முறுக்குடா.*

*டேய்..."*

ஆனந்தனின் சிலம்பம் சுழன்று எதிராளியின் சிலம்பக் குச்சியை பறக்க வைத்தது. கூட்டம் வேலியை உடைத்துக் கொண்டு மைதானத்துக்குள் பாய்ந்தது. ஆனந்தனைத் தோள்களில் தூக்கிக் கொண்டு கூத்தாடியது. நிரஞ்சன் கூட்டத்தின் முன்னிலையில் நண்பர்களுடன் ஆடினான்.

*“ஏ. ஜல்லிக்கட்டுக் காளையைப் போல*

*துள்ளி வர்றாண்டி.*

*எதிரியை பனைமரமா பிடுங்கி*

*இப்ப வீசி விட்டாண்டி.*

ஏ. கும்தலக்கடி கும்மா.

எங்க ஆனந்தன்னா சும்மாவா..?"

அன்பழகனின் பாட்டி ஆரத்தியுடன் பாடியபடி வந்தாள். வெற்றி வீரனாக மேடையேறியவனை வாத்சல்யத்துடன் தழுவிக் கொண்டார் நீலகண்டன். மைதானத்தில் தோற்று நின்றவன் சப்தமிட்டான்.

"இப்பவும் ஜெயிச்சிருக்கவன் அரசபட்டினத்துக் காரனில்ல பண்ணையாரே."

நீலகண்டனின் முகம் இறுகியது. மைக்கைப் பிடித்தவரின் சப்தம் எட்டுத் திசைகளிலும் எதிரொலித்தது.

"எல்லோரும் நல்லாக் கேட்டுக்கங்க. இந்த அரசபட்டினத் தோட மானம் மரியாதையைக் காப்பாத்தினவன் அரசபட்டினத்துக் காரன்தான். என் பெண்ணை அவருக்குக் கட்டிக் கொடுத்து என் மருமகனாக்கிக்கறேன். இப்பச் சொல்லுங்க. ஜெயிச்சது யாரு..?"

கூடியிருந்த கூட்டம் "அரசபட்டினத்துக்காரன்தான்..." என்று குரல் கொடுத்தது.

தன் கழுத்திலிருந்த முகப்பு வைத்தச் சங்கிலியைக் கழற்றி மருமகனாக்குவதற்கான உறுதி மொழியாக ஆனந்தனின் கழுத்தில் போட்டு விட்டார் நீலகண்டன். பார்வதியம்மாள் மகிழ்ந்து போனாள். நிரஞ்சனோ அத்தான் என்று ஆனந்தக் கூத்தாடி விட்டான். கீதாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

‘என்னை விட்டு ஒடிப் போக முடியுமா..?’ என்று அவள் விழிகள் சவால் விட்டன.

‘‘அடிச்சீங்க சார். லக்கி பிரைஸ். அன்பழகன் பாராட்டினான்.

ஆனந்தன் எதையும் பேசவில்லை. திருவிழா முடிந்தது. வந்திருந்த உறவினர் ஒவ்வொருவராக விடைபெற்று அவரவரின் ஊருக்குத் திரும்பி விட. அரசபட்டினம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியது.

ஆனந்தன் அலுவலகத்தில் மும்முரமாக கணக்கு வழக்குகளை சரி செய்தான். ஏனென்று கேட்ட அன்பழகனிடம் மழுப்பினான். அந்த வார இறுதியில் அலுவலகம் முடிந்ததும் வழக்கம் போலக் கூடவந்த அன்பழகனிடம்.

‘‘தலை வலிக்குது அன்பு. ரெஸ்ட் எடுக்கனும். நீ வீட்டுக்குப் போ..’’ என்று சொல்லி அனுப்பி வைத்து விட்டான்.

அவன் முகத்தை உற்றுப் பார்த்த அன்பழகன் என்ன நினைத்தானோ. வழக்கடிக்காமல் போய் விட்டான். வீட்டுக்கு வந்த ஆனந்தன் வீட்டை ஒர்முறை சுற்றிப் பார்த்துவிட்டு பெருமூச்சுடன் பெட்டியை எடுத்துத் தன் துணிகளை அடுக்க ஆரம்பித்தான். சுகுமாறன் வீட்டில் இல்லை. அதிசயத்திலும் அதிசயமாக அப்பா அம்மாவைப் பார்க்கப் போவதாகச் சொல்லிப் போயிருந்தான்.

பெட்டியை மூடிக் கையில் எடுத்துக் கொண்ட ஆனந்தன் வீட்டைப் பூட்டிச் சாவியைக் கையில் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான். இருள் பரவியிருந்த அந்த இரவில் தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். தெருமுனையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர், சிறுமியரில் ஒரு சிறுவனை அழைத்து வீட்டுச் சாவியை அவன் கையில் கொடுத்து.

“பண்ணையார் வீட்டில கொடுத்திருப்பா.” என்றான்.

சிறுவன் ஒடி விட்டான். ஆனந்தனின் முகத்தில் துயரம் கவிந்தது. விடைபெற முடியாத சொந்தங்களை அவனுக்குத் தந்த பண்ணையாரின் வீட்டை திரும்பிப் பார்த்தான். கோவிலைப் பார்க்கும் உணர்வு அவனுக்குள் ஏற்பட்டது. ஊரெல்லையைத் தாண்டிக் காத்திருந்த காரின் பக்கத்தில் போனவனை.

‘‘நினைச்சேன் சார். இப்படித்தான் எதையாச்சும் செய்து வைப்பீங்கன்னு.’’ என்று அன்பழகனின் குரல் தடுத்து நிறுத்தியது.

"அன்பு.’’

‘‘பஸ்ஸில போனா ஊர்க்காரனுக பார்த்துப் புடுவானுகன்னு டாக்ஸியை வரச் சொல்லித் தப்பிக்கப் பார்க்கறிங்க."

‘‘எனக்கு வேற வழி இல்லை அன்பு.’’

‘‘அடப் போங்க சார். நீங்க வேற. அவனவன் அவனோட வழியைத் தேடிப் போயாச்சு. நீங்கதான் அறியாப் புள்ளையா இருந்து தொலைக்கறீங்க.’’

‘‘என்னப்பா சொல்ற..?’’

"நம்ம கீதாம்மாவோட சின்னம்மா பொண்ணுக்கு வாத்திமேல ஒரு கண்ணு.’’

"நிஜமாவா..?’’

"நிஜம்தான் சார். வாத்திக்கும் இது தெரியும் போல. இது கிடைச்சா இது. அது கிடைச்சா அதுன்னு திருவிழாவுக்கு வந்து போகிற பொண்ணு கிட்ட நூல் விட்டுக்கிட்டு இருந்திருக்காரு.’’

“அடப்பாவி..! கீதாவுக்குத் துரோகம் பண்ணினானா..?”

“உங்களை சிலம்பக் குச்சியாலேயே மண்டையில ஒரு போடு போடனும் சார். தேறவே மாட்டிங்களா..?”

“இல்லேப்பா. அவன்தான் பண்ணையாரு, சத்தியம்ன்னு ஏதேதோ சொன்னான்.”

“பண்ணையாரு பணத்தில மட்டுமில்ல. குணத்திலயும் பெரிய மனுசன்தான். அப்படிச் சத்தியம் பண்ணியிருந்தா. ஊரே கூடியிருக்கிற மேடையில உங்களுக்குப் பொண்ணைக் கட்டிக் கொடுக்கப் போறதா சொல்லுவாரா..?”

“அட. ஆமாமில்ல.”

“அதைவிட. அதைக் கேட்டுக்கிட்டு நியாயம் கேட்காம சுகுமாறன் சார் சும்மாயிருப்பாரா..?”

“ஏன்ப்பா கேக்கலை.?”

“சத்தியம் பண்ணியிருந்தாத்தானே கேப்பாரு..?”

“இருந்தாலும் அன்பு. என் நண்பனுக்குன்னு அவன் மனசில நினைச்சிருந்த பொண்ணை நான் தட்டிப் பறிக்க முடியாதுப்பா.”

"அவரே கெட்டி மேளம் கொட்ட நாள் பார்த்து ஊரு பூராவும் பத்திரிக்கை வைச்சுக்கிட்டு இருக்காரு. நீங்க பினாத்தறிங்க.’’

‘‘பத்திரிக்கையா..?’’

"ஆமாம் சார். கீதாம்மா கிடைக்காமாட்டாங்கன்னு தெரிஞ்சதும் அவங்க சின்னம்மா மகளை உஷார் பண்ணிப் பொண்ணு கேட்கிற வரைக்கும் போயிட்டாரு. கமலாம்மா வீட்டில சம்மதமில்லதான். இந்தம்மா கிறுக்குத்தனமா விசப் பாட்டிலை தூக்குனாங்களாம். போகுது கழுதைன்னு சுகுமாறன் சார் வீட்டில சம்பந்தம் பேசி முடிச்சு அடுத்த வாரம் கல்யாணத்துக்கு நாள் குறிச்சு பத்திரிக்கை அடிச்சு சுத்துப்பட்டி ஊருக்கெல்லாம் வைக்க ஆரம்பிச்சிட்டாங்க. நாளைக்கு நம்ம ஊருக்கு பத்திரிக்கை வைக்க வரப் போகிறாராம்."

"அன்பு. என் வயித்தில பாலை வார்த்தப்பா.’’ தோழனைக் கட்டித் தழுவிக் கொண்டான் ஆனந்தன்.

அவனைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் படுத்திய அன்பழகன் பெட்டியை பிடுங்கிக் கொண்டு அவனை வீட்டுக்கு இழுத்துக் கொண்டு வந்தான். வீட்டு வாசலில் கீதா நின்றிருந்தாள். அவளைத் தின்று விடுவதைப் போல பார்த்தான் ஆனந்தன்.

“நண்பனுக்கு வாக்குக் கொடுத்துட்டோம்ன்னு மந்திரிச்சு விட்ட கோழி மாதிரி பம்மிக்கிட்டு இருந்தாரும்மா. மந்திரத்தை பத்தி விட்டாச்சு. இப்ப கொண்டைச் சேவல் போல சிலுத்துக்கிட்டு வந்திருக்காரு. இனி இருக்கிப் பிடிச்சுக்க வேண்டியது உங்க பொறுப்பு.”

அன்பழகன் போய் விட்டான். ஆனந்தனை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் கீதா. விலகாமல் இசைந்து கொடுத்து தழுவிக் கொண்டான் ஆனந்தன்.

மதுரை மாநகரம். ஆனந்தனின் வீடு திருமணக் கோலம் பூண்டிருந்தது. அன்று காலையில் திருமணம் முடிந்த ஆனந்தனுக்கும் கீதாவுக்கும் அன்றைய இரவு முதலிரவு.!

வீடு நிரம்பிய உறவுக்கார ஜனங்களுக்கு அந்த நினைவேயில்லை. ஆனந்தனின் ஒன்று விட்ட அக்காதான் மற்றவர்களின் கண் பார்வையிலிருந்து மறைவாக கீதாவை அழைத்து வந்து ஆனந்தனின் அறையில் விட்டாள். அறை வாசலில் வரிசையாக ஜமுக்காளங்களை விரித்து சொந்தபந்தம் உறங்கிக் கொண்டிருந்தது.

கீதாவை நெருங்கிக் கட்டிக் கொண்டான் ஆனந்தன். மூச்சுக் காற்றின் சப்தம் கூட வெளியில் இருப்பவர்களை எழுப்பிவிடுமோ என பயந்தாள் கீதா.

***"ஆனந்த கீதம்.! உன் கூந்தல்.***

***பூக்கள் தீர்க்குமே. நாணம் தோற்குமே.***

***அடிக்கடி மலர்கொடி நேரம் பார்க்குமே."***

காத்திருக்க முடியாத ஆனந்தன் அவள் காதோரமாக ரகசியக் குரலில் பாடினான். அவள் வெளியில் இருக்கும் உறவினர்களை நினைத்து விலகினாள். அவன் முறைத்தான்.

***"உண்மையில் என்மயில் ஆடும் முன்.***

***என் மழைக்காலம் போய்விடும்.***

***ஆசையாகி விட நேர்ந்திடும்."***

அவன் கோபத்தின் அனலில் மெழுகாய் உருகியவள் சத்தமின்றி பாடினாள்.

***"ராத்திரி அலைகள் ஓயட்டும்.***

*மூத்தவர் தலைகள் சாயட்டும்.*

*தீபத்தின் விழிகள் மூடட்டும்.”*

அவன் கேட்டும் ரகமாக இல்லை. அவளது சேலை பற்றி இழுத்து அடம்பிடித்தான்.

**“ஆடை கொடு. ஆளை விடு.**

**தேகம் கொடு. போதும் விடு.**

**தாகம் ஊறுதே.”**

அவள் மேனியில் ஊறிய அவன் கைகளைப் பற்றித் தடுத்தவள்.

***“வளைக்கரம் ஒலிக்கையில்***

***மானம் போகுதே.”***

என்று எடுத்துக் சொன்னாள். அவன் விடவில்லை. ஏஸி இல்லாத அறையில் அடைக்கப்பட்ட ஜன்னல்களில் அவளுக்கு வியர்த்தது.

***கன்னியின் மேனி வேர்க்குதே.***

*ஜன்னலின் கம்பிகள் பார்க்குதே.*

*பேசும் ஓசை அங்கு கேட்டுமோ.”*

இப்படியொரு முதலிரவில் ஆனந்தன் என்னதான் செய்வான்.? கீதாவின் நினைவு முழுவதும் கதவை ஒட்டிப் படுத்திருந்த உறவினரிடமே இருந்தது. அதைத்தாண்டி ஆனந்தனிடம் வர மறுத்த அவள் நினைவை அவன் பக்கமாக இழுக்க அவன் போராட வேண்டியிருந்தது. அவளை அவன் சத்தமின்றி ஆக்ரமித்ததில் அவள் மெல்ல மெல்ல அவனது அணைப்புக்குள் அடங்கி இசைந்து கொடுக்கலானாள்.

*“திரிகளை விரல்கள் தூண்டுதே.*

*அணைகளை வெள்ளம் தாண்டுதே.*

*ஆசையின் தாகம் தீண்டுதே.”*

அவனது கரகரப்பான கிசுகிசுப்பில் அவளது மேனியில் மோகம் பரவிப் படர்ந்து பற்றிக் கொண்டது.

*“நாணம் வந்து போகின்றது.*

*தீயில் விசம் சேர்கின்றது.*

***கண்கள் மூடுதே.”***

இமைகள் மூடச் சொக்கிப் போனவளின் மீது படர்ந்து பரவியவன்.

***“அணைக்கையில் கவிக்குயில்***

***ஊமையானதே.”***

என்று அவளை ஊமையாக்கி ஒன்ற வைத்தான்.

ஆனந்தனும் கீதாவுமாக இருந்தவர்கள். ஆனந்த கீதமாக அரசபட்டினத்திற்குத் திரும்பினார்கள். சுகுமாறன் அடைக்கலம் கொடுத்ததாக சொல்லிக் கொண்ட வீட்டை கீதாவின் பெயருக்கு மாற்றியிருந்தார் நீலகண்டன். உரிமையுடன் அந்த வீட்டின் மாடிப் படிகளில் கால் பதித்து ஏறி மாடியறையை அவர்களது அறையாக்கிக் கொண்டான் ஆனந்தன். சுகுமாறன் சொந்த ஊருக்கே மாற்றலாகிப் போய் விட்டதாகச் சொன்னான் அன்பழகன்.

‘‘கிளிக்கு கமலாம்மாங்கிற ரெக்கை முளைச்சிருச்சு. பறந்திருச்சு..’’ என்றான்.

ரசித்துச் சிரித்த ஆனந்தனுக்கு நினைத்துப் பார்த்த போது வியப்பாக இருந்தது. அரச பட்டினத்திற்கு வந்த போது அந்த ஊரே அவனுக்கு சொந்த ஊராக மாறும் என்று நினைத்துப் பார்த்தானா..?

விதி வஞ்சனை செய்யாதது. வாழ்க்கையின் திருப்பத்தில் பூங்கொத்தை பரிசளிக்கும் வல்லமை கொண்டது. காத்திருந்தால் காலம் வந்து ஆனந்த கீதம் பாடி நம்மைத் தாலாட்டும்.

# முற்றும்

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

